@NewsRotary /RotaryNewsIndia

ரோட்டரி நியூஸ்

ஏப்ரல் 2019

Vol.1, Issue 11 | Annual Subscription ₹ 420

Rotary



தயாராகும் மாவட்ட தலைவர்கள் (2019-20)

ரஷீதா பகத்

RID C பாஸ்கர், RIDEs பரத் பாண்டியா மற்றும் கமல் சங்வி வரும் வருட ஆளுநர்களுடன் கொல்கத்தாவில் நடைபெற்ற ''திஷா'' பயிற்சி கூடத்தில்.

உள்ளே

12 **கர்நாடகத்தில் ரோட்டரி கட்டித் தந்த அங்கன்வாடிகள்**
RID 3181 அங்கன்வாடிகளை புதுப்பிக்க வேலை செய்து வருவதால் மாநிலம் முழுவதும் உள்ள அங்கன்வாடிகள் துடிப்பாக மாறிவருகின்றன.

20 **ரோட்டரி தொட்டுவிட்டுப் போவதற்கு அல்ல**
கேரளா, வயநாட்டில் நிகழ்ந்த RID 3202 மாவட்ட மாநாட்டைப் பற்றிய ஒரு அறிக்கை.

28 **புதிய வீடுகள் கட்டுவதற்கு பூமி பூஜை**
RID 3181, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக RID 3181 வெள்ள நிவாரண நிதி அறக்கட்டளை மூலம் வீடுகள் கட்டுவதை துவங்கியுள்ளது.

32 **ரூ.40 கோடியில் திட்டங்கள் புதிய RI தலைவர் மலோனி தொடங்கினார்**
தனது சமீபத்திய இந்திய விஜயத்தின் போது, RIPE மார்க் மலோனி கல்கத்தா மகாநகர் ரோட்டரி சங்கத்தின் ஆறு சேவை திட்டங்களைத் தொடங்கிவைத்தார்.

40 **தலைக்கு மேலே கூரை**
கேரளா வெள்ளத்தில் வீடு இழந்த 10 குடும்பங்களுக்கு கொச்சின் ஹார்பர் ரோட்டரி சங்கம் வீடு கட்டித் தருகிறது.

42 **பாரம்பரிய உணவுகள்**
பிராந்திய இந்திய உணவுகளின் நன்மைகளைப்பற்றிய ஒரு புதுமையானஉள்நோக்கு.

52 **கோவளத்தில் ரோட்டரியின் களப்பணி**
சென்னை ECR ரோட்டரி சங்கம் ஒரு கிராமத்தை மேம்படுத்துகிறது.

56 **மோகினியாட்டம்**
கேரளாவின் இந்த அற்புதமான நடன வடிவத்தின் நுணுக்கங்களை ஆராயுங்கள்.



அட்டை: மைசூருக்கு அருகில் உள்ள ஒரு கிராம அங்கன்வாடியில் குழந்தைகள் ஊஞ்சல் ஆடி மகிழ்கின்றனர்.

படம்: கிரண் ஜெஹ்ரா

ரோட்டரி நியூஸ்: மனிதாபிமான நோக்கில் எழுதப்படும் ஒரு ஆதாரக்குறிப்பு

ரோட்டரி நியூஸ் இதழ்களின் அனைத்துப் பதிப்புகளையும் முதல் பக்கத்திலிருந்து கடைசி பக்கம் வரை வாசித்துள் ளேன். கடந்த நான்கு பதிப்புகள் குறிப்பிடத்தக்க வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்று உறுதி யாகக் கூறமுடியும். சமீபத்தில் கொல்கத்தா வில் ஒரு RIPR என்ற வகையில், இந்த மாத இதழ் எனது பேச்சுக்குத் தேவையான அனைத்துப் புள்ளிவிவரங்களையும் உறுதிபடுத்த எனக்கு மிகவும் உதவியது. இந்த இதழ்களை வாசித்தப் பின்பு, ரோட்டரியில் உள்ள நவீன போக்குகள் குறித்து ஒரு முழு-பக்க கட்டுரையே என்னால் எழுத முடியும்.

இந்த இதழ் மிகவும் சுவாரஸ்யமாகவும், படிக்கக்கூடியதாகவும், செய்திகளும் தகவல் செறிந்தாகவும் மாறியுள்ளது. ஒவ்வொரு தலைப்புகளில் கோடிட்டு காட்டவேண்டிய மையக்கருத்தைக் கண்டு கொள்வதால் உங்களுடைய செய்தி அறிவு மிகவும் வலிமையானது என்றே நினைக்கிறேன், இது வாசகர்களாக இருக்கும் ரொட்டேரியன்களுக்கு பிடித்தமானதாக இருக்கும்.

கட்டுரைகளும் புகைப் படங்களும் இந்த மாதஇதழை ரோட்டரி தொடர்பான அனைத்து விஷயங்களுக்கு ஒரு ஆதார வெளியீடாக உருவாக்குகிறது.

அஜய் காலா, RC *ஜெய்ப்பூர் ரவுன்ட் டவுண்* — RID 3054

G *சிங் எழுதிய இனிப்பு இலையுள்ள வேப்பமரம் என்ற கட்டுரை எனக்கு பிடித்திருந்தது. இது போன்ற மனிதர்களைப் பற்றிய சுவாரஸ்யமான கதைகள் வாழ்வை மதிப்புடையதாக மாற்றுகிறது. இது தொடர்பாக, ரோட்டரி நியூஸ் இதழில் மனிதாபிமானத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்படும் கட்டுரைகளை நான் எப்போதும் பார்க்கிறேன், இவை இந்த இதழை சுவாரஸ்யத் துடன் வாசிக்க வைக்கிறது. இன்னும் ஒரு அற்புதமான இதழை வழங்கியதற்கு நன்றி.*

அதுல் பிடே, RC *தானே ஹில்ஸ்* — RID 3142

ரோட்டரி மருத்துவமனை வாப்பிக்கு கிடைத்த ஒரு வரம்

1980 வாப்பி ரோட்டரி சங்கம் ஆரம்பித்த, ரோட்டரி சங்க அறக்கட்டளையால் நடத்தப்படும் மருத்துவமனை, குழந்தைகளுக்கான இருதயஅறுவைசிகிச்சை அளிப்பது என்பது ஒரு நம்ப முடியாத விஷயம். இம்மருத்துவமனையின் இருதய அறுவை சிகிச்சை நிபுணர் Dr கல்பேஷ் மாலிக்கின் சேவைகள் குறிப்பிடத் தக்கது.

இந்த மருத்துவமனை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் இருப்பதை இந்த அறக்கட்டளையின் தலைவர் PRIP கல்யாண் பனார்ஜி நேரடியாக கண் காணிப்பது மேலும் சிறப்பு.

N ஜெகதீசன், RC ஏலுறு — RID 3020

மார்ச் மாத ரோட்டரி நியூஸ் படித்து மகிழ்ந்தேன். குழப்பமான நேரங்களில் சமாதானம் பேசுவது எளிதல்ல; ரோடராக்டர் உறுபினர்களை ரோட்டரியில் சேர ஊக்கப்படுத்துங்கள்; ஜெயஸ்ரீயின் மெலோனியும் சென்னை ரோட்டரி உறுப்பினர்களும்; ரக்ஷிதா எழுதிய வாப்பி ரோட்டரி மருத்துவ மனை போன்ற தலைப்புகள் மிக எழுச்சியாக இருந்தது.

வருடந்தோறும் ரூ.50 கோடியைத் தொண்டிற்காக செலவு செய்யும் அஸ்டர் ஹெல்த்கேர் குழுமத்தின் தலைவர் Dr ஆசாத் மூபேன் அவர்களுக்கு என் வாழ்த்துக்கள்.

டேனியல் சிட்டிலபில்லி, RC களூர் — RID 3201

நன்கொடையளிக்க ரொட்டேரியன்களுக்கு ரவிசங்கர் உந்துசக்தியாக இருக்கிறார்

பெண் குழந்தைக்கு கல்வியளிப்பதன் மூலம் நாம் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கிறோம், அதன் மூலம் நிறைய சமூக பிரச்சனைகளைக் குறைத்து, ஒரு ஆரோக்கியமான சமூகத்திற்கு வழியமைக்கிறது.

நகுஷி அல்லது தோண்டா பற்றி நாம் பேசும்போது, சமூகத்தை நல்லநிலையில் வைக்கக்கூடிய கடினமானப் பணியில் ஈடுபட்டிருக்கும் இந்திய ரொட்டேரியன்களின் மூலம், இது போன்ற பழைமையான மூடநம்பிக்கைகள் அனைத்தையும் நீக்க வேண்டும்.

பிப்ரவரி மாத இதழில் அழகான புகைப்படங்களில் வடகிழக்கு பிராந்திய குழந்தைகளின் புன்னகையையும் மகிழ்ச்சியையும் பார்க்கையில், தனிநபர்கள் கூட செய்வதற்கு அறிய செயல்களைச் சாதிக்க முடியும் என்று நமக்கு நம்பிக்கை அளித்து, ரோட்டரி தனது மனிதநேய சேவையின் மூலம் எழுத்தறிவுக் குறைப்பாட்டை தீர்க்கவும் சமூக பந்தத்தை வலுபடுத்தவும் முடியும் என்பதைக் காட்டுகிறது.

ஆக, புதுப்பிக்கப்பட்ட பேரார்வமும் உற்சாகமும் கொண்டு மனிதநேயத்திற்காக தங்களின் புதிய முயற்சிகளின் மூலம் முன்னேற ரொட்டேரியன்களுக்கு நிறைய ரவிசங்கர்கள் உந்து சக்தியாக இருப்பார்கள். ரவிசங்கர் முன்னு தாரணமாக அமைந்ததற்குப் பிறகு, ரோட்டரி உலகில் குறிப்பாக இந்தியாவில் விருப்பங்கள் பொங்கி பெருகிக்கொண்டே இருக்கிறது. இதுபோன்ற சாதனைக் கதைகள் உண்மையிலேயே எங்களுக்குத் தேவை.

அருண் குமார் டேஷ்
RC பரிபடா — RID 3262

மதுரை இட்லிகளை நீங்கள் சாப்பிடு கையில்... என்ற கட்டுரையில், “உங்கள் தேவைக்கு அதிகமாகப் பணத்தை வைத்திருந்தால், அது விஷமாக மாறி விடும்’’ என்று ரொட்டேரியன் ரவிசங்கர் சொல்கிறார். அவர் கருத்தை நான் முழுமையாக ஆதரிக்கிறேன்.

கடந்த வருடம், நல்ல ரொட்டேரியன்களால் எங்கள் சங்கம், PHF சங்கமாக மேம்படுத்தப்பட்டது, நாங்கள் நன்றாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

A ஈஸ்வரமூர்த்தி, RC திருநெல்வேலி வெஸ்ட் — RID 3212

ரோட்டரியின் அமைதி முயற்சிகள்

அமைதித் திட்டங்களுக்காக அறிஞர்களுக்கு நிதியுதவி செய்யும் உலகம் முழுவதும் இருக்கிற அமைதி மையங்களின் மூலம் ரோட்டரியின் முயற்சிகள் இதழாசிரியர் பக்கத்தில் சரியாகக் குறிப்பிடப்பட்டது போல் பாராட்டுக்குரியது. ரோட்டராக்டர்கள் குறித்து RI தலைவர் பேரி ராஸினின் உரை உண்மையிலேயே ஊக்கம் தருவதாக இருக்கிறது மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் அவர்களின் மதிப்புமிக்க சேவைகள் பாராட்டுக்குரியது.

RID C பாஸ்கர் தனது செய்தியில் குறிப்பிட்ட படி, இந்தியாவிலேயே ‘முழு துப்புரவு நடவடிக்கையை’ செயல்படுத்தும் FST வசதியைக் கொண்ட முதல் நகரம் கருங்குழி என்பதை வாசிக்கப் பெருமையாக இருந்தது.

ரஷீதா பகத் எழுதிய ரோட்டரியின் கதவுகளை அடைக்க வேண்டாம் என்ற கட்டுரை தகவல் கொண்டதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருந்தது. உலகத்துடன் தொடர்பு கொள்ள ஐக்கிய நாடுகளுடன் ரோட்டரி ஒரு இணைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற RIPE மெலோனி அவர்களின் பரிந்துரை ஒரு புதுமையான யோசனை.

ஆஸ்தர் ஹெல்த்கேர் குழுமத்தின் தலைவர் ஆசாத் மூபென் செய்துக் கொண்டிருக்கும் சேவைகளை விவரித்த, பிறருக்கு உதவுதலும் நல்ல பணிகளும் இவரது இரத்தத்தில் ஊறியவை என்ற கட்டுரை மிகவும் ஊக்கம் தருவதாக இருந்தது. கதகளி - கதை சொல்லும் நாட்டியம்; வடகிழக்கு மாநிலங்களுக்கு நம்பிக்கை ஒளி; குஜராத் ரோட்டரி மருத்துவமனையில் குழந்தைகளுக்கு அறுவைசிகிச்சை; உட்பட மற்ற அனைத்து கட்டுரைகளும் வாசிக்க கூடியதாக இருந்தது.

M T ஃபிலிப் RC திருவனந்தபுரம் சப்அர்பன் — RID 3211

RI நடத்தும் அமைதி மையங்கள் காந்திய வழியில் சமாதானத்தை கற்பிக்கிறதா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன். இல்லையெனில் அவர்களின் அணுகுமுறைதான் என்ன. மகாராஷ்டிராவில் இருந்து ஒரு போலீஸ் அதிகாரி இந்த திட்டத்தின் கீழ் உயர் கல்விக்குச் சென்றார். அவரிடம் இருந்து பலவற்றை அறிய நாங்கள் விரும்புகிறோம், இதனைப் பற்றிய ஒரு கட்டுரை பயனுள்ளதாக இருக்கும்.

சனத்ஜெயின், RC ராய்பூர் ஹெரிடேஜ் — RID 3261

பிப்ரவரி மாத இதழில் இன்டர்நேஷனல் அசெம்பிளியைப் பற்றி வாசிக்க அற்புதமாக இருந்தது, அதில் 2019-20 ஆண்டுக்கான உலகை இணைக்கும் ரோட்டரி என்ற மையக்கருத்தை RIPE மார்க் மலோனி வெளியிட்டார் மற்றும் புவியியல் வேறுபாடுகளைக் கடந்து நம் ஒவ்வொருவரையும்; அதாவது நாம் இதுவரை சந்தித்திருக்காத ஆட்கள்; சமூகங்கள், தொழில்முறை வாய்ப்புகள் மற்றும் நமது உதவியை எதிர்பார்ப்பவர்கள் போன்றோரை ரோட்டரி இணைக்கிறது.

“சேவை மூலம் உலக அமைதி’’ என்ற RID C பாஸ்கர் அவர்களின் செய்தியில், “ஒருவரை ஒருவர் தெரிந்துகொள்ளாத போதும், அவர்கள் சந்திக்கவே இல்லாத போதும் உலகத்தில் எப்படி அமைதி இருக்கும்?’’ என்று முன்னாள் கனடா பிரதமரும் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான ரொட்டேரியன் LB பியர்சன் செ ான்னதாகக் குறிப்பிடுகிறார். சமூகப் பணிகளில் ரோட்டரியின் ஈடுபாடு உலகத்தை நெருக்கமாக்க, ரோட்டரியின் உலகளாவியத் தொடர்புகள், ரோட்டரி பவுண்டேஷனில் இருந்து கிடைக்கும் அற்புதமான ஆதரவுடன் ரோட்டராக்ட் சங்கங்கள் மற்றும் மாவட்டங்கள் போன்றவற்றின் மூலமாக இவ்வுலகத்தை ஒரு நல்ல நிலையில் வைக்க உதவுகிறது என்றும் கூறுகிறார்.

நவீன் R கார்க் RC சுணம் — RID 3090

தலைசிறந்த திட்டப்பணிகள்

மேமோகிராபி, எழுத்தறிவு, சுகாதாரம் மற்றும் துப்புரவின் முக்கியத்துவம் குறித்து ஆதிவாசி களுக்கு விழிப்புணர்வு வழங்குதல், ரோட்டராக்ட் மற்றும் இன்டராக்ட் சங்கங்களுக்கு நிதியுதவி செய்தல், சாலையோரக் குறியீடுகளையும் போக்குவரத்து விதிமுறைகளையும் எப்படி கவனிப்பது என்பதைக் கற்றுக்கொடுத்தல், இதுதவிர கும்ப மேளாவின் போது யாத்திரீகர்களுக்கு பல்வேறு வகையான சேவைகளை வழங்குதல் போன்ற அருமையான திட்டப்பணிகளை செயல்படுத்துவதற்கு RC நாசிக் கிரேப்சிட்டி, RID 3030 சங்கத்தை என் சங்கத்தின் சார்பாக நான் பாராட்டுகிறேன்.

சேருகுரி சாந்தாராம், RC நாசிக் ஸ்மார்ட் சிட்டி — RID 3030

இந்த நவீன காலத்திற்கு ஏற்ற வெளியீடுகளில் ரோட்டரி நியூஸ் இதழ் தன்னைத்தானே புதுப்பித்துக் கொண்ட வகை குறித்து உங்களுக்கும் உங்கள் ஆசிரியர் குழுவிற்கும் எனது மனப்பூர்வமான பாராட்டுத்துக்கள். உங்கள் இதழை வாசிக்க ஆவலுடன் இருப்பவர்களைப் போல வழி மீது விழி வைத்து நான் காத்துக் கொண்டிருக்கிறேன்.

சஜனன் K நம்பியார் RC வாபி ரிவர்சைடு — RID 3060

To revert to **English or Hindi** version please mail to us at *rotarynews@rosaonline.org.*

உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்: rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com

Governors Council

RI Dist 2981	DG	S Piraiyon
RI Dist 2982	DG	Nirmal Prakash A
RI Dist 3000	DG	RVN Kannan
RI Dist 3011	DG	Vinay Bhatia
RI Dist 3012	DG	Subhash Jain
RI Dist 3020	DG	Guddati Viswanadh
RI Dist 3030	DG	Rajiv Sharma
RI Dist 3040	DG	Gustad Anklesaria
RI Dist 3053	DG	Priyesh Bhandari
RI Dist 3054	DG	Neeraj Sogani
RI Dist 3060	DG	Pinky Patel
RI Dist 3070	DG	Barjesh Singhal
RI Dist 3080	DG	Praveen Chander Goyal
RI Dist 3090	DG	Dr Vishwa Bandhu Dixit
RI Dist 3100	DG	Deepak Jain
RI Dist 3110	DG	Arun Kumar Jain
RI Dist 3120	DG	Stuti Agrawal
RI Dist 3131	DG	Dr Shailesh Palekar
RI Dist 3132	DG	Vishnu S Mondhe
RI Dist 3141	DG	Shashi Sharma
RI Dist 3142	DG	Dr Ashes Ganguly
RI Dist 3150	DG	Ramesh Vangala
RI Dist 3160	DG	Konidala Muni Girish
RI Dist 3170	DG	Ravikiran Janradan Kulkarni
RI Dist 3181	DG	Rohinath P
RI Dist 3182	DG	Abhinandan A Shetty
RI Dist 3190	DG	Suresh Hari S
RI Dist 3201	DG	A Venkatachalapathy
RI Dist 3202	DG	Dr E K Ummer
RI Dist 3211	DG	E K Luke
RI Dist 3212	DG	K Raja Gopalan
RI Dist 3231	DG	C R Chandra Bob
RI Dist 3232	DG	Babu Peram
RI Dist 3240	DG	Dr Sayantan Gupta
RI Dist 3250	DG	Kumar Prasad Sinha
RI Dist 3261	DG	Nikhilesh M Trivedi
RI Dist 3262	DG	Bhabani Prasad Chowdhury
RI Dist 3291	DG	Mukul Sinha

Board of Permanent Trustees & Executive Committee

PRIP	Rajendra K Saboo	RI Dist 3080
PRIP	Kalyan Banerjee	RI Dist 3060
RIPN	Sushil Gupta	RI Dist 3011
PRID	Sudarshan Agarwal	RI Dist 3011
PRID	Panduranga Setty	RI Dist 3190
PRID	Ashok Mahajan	RI Dist 3141
PRID	Yash Pal Das	RI Dist 3080
PRID	Shekhar Mehta	RI Dist 3291
PRID	P T Prabhakar	RI Dist 3232
PRID	Dr Manoj D Desai	RI Dist 3060
RID	C Basker	RI Dist 3000
TRF Trustee	Gulam A Vahanvaty	RI Dist 3141
RIDE	Dr Bharat Pandya	RI Dist 3141
RIDE	Kamal Sanghvi	RI Dist 3250

Executive Committee Members (2018–19)

DG Rajiv Sharma Chair – Governors Council	RI Dist 3030
DG Pinky Patel Secretary – Governors Council	RI Dist 3060
DG Subhash Jain Secretary – Executive Committee	RI Dist 3012
DG A Venkatachalapathy Treasurer – Executive Committee	RI Dist 3201
DG Shashi Sharma Member – Advisory Committee	RI Dist 3141

ROTARY NEWS / ROTARY SAMACHAR

Editor	Senior Assistant Editor
Rasheeda Bhagat	Jaishree Padmanabhan

Send all correspondence and subscriptions to

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers, 34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India. Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website : www.rotarynewsonline.org

Printed by P T Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by P T Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.

பெண்களைக் கொண்டாடுகிறோம், ஆனால்...

அண்மையில் கொண்டாடப்பட்ட உலக மகளிர் தினம் பல உணர்வுகளை விட்டுச் சென்றிருக்கிறது. அதில் நெஞ்சைத் தொட்ட ஓர் அறிக்கை: நான் எனது துண்டிக்கப்பட்ட காலுடன் எவரெஸ்ட் சிகரத்தை எட்டவில்லை. என் மனம், எண்ணம் ஆகியவற்றைக் கொண்டுதான் சாதித்தேன்-இப்படிக் கூறுபவர் அருணிமா சின்ஹா. ஒரு காலை இழந்த பிறகும் சிகரத்தை எட்டிய முதல் பெண் அவர் தான். அவரது அறிக்கையில் கவனிக்கபட வேண்டியது ஒன்றுண்டு. "நமது பலத்தை மட்டுமே கவனத்தில் கொள்ள வேண்டும். குறைபாடுகளை அல்ல" என்பது தான் அந்த அழகான செய்தி.

உலகின் வளர்ந்த நாடுகளிலிருந்து வரும் தகவல்களும் இரு வகைகளாக இருக்கின்றன. பிரிட்டனின் செல்வாக்கு மிக்க இயக்குநர்கள் நிறுவனத்தின் தலைவியாக இருக்கும் சார்லே வாலர் (Charlotte Valeur) அங்குள்ள பெரிய நிறுவனங்கள் பெண்களைப் பாரபட்சமாகக் கருதுவதைக் கண்டிக்கிறார். அந்த நிறுவனங்களில் பெண்களும் இனச் சிறுபான்மையினரும் இயக்குநர்களாகச் சேருவதைத் தடுக்கின்றன. அதைப் பற்றிக் குறிப்பிட்ட வாலர், அப்படிச் செய்வது கடினமாக இருக்குமா? அதெல்லாம் பொய். அப்படியெல்லாம் கிடையாது என்கிறார்.

ஃபைனான்சியல் டைம்ஸ் பங்குச் சந்தைக் குறியீட்டின் படி (FTSE) கிடைத்துள்ள புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. அதில் 250 கம்பெனிகளின் போர்டுகளில் பெண்களின் எண்ணிக்கை 22.8 சதவீதத்திலிருந்து 23.7 சதவீதமாக உயர்ந்துள்ளது. ஆனால், சுமாராகச் செயல்படும் 100 கம்பெனிகளில் 27.7 சதவீதம் முதல் 29 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இத்தாலியில், ஓர் அரசியல் கட்சி தனது பிரசுரங்களில் பெண்களைக் கவர்ச்சியாகச் சித்திரித்ததை பெண்கள் கடுமையாகக் கண்டித்துள்ளனர். ஒரு புறம் பெண்கள் வாழ்க்கையிலும் குடும்பத்திலும் இயல்பான பங்களிப்பைச் செலுத்துகிறார்கள் என்று போற்றி விட்டு, இப்படியா செய்வது என அவர்கள் சாடினர். அதே சமயம் எல்லோரும் எதிர்பார்த்த படி மூன்று பெண் அமைச்சர்களும் இதற்குக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் நியூசிலாந்தில் உள்ள மசூதியில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல் குறித்து அந்நாட்டுப் பிரதமர் ஜசிந்தா ஆர்டன் அமைதியாகவும், உறுதியாகவும் கூறியுள்ளது அனைவரது நெஞ்சையும் கவர்ந்துவிட்டது.

ஆண்கள் தான் தலைமைத் திறனுள்ளவர்கள் என்று கூறப்படும் இந்த உலகத்தில் ஜசிந்தா துணிவுடனும் கூறியுள்ளார்.

நாம் (நியூசிலாந்து) பன்முகத் தன்மையுள்ள, அன்பான, அமைதியான, பல தரப்பட்ட காப்பவர்களாக, தேவைப்படுவோருக்கு அடைக்கலம் அளிப்போராக இருக்கிறோம். தீவிர வாதிகள் செயலைக் கடுமையாகக் கண்டிக்கிறோம் என்று கணீரென்று பேசியிருக்கிறார். இதைக் கேட்டு ஈர்க்கப்பட்ட மக்கள் அனைவரும் முஸ்லிம் சமுதாயத்தினருக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இந்தியாவில் பெண்களின் உரிமைகள் ஆணாதிக்கத்துக்கு உட்பட்டே இருக்கின்றன. ஒரு புறம் சீதாதேவி, துர்கை ஆகியோரைக் கடவுளராக வணங்குகிறது. இங்கே பெண்கள் துன்புறுத்தல், அச்சுறுத்துதல், அவமதித்தல், ஏன் வரதட்சிணை கொடுமையில் உயிரோடு எரிப்பது ஆகியவையும் நடைபெறுகின்றன. நாட்டின் நெருக்கடி நிலையில் மனித உரிமைகள், சுதந்திரம் நசுக்கப்பட்டன. ஆனால், அவை மீட்டெடுக்கப்பட்டதை அடுத்து அவற்றுடன் மகளிர் உரிமைகள், பாலின பாரபட்சம் ஆகிய பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் கவனம் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் 42 ஆண்டுகள் கழித்து நாம் முன்னேற்றம் கண்டுள்ளோம். ஆனால், எவ்வளவு தூரம்?

இனிமேல், முஸ்லிம் ஆண் முத்தலாக் சொல்லிவிட்டு மனைவியைக் கைவிட முடியாது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்து சபரிமலைக்கு எல்லாப் பெண்களும் சென்று வழிபடலாம் என்ற நிலை உருவாகியுள்ளது.

ரோட்டரியே மிகத் தாமதமாகத்தான் பெண்களை உறுப்பினர்களாக்கியது. அதுவும் அமெரிக்காவின் உச்ச நீதி மன்ற உத்தரவை அடுத்து தான் 1987ம் ஆண்டு தான் நடந்தது. ஆனால், இந்தியா 1950ம் ஆண்டு எடுத்த முயற்சி பாராட்டத்தக்கது. அப்போது நடந்த ரோட்டரி சங்க சட்ட விதிகள் கூட்டத்தில் அகமதாபாத் ரோட்டரி சங்கம் ரோட்டரி சட்டத்தில் உள்ள 'ஆண்கள் மட்டும்' என்பதை நீக்கும்படி வலியுறுத்தியது. ஆனால், அந்த தீர்மானம் டெட்ராய்டு நகரில் நடந்த Council on Legislation நிராகரித்து விட்டது. எனினும் 1977ம் ஆண்டும் இந்த முயற்சி தொடர்ந்தது. அப்போது, அதை ஏற்று அமெரிக்காவின் ரோட்டரி சங்கம் பெண்களை உறுப்பினர்களாகச் சேர்த்தது. ஆனால், நீக்கிவிட்டது. பெண்களை நீக்குவதற்காகவே உறுப்பினர்களாக்கியதோ என்னவோ! 10 ஆண்டுகள் கழித்து அமெரிக்காவின் உச்சநீதிமன்றம் பெண்களுக்கு ஆதரவான தீர்ப்பை அளித்தது. தற்போது, அதில் முன்னேற்றம் ஏற்பட்டு, RI அமைப்பின் மூத்த தலைவரின் அரிய முயற்சியால் அதிகமான பெண்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சக்கரம் சுழல்கிறது! பிறகு சந்திப்போம்!

ரஷீதா பகத்



பச்சிளங் குழந்தைகளின் உயிர்காக்கும் ரோட்டரி

BE THE INSPIRATION

அன்பார்ந்த ரொட்டேரியன்களே,

ஒவ்வொரு இரண்டு நிமிடங்களுக்கு உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் ஒரு பெண் கர்ப்பம் மற்றும் பிரசவம் தொடர்பான தடுக்கக்கூடிய பிரச்சனைகளால் இறக்கிறாள். குழந்தை பிறந்த ஆறு வாரங்களுக்குள் தாய் இறந்தால் குழந்தை இறப்பதற்கு வாய்ப்பு அதிகம், அதேவேளை தாய் பிழைத்துவிட்டால் குழந்தை இறப்பதற்கான வாய்ப்புக் குறைவு. ரோட்டரியின் தலைவராக உலகம் முழுவதும் பயணம் சென்றிருக்கிறேன் அவர்களுடைய குடும்பங்களை நான் சந்தித்திருக்கிறேன் இவை வெறும் வருத்தம் தரும் புள்ளிவிவரங்கள் மட்டுமல்ல. ஆனால் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் உதவ தங்களையே அர்ப்பணித்துக் கொண்டவர்களையும் நான் சந்தித்திருக்கிறேன் - அவர்களால் தான் நம்பிக்கையுடன் இருக்கிறேன். அவர்களில் நிறையபேர் ரொட்டேரியன்கள் என்பதை நினைத்து நான் பெருமிதம் கொள்கிறேன். ரோட்டரியில் ஏப்ரல் மாதம் தான் பிரசவம் மற்றும் குழந்தை ஆரோக்கியத்திற்கான மாதம் அதனால் ரொட்டேரியன்கள் செய்து கொண்டிருக்கிற சில விஷயங்களை உங்களிடம் பகிர்ந்துகொள்ள இது தான் சரியானத் தருணம் இவை உங்களுக்கும் பெருமிதம் கொடுக்கும்.

கடந்த இலையுதிர் காலத்தில் லாட்வியா நாட்டில் ஜெகப்பில்ஸ் நகரத்தில் உள்ள ஒரு மருத்துவ மனைக்குச் சென்றேன். அது ஒரு நவீன மருத்துவமனை அங்கிருக்கும் மருத்துவர்களும் செவிலியர்களும் அக்கறையும் அர்ப்பணிப்பும் திறனும் கொண்டவர்கள். அவர்களின் கடின முயற்சியையும் மீறி பிரசவ கால மரண விகிதம் அதிகமாக அப்படியே இருந்துகொண்டிருந்தது அவர்களின் கட்டுப்பாட்டையும் மீறி அத்தியாவசியமான நோய் கண்டறியும் உபகரணம் மற்றும் இன்குபேட்டர் போன்ற அடிப்படையான பொருள்களின் குறைபாடு போன்ற காரணி தான் இதற்குக் காரணம்.

ரோட்டரியின் சேவை இந்த இடத்தில் தான் தேவை. மருத்துவமனைக்குத் தேவையானவற்றை வழங்க ஒரு உலகளாவிய மானியத்திற்கு உலகம் முழுவதிலும் உள்ள இருபத்தியொரு சங்கங்கள் ஒன்றாக இணைந்திருக்கிறது. செப்டம்பர் மாதத்தில் பிரசவ வார்டில் நுழைந்தபோது அதிநவீன உபகரணத்தை நான் பார்த்தேன் அங்கே நான் சந்தித்த நோயாளிகள் அவர்களுக்கு தேவையான சிகிச்சையை பெற்றுக்கொண்டிருந்தார்கள் - இதுதான் உலகத்தில் உள்ள ஒவ்வொரு தாயும் சேயும் பெறவேண்டியது.

அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட பச்சிளம் குழந்தைகளுக்கான அவசரகால சிகிச்சைப் பிரிவில் ஆச்சரியப்படும் அளவில் அதன் திறனை அதிகரிக்கும் ஒரு உலகளாவிய மானியத் திட்டப்பணியில் பிரேசில் நாட்டில் உள்ள சங்க உறுப்பினர்கள் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த சக ரொட்டேரியன்களுடன் இணைந்து பணியாற்றினர். ஒவ்வொரு வருடமும் அதிகளவு பச்சிளம் குழந்தைகளின் உயிர்களைக் காக்க புதிய இன்குபேட்டர்கள் மானிட்டர்கள் மற்றும் இதர உபகரணங்களை உள்ளூர் மருத்துவமனைக்கு வழங்கியுள்ளனர்.

மங்கோலியா நாட்டில் நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த தொழிற்பயிற்சிக் குழு மருத்துவர்களுக்கும் செவிலியர்களுக்கும் அவசர காலவைத்திய முறைகளைக் கற்றுத்தந்தது. செவிலியர்களுக்கு நவீனகால சிறந்த நடைமுறைகளைப் பயிற்றுவிக்க ஒரு பயிற்சித் திட்டத்தை அமைத்துத் தந்தனர். மேலும் நன்கு ஆராய்ந்து வட்டாரக் கலாச்சாரத்திற்குப் பொறுத்தமான பிரசவக் கையேட்டை உருவாக்கினர். மங்கோலியாவிற்கு இந்தக்குழு முதலில் போன 2013 ஆண்டிற்கும் 2017 ஆண்டிற்கும் இடையே இந்த நாட்டில் 1,000 பிரசவங்களில் பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம் 11.2 சதவீதத்திலிருந்து 9.1 சதவீதமாகக் குறைந்திருக்கிறது மேலும் பிரசவக்கால மரணமும் குறைந்திருக்கிறது.

மாற்றத்திற்கான திட்டப்பணி என்று நான் பேசும் போது இதைத் தான் குறிப்பிடுகிறேன் மேலும் இதைதான் ரொட்டேரியன்களும் சிறப்பாகச் செய்கிறார்கள். உலகளவில் பரந்துவிரிந்த நம் தொடர்புகள் சமூகத்திற்கு மிக அவசியமான தேவை என்ன என்பதை நேரடியாகத் தெரிந்து கொள்ளும் அளவுக்கு சமூகத்துடன் கலந்திருப்பது; எண்ணற்ற திறன்களும் தொழில்களும் செய்பவர்கள் அடங்கிய நமது நிபுணத்துவம் போன்றவற்றின் மூலம் ஈடுஇணையற்ற விதத்தில் நம்மால் சேவை செய்யமுடிகிறது. நமது உதவியை அதிகமாக எதிர்பார்ப்பவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் உந்துசக்தியாக நம்மால் இருக்க முடியும்.

பேரி ரஸின்
தலைவர், ரோட்டரி இண்டர்நேஷனல்

தாய் சேய் நலம்

அன்புள்ள ரோட்டரி உறுப்பினர்களே,

பொது சுகாதாரம் என்பது தாய் மற்றும் குழந்தையின் உடல் நலத்தில் கவனம் செலுத்தும் நடைமுறையாகும். அத்துடன் தொற்று மற்றும் நோய்கள் நேராமல் தடுப்பதும் ஆகும். உலக அளவில் குழந்தைகள் பிறக்கும்போது நேரும் தாய் சேய் மரணத்தில் 22 சதவீதம் இந்தியாவில் ஏற்படுகின்றன என்று உலக சுகாதார நிறுவனம் (WHO) கூறுகிறது. அது மட்டுமின்றி, கருவுறும் போதே நோய் ஏற்படுவதும் அதிகம் என்கிறது. இது தொடர்பாகச் சில தகவல்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்:

12 நிமிடத்துக்கு ஒரு தாய் பிரசவத்தின் போது இறந்து போகின்றனர். மூன்று லட்சம் குழந்தைகள் பிறந்த நேரத்தில் இறந்து விடுகின்றன. 12 லட்சம் குழந்தைகள் தாய்மார்களின் முதல் பிரசவத்தில் பிறக்கும்போதே இறந்து விடுகின்றன. சிசு மரணம் பெரிய பிரச்சினையாகியுள்ளது. இன்றைக்குப் பெரும்பாலான குழந்தைகள் சிசேரியன் சிகிச்சை மூலமாகவே பிறக்கின்றன. பெண்கள் கருவுறும் காலத்தில் முறையாக மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டாலும் 14, 15 சதவீதம் பேருக்கு சிசேரியின் முறை தான் தேவைப்படுகிறது.

ஆண்டுக்கு 52 லட்சம் பேருக்கு சிசேரியன் சிகிச்சை மூலம் பிரசவம் நடத்தப்படுகிறது. நமக்கு 2 லட்சம் மகப்பேறு மருத்துவ நிபுணர்கள் தேவைப்படுகிறார்கள். ஆனால், தற்போது ஐம்பதாயிரம் மகப்பேறு மருத்துவ நிபுணர்கள் மட்டுமே இருக்கிறார்கள். அவர்களில் பலர், பெரிய ஊர்களில் வசிக்கிறார்கள். நாடு முழுவதும் 60 சதவீதம் பிரசவங்கள் கிராமங்களில் தான் நிகழ்கின்றன. ஒரு காலத்தில் தாதிகள் பணி செய்யும் முறை இருந்தது. இப்போது குறைந்துவிட்டது.

தாய்-சேய் உடல் நலத்தில், Dr அபய் பாங், Dr ராணி பாங் ஆகிய தம்பதியைக் குறிப்பிட்டாக வேண்டும். வடகிழக்கு மகாராஷ்டிரம் கட்சிரோலி மாவட்டத்தில் உள்ள பழங்குடி மக்களின் கல்வி, சுகாதாரம், உடல் நலம் ஆகியவை மேம்படுவதற்காக அரும்பணியாற்றி வருகிறார்கள். கட்சிரோலி மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் ஒன்றாகும். அங்கு பழங்குடியினப் பெண்களில் 92 சதவீதம் பேருக்கு மகப்பேறு நலக் குறைபாடு, சத்துக் குறைபாடு, தொற்று, சீரற்ற கருவுறுதல் ஆகியவை காணப்படுகின்றன. சிலருக்குப் பால்வினை நோயும் இருப்பது தெரியவந்துள்ளது. அந்த மாவட்டத்தில் 58 கிராமங்களில் நிமோனியா நோய் அப்பகுதியின் குழந்தைகளைக் கொல்லும் நோய் என்பது தெரியவந்துள்ளது.

இந்தியாவில் தாய்மார்களும் கைக்குழந்தைகளும் சத்துக் குறைபாடு, தொற்று மற்றும் சீரற்ற கருவுறுதல் ஆகியவற்றால் பாதிக்கப்படுகிறார்கள்.

வீட்டிலேயே குழந்தை பெறுவோருக்காக நவீன வீட்டுப் பிரசவ நலத் திட்டத்தை டாக்டர் அபய் பாங் உருவாக்கியுள்ளார். அதன்படி எந்தக் கிராமமாக இருந்தாலும், கருவுறும் பெண்களை முறையாகப் பரிசோதிப்பது குறித்த தீவிரப் பயிற்சி அங்குள்ள திருமணம் ஆன பெண்களுக்கு அளிக்கப்படுகிறது. கருவுற்ற பெண்ணின் உடல்நலன், நிபுணர்களின் மேற்பார்வையில் செய்யப்பட வேண்டிய தேவைகள் பிறக்கும் குழந்தைக்கும் தாய்மாருக்கும் அவ்வப்போது அளிக்கப்பட வேண்டிய மருந்துகள் ஆகியவற்றில் பயிற்சி தரப்படும். அவ்வாறு பயிற்சி பெறும் பெண்கள் உடல் நலத் தூதர் (AROGYADOOT) என அழைக்கப்படுகிறார். குழந்தைகளுக்கு ஊசி குத்துவதற்கான பயிற்சியும் அந்தப் பெண்களுக்கு அளிக்கப்படும். வீட்டுப் பிரசவ நலத் திட்டம் (HBNC) கட்சிரோலி மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் மிக வெற்றிகரமாகச் செயல்படுகிறது. அதன் விளைவாக சிசு மரணம், பேறுகால மரணங்கள் கணிசமாகக் குறைந்துவிட்டன.

டாக்டர் பாங்க் தம்பதியின் வெற்றிக் கதை நம்மை வெகுவாக ஈர்த்துள்ளது. இந்நிலையில், நம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்தில் வீட்டுப் பிரசவ நலத் திட்டம் குறித்த விழிப்பை ஏற்படுத்த வேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது. சிறிய முயற்சி என்றாலும் சரியான பாதையில் செல்லும் நகர்வாக உள்ளது. இதன் மூலம் ஆயிரக் கணக்கான தாய்மார்களும் குழந்தைகளும் காப்பாற்றப்படுவர்.

உத்வேகத்துடன் இருங்கள், ஆரோக்கிய உலகத்துக்காக மக்களுடன் இணையுங்கள்.

C பாஸ்கர்
இயக்குநர், ரோட்டரி இன்டர்நேஷனல்.

District Wise TRF Contributions as on February 2019

(in US Dollars)

District Number	APF	PolioPlus	Other Restricted	Endowment Fund	Total Contributions	EREY Donors (in numbers)	EREY %
India							
2981	30,750	4,543	0	8,000	43,293	196	4.3
2982	43,548	5,394	0	243	49,185	267	9.3
3000	11,357	1,000	72,766	37,854	122,976	19	0.4
3011	63,915	5,668	26,453	19,930	115,966	113	3.4
3012	65,770	150	290,759	8,800	365,480	100	3.0
3020	14,850	70,398	2,625	5,000	92,873	57	1.5
3030	14,099	0	0	0	14,099	6	0.1
3040	2,519	0	21,851	0	24,370	3	0.1
3053	45,557	0	0	0	45,557	16	0.6
3054	(17,779)	0	116,413	0	98,635	32	0.6
3060	8,000	1,126	145,229	103,565	257,919	589	14.3
3070	81,732	300	2,236	0	84,268	280	9.7
3080	77,058	13,623	15,657	5,000	111,338	60	1.9
3090	32,641	0	0	0	32,641	84	4.2
3100	21,795	475	0	0	22,270	82	4.9
3110	24,920	2,630	33,990	0	61,540	42	1.1
3120	59,103	0	217,897	0	277,001	59	1.9
3131	247,138	20,185	206,297	33,203	506,823	732	14.3
3132	10,202	310	16,059	60,000	86,571	21	0.6
3141	459,028	10,883	805,554	26,286	1,301,751	567	11.3
3142	256,263	75	(438)	0	255,901	499	15.8
3150	71,968	2,360	61,487	313,467	449,281	481	13.9
3160	61,499	1,580	0	8,571	71,651	126	5.2
3170	61,927	2,944	38,331	0	103,202	296	5.6
3181	76,136	938	0	103	77,176	294	9.8
3182	63,838	100	11,367	0	75,305	269	8.6
3190	70,782	4,197	13,680	1,449,359	1,538,018	506	10.6
3201	47,491	9,737	181,015	0	238,244	131	2.5
3202	21,662	27,612	35,563	0	84,837	49	1.0
3211	36,700	2,423	0	1,515	40,638	175	4.0
3212	88,528	6,530	5,250	67,002	167,309	105	2.7
3231	24,222	2,480	4,286	6,528	37,516	223	7.5
3232	109,637	1,119	130,889	1,000	242,646	151	3.5
3240	53,275	421	525	0	54,221	99	3.4
3250	21,151	1,834	11,216	0	34,201	43	1.2
3261	11,718	1,100	(1,492)	2,000	13,327	16	0.6
3262	27,144	1,000	900	5,213	34,257	99	3.0
3291	100,123	0	80,328	51,800	232,251	206	5.7
India Total	**2,500,267**	**203,136**	**2,546,695**	**2,214,437**	**7,464,536**	**7,093**	**5.1**
3220 **Sri Lanka**	72,693	2,725	12,626	7,000	95,044	131	7.3
3271 **Pakistan**	34,444	27,799	2,275	0	64,518	26	1.9
3272 **Pakistan**	19,160	2,141	0	0	21,301	26	0.9
3281 **Bangladesh**	112,847	2,900	48,132	16,506	180,385	185	3.4
3282 **Bangladesh**	48,833	1,410	0	3,000	53,243	126	3.1
3292 **Nepal**	196,277	12,711	95,282	0	304,271	308	7.1
South Asia Total	**2,984,521**	**252,822**	**2,705,010**	**2,240,943**	**8,183,297**	**7,895**	**4.9**
World Total	**73,747,545**	**18,854,105**	**11,785,613**	**17,553,634**	**121,940,897**		

Source: RI South Asia Office

NiveshGuru™
SAMPATTI KI UNATTI

GROW YOUR WEALTH

NiveshGuru, a one-stop solution for all your investment needs.

Nivesh Guru Advisors Private Limited
68-B, Nariman Bhavan, Nariman Point, Mumbai - 400021

+91 22 2288 0808 info@niveshguru.in www.niveshguru.in

கர்நாடகத்தில் ரோட்டரி கட்டித் தந்த அங்கன்வாடிகள்

கிரண் ஜெஹ்ரா

கர்நாடக மாநிலம் கபினி காட்டுப் பகுதியில் மேடு பள்ளமாக இருந்த சாலையில் ஒன்றரை மணி நேரம் பயணம் செய்து மைசூருக்கு 60 கி.மீ. தொலைவில் குரும்பர் இனப் பழங்குடியினர் வசிக்கும் பிரம்மகிரி ஹட்டியை அடைந்தோம். அந்த கிராமத்தில் பல குடிசைகள், தற்காலிக கூடாரங்களைப் போன்ற குடியிருப்புகள் ஆகியவற்றுக்கு இடையில் புதுப்பிக்கப்பட்ட அங்கன்வாடி உள்ளது. நன்றாகக் கட்டப்பட்டு புதிதாக சுண்ணாம்பு அடித்து ஜோராகத் தோற்றமளித்தது. அருகே தென்னந்தோப்பு. அங்கே சின்னஞ்சிறுவர்கள் வட்டமாக ஓடியபடி உற்சாகமாக விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்தோம்.

RID 3181 மாவட்டத்தின் கீழ் RC மைசூர் மிட் டவுண் சேர்ந்தவர்கள் அந்த இடத்திற்குச் சென்றதும் குழந்தைகள உற்சாகமாக எங்களை அணுகி கைகளைத் தட்டி மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டனர். அங்கிருந்தவர்களுக்கு எல்லாக் குழந்தைகளின் பெயர்களும் நன்கு தெரியும். நாங்கள் அங்கன்வாடிக்கு வந்ததைக் கூட கவனிக்காமல் நந்தா என்ற மூன்று வயதுச் சிறுவன் வகுப்பறையிலிருந்து பாலைக் குடித்தபடியே வெளியே வந்தான். ரோட்டரியினரைப் பார்த்ததும் உற்சாகம் ஏற்பட்டு, காலை வணக்கம் என்றான்.

ஆறு மாதம் முன்பு அந்த அங்கன்வாடியில் ஈ, காக்கை இல்லை. தனித்து விடப்பட்டது போல இருந்தது. எல்லா இடத்திலும் ஓட்டை உடை சல்கள். கூரையோ விரிசல் விட்டு ஒழுகிக் கொண்டிருந்தது. எப்போது இடிந்து விழுமோ என்ற நிலை. தண்ணீர் இல்லை. கதவுகளைக் கறையான் அரித்துக் கொண்டது. தரையெல்லாம் பெயர்ந்துவிட்டது. சுவரில் பாசி படிந்திருந்தது என்று அங்கன்வாடியின் பணியாளர் லட்சுமி கூறினார். அவர் அங்கீகரிக்கப்பட்ட சமூக நலப் பணியாளர் (Accredited Social Health Worker – ASHA) ஆவார்.

ஆனால், கர்நாடக அரசின் மகளிர் மற்றும் குழந்தை மேம் பாட்டுத் துறையுடன் 3181வது ரோட்டரி மாவட்டமும் இணைந்து அங்கன்வாடியைப் புதுப்பித்துள்ளன. இதைப் போல் நான்கு மாவட்டங்களில் உள்ள 517 அங்கன்வாடிகள் மொத்தம் ரூ.98.02 லட்சம் செலவில் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டுள்ளன. சமையலறை, கழிவறைகளில் போதிய தண்ணீர் இருக்கிறது. அறைகள் சுவர்களுக்கு வண்ணம் பூசப்பட்டுள்ளது. ஒவ்வொரு அங்கன்வாடியிலும் 20 குழந்தைகள் இருக்கிறார்கள். போதிய வசதிகளும் தேவைகளும் இருப்பதால் மேலும் பல குழந்தைகள் இங்கே சேருவதற்கு வருகிறார்கள்.

இந்த மாவட்டத்தில் ஆஷா ஸ்பூர்த்தி என்று பெயரிடப்பட்டு செயல்படுத்தப்படும் திட்டத்தை மாவட்ட ஆளுநர் P ரோஹிநாத் பதே உருவாக்கியுள்ளார். இத்திட்டத்தின் கீழ் மேலும் தேவையான அடிப்படை வச திகள் அமைக்கப்படும் என்றும் அதன் தொடர்ச்சியாக மாணவர்கள் அதிகம் வருவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

குழந்தைகள் இதில் ஈடுபடும்போது, உணர்வுபூர்வமாக இருக்கும். வியக்கத் தக்க அளவுக்கு மன நிறைவு ஏற்படும்.

DG P ரோஹிநாத்

அங்குள்ள 78 ரோட்டரி சங்கங்களும் இத்திட்டத்தில் முழுக் கவனம் செலுத்தி வருகின்றன.

ரோட்டரியின் 6 அம்சங்களில் ஐந்து அம்சங்கள் இத்திட்டத்தின் கீழ் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ரோட்டரி சங்கங்கள் இத்திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். குழந்தைகள் இதில் ஈடுபடும்போது, உணர்வுபூர்வமாக இருக்கும். வியக்கத் தக்க அளவுக்கு மன நிறைவு ஏற்படும். 78 ரோட்டரி சங்கங்களைச் சேர்ந்த 3,300 ரோட்டரியினர் இந்த முன்முயற்சியில் இணைந்து ஈடுபட்டுள்ளனர் என்றார் அவர்.

இந்த அங்கன்வாடிகளுக்கு அனுப்பும் பெற்றோரில் பெரும் பாலானோர் தினக் கூலித் தொழிலாளர்கள். பெரும்பாலான தாய்மார்கள் வீட்டுவேலைக்கான பணிப் பெண்கள். அவர்களுக்கு இந்த அங்கன்வாடிகளைத் தவிரவேறு பாதுகாப்பான இடம்

தேர்ச்சி பெற்றார். ரோட்டரியில் பெரிய பதவிகளில் இருக்கலாம். ஆனால், உங்களது திறமை எப்படி இதமாகப் பேசுகிறீர்களோ அப்போது தான் வெளிப்படும். “தயவு செய்து!” என்ற மந்திர வார்த்தையைப் பயன்படுத்துங்கள் என்றார் ரோஹிநாத்.

ரோட்டரி சங்கங்கள் எப்படி இதுபோன்ற திட்டங்களில் ஈடுபடுகின்றன என்பதை விவரித்த அவர், ரோட்டரியினர் பள்ளிச் சிறுவர்களுக்குச் சீருடைகள், காலணிகள், அடிப்படை தேவைகள், எவர்சில்வர் டிபன் பாக்ஸ், தட்டுகள் ஆகியவற்றை அளிப்பதில் தங்கள் பணியைத் தொடங்குகிறார்கள். சில சங்கத்தினர் சில அங்கன்வாடிகளை மிகச் சிறந்த மையங்களாக மாற்றுகிறார்கள். வேறு சில ரோட்டரி சங்கங்கள் செய்ய விரும்பினாலும் போதிய நிதி இல்லை. குழந்தைகளின் ஒட்டு மொத்த மேம்பாட்டுக்காக நல்ல சூழ்நிலையை அளிக்கும் வகையில் அங்கன்வாடிகளைத் தூய்மையாகவும் சுகாதாரமாகவும் அமைப்பது தான் நோக்கம் என்றார்.

விட்லா ரோட்டரி சங்கம் போன்ற தன்னிறைவு பெற்ற ரோட்டரி சங்கங்கள் 29 அங்கன்வாடிகளைத் தத்தெடுத்துள்ளன. அவற்றைச் சேர்ந்த ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினரும் அங்கன்வாடிக்காக செயல்படுகிறார். இதனால் ஈர்க்கப்பட்ட உள்ளூர் வெளியீட்டு நிறுவனம் ஓர் அங்கன்வாடியைத் தத்தெடுத்து மேம்படுத்தி யுள்ளது. நல்ல பணிகளைச் இல்லை. மங்களூருவில் 2009ம் ஆண்டு ஓர் அங்கன்வாடிக்குச் சென்று பார்த்தபோது, அழுதுவிட்டேன். அந்த அளவுக்கு மோசமாக இருந்தது. ஒரு ரோட்டரி தலைவர் என்ற முறையில் அங்கன்வாடிகளை எடுத்துச் சீரமைப்பது என்று தீர்மானித்துக் கொண்டேன். பத்தாண்டுகள் கழித்து மாவட்ட ஆளுநராகப் பொறுப்பேற்ற பிறகு இத்திட்டத்தை வடிவமைத்து, கர்நாடக அரசுடன் இணைந்து செயல்படுத்தத் தொடங்கினோம். முதல் மாதிரி அங்கன் வாடி மங்களூரு, போக்கபட்டணாவில் ரூ.6 லட்சத்தில் புதுப்பிக்கப் பட்டது என்றார் ரோஹிநாத்.

இந்த விஷயத்தில் சிறந்த பணியை ஆற்றிய திட்டத்தின் தலைவர் தெற்கு மைசூரு ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த HM ஹரீஷைப் பாராட்டினார். ஹரீஷ் மிகச் சிறந்த பணியை ஆற்றியுள்ளார். வாரந்தோறும் ஒவ்வொரு ரோட்டரி சங்கத்தையும் அழைத்து அவர்கள் அளித்த உறுதியைச் செயல்படுத்தி யிருக்கிறார்களா என்று ஆராய்ந்தார். வாரந்தோறும் குறைந்தது 30 மையங்களுக் குச் சென்று திட்டம் செயல்படுத்தப்படுகிறதா என்று பார்வையிட்டார். 78 ரோட்டரி சங்கங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவது அவ்வளவு எளிதல்ல. ஆனால், அந்தக் கலையில் ஹரீஷ்

செய்வதன் விளைவு இது தான். மைசூரு ஹெரிடேஜ் ரோட்டரி சங்கம் இரண்டு மாடிக் கட்டடத்தைக் கட்டித் தந்திருக்கிறது. தற்போது அங்கே 80 குழந்தைகள் தங்கியுள்ளனர் என்று பிதே கூறினார்.

மற்றவர்களின் பங்களிப்பு அவசியத்தை வலியுறுத்திய மாவட்ட ஆளுநர் ரோஹிநாத், பிரம்மகிரி ஹட்டி அங்கன்வாடிக்கு சுவாமி விவேகானந்தா இளைஞர் இயக்கம் தோள் கொடுத்து உதவுகிறது. மைசூரில் இயங்கும் அந்த அமைப்பு ஆதாயமில்லாமல் தொண்டு புரிந்து வருகிறது. அந்த அமைப்பினர் அங்கன்வாடியை புதுப்பிக்கும் பணியுடன் நிற்கவில்லை. உள்ளூர் சமூக நலன் சார்ந்த தொண்டுகளிலும் அதிக செலவில்லாத முன்னேற்றப் பணிகளிலும் ஈடுபடுகிறார்கள். ரோட்டரி சங்கங்கள் அங்கன்வாடி குறித்த தகவல்களையும், நிதி, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சமூக நிதியம் அளிக்கும் நிறுவனங்களின் பங்களிப்பு குறித்தும் தகவல் திரட்டிவைக்கின்றன என்றும் குறிப்பிட்டார்.

அங்கன்வாடியில் உள்ள ஆசிரியை கலாவதி, RC தென்கிழக்கு மைசூர், L&T நிறுவனத்துடன் இணைந்து குக்கரஹள்ளியில் அங்கன்வாடியை அமைத்து ள்ளது. அங்கு கட்டமைப்பு சிறப்பாக உள்ளது. தனியார் காப்பகம் போன்ற வசதி கள் இருக்கின்றன. அங்கே படிக்கலாம், கணிதம், ஆங்கிலம் கற்கலாம். குழந்தைகளிடம் படிக்கும் வழக்கத்தை ஏற்படுத்து வதற்காக படங்களுடன்

கூடிய புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. மாதந்தோறும் ரோட்டரி சங்கம் சார்பில் சத்துணவு குறித்தும் குழந்தை நலம் குறித்தும் கற்பிப்பதற்காக தாய்மார்களுக்கு கூட்டம் நடத்தப்படுகிறது என்றார்.

மைசூருக்கு 35 கி.மீ. தொலைவில் உள்ள சல்லஹள்ளி அங்கன்வாடிக் கட்டடத்தை அதே ரோட்டரி சங்கம் புதிதாகக் கட்டித் தந்திருக்கிறது. அங்கு சிறுவர்கள் புன்னகை தவழ, பொம்மைகளுடன் விளையாடிவிட்டு, பின் ஊஞ்சலில் உற்சாகமாக விளையாடுவதைப் பார்த்தேன். அந்த மையத்தில் குடிநீர் சுத்தி கரிப்பு சாதனம் உள்ளது. மாற்றக் கூடிய படுக்கைகள், குழந்தைகளுக்கு ஏற்ற கழிவறை வசதி எல்லாம் உள்ளன. முன்பு அங்கே உலோகத்தால் ஆன வாஷ் பேசின் இருந்தது. அது திருடு போனது, தற்போது கை கழுவுவதற்காக சிமெண்டால் அமைக்கப் பட்டுள்ளது. அது உறுதியானது ரோட்டரி சங்கத் தலைவர் விஸ்வநாத் கூறினார்.

குழந்தைகளின் பசியை ஆற்றவும் சத்துக் குறைபாட்டைத் தடுக்கவும் கர்நாடக மாநில அரசின் முனைப்பில் மாத்ரு பூர்ணா திட்டம் (Mathru Poorna scheme) கொண்டுவரப்பட்டது. கிராமப்புறங்களில் உள்ள கருவுற்ற தாய்மார்கள் மற்றும் பாலூட்டும்

DG P *ரோஹிநாத் ஒரு அங்கன்வாடியில் குழந்தைகளுடன். திட்டத்தலைவர் HM ஹரீஷ் அவர்களும் உள்ளார்.*

இவர்களது எல்லாப் பிரச்சினைகளுக்கும் ரோட்டரியிடம் தான் தீர்வு இருக்கிறது என்று நினைக்கிறார்கள். நாம் முயல்வோம்.

திட்டத் தலைவர்

HM **ஹரீஷ்**

தாய்மார்களின் சத்துத் தேவையை ஈடு செய்ய அங்கன்வாடி மைய வளாகங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. புதுப்பிக்கப்பட்ட 517 அங்கன்வாடிகளில் எட்டு பேருக்குத் தினமும் ஒரு வேளை உணவு வழங்கப்படுகிறது.

இந்த அங்கன்வாடியில் பயன் பெறும் கவிதா என்ற பாலூட்டும் தாய் கவிதா, முன்பு சத்தான உணவைப் பெறுவதற்காக நான் தினமும் சல்லஹள்ளி கிராமத்தில் உள்ள தன் வீட்டிலிருந்து 7 கி.மீ. தூரம் நடந்து அடுத்த கிராமத்தில் உள்ள அங்கன்வாடிக்குச் செல்லவேண்டியிருந்தது. அந்த சிரமத்தை புதிதாகக் கட்டப்பட்ட அங்கன்வாடி போக்கிவிட்டது. இப்போதெல்லாம் நடந்து சிரமப்படவேண்டியதில்லை. இதற்கு நான் ரோட்டரி சங்கத்துக்கு நன்றி கூறுகிறேன். அது மட்டுமல்ல, நான் கருவுற்ற காலத்தில் எனக்கு அங்கன்வாடி ஆசிரியை ஆரோக்கியமான குழந்தைக்கு என்ன வகையான உணவைச் சாப்பிட வேண்டும் என்று

கூறி, சரியான வழிகாட்டினர் என்று கூறினார்.

RC கொள்ளேகல் மிட் டவுண் சேர்ந்தவர்கள் மைசூரிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ள ஹோண்டராபாலு அங்கன்வாடியை மாவட்ட ஆளுநருக்குக் காட்ட விரும்பினர். அப்போது அங்கே கிராமத்தினர் கூடி ரோட்டரி அமைப்புக்கு நன்றி தெரிவித்தனர். அதே சமயம் பேருந்து நிறுத்தத்தை அமைக்கும் படியும் இன்னொரு கிராமத்தில் உள்ள அங்கன்வாடியைப் புதுப்பிக்கும் படியும் வேண்டுகோள் விடுத்தனர். அத்துடன் கான்கிரீட் வீடு களைக் கட்டித் தரவேண்டும், கொசுத் தொல்லையை ஒழிக்கவும் கோரிக்கை வைத்தனர்.

அவற்றையெல்லாம் கேட்டுக் கொண்ட ஹரீஷ் புன்னகையுடன், இவர்களது எல்லாப் பிரச்சினைகளுக்கும் ரோட்டரியிடம் தான் தீர்வு இருக்கிறது என்று நினைக்கிறார்கள். நாம் முயல்வோம். அதே சமயம் அங்கன்வாடிகளை மேம்படுத்துவதில் நமது கவனம் இருக்கட்டும் என்றார்.

கரிநஞ்சாபுரா கிராமத் தில் அங்கன்வாடி ஆசிரியை சாரதா உணர்ச்சி பொங்க, அங்கன்வாடி வீணாகக் கிடக்கிறதே ஒன்றும் செய்ய முடியவில்லையே என்று வருந்தினேன். இப்போது 60 குழந்தைகளுக்கு உணவும் கல்வியும் அளிக்கிறோம். RC சாம்ராஜ் நகர் செய்த பணிக்கு எவ்வளவு நன்றிகளைக் கூறியும் போதாது. உங்களால் தான் இந்தக் குழந்தைகள் நன்றாகச் சாப்பிடுகிறார்கள். ஆரோக்கியமாகவும் இருக்கிறார்கள் என்றார்.

ஒருங்கிணைப்பு:
கிரண் ஜெஹரா

வடிவமைப்பு:
S கிருஷ்ணப்ரதீஷ்

ஒன்றிணைந்து நம் தோழமையை வலுப்படுத்துவோம்

ரோட்டரி வருடத்தின் கடைசி காலாண்டில் நாம் நுழைந்திருப்பதால், ஒரு வலுவான முடிவை உறுதிசெய்வதில் நம் கவனம் திரும்புகிறது. இந்த வருட ஆரம்பத்தில் உங்கள் சங்கம் இருந்ததை விட வலுவானதாக மாற்றுவதே உங்கள் இலக்காக இருந்து வந்திருக்கிறது என்று நான் நம்புகிறேன். உறுப்பினர்களுடைய பங்களிப்பைப் பொறுத்து அனைத்து சங்கங்களும் இருப்பதால், சங்கங்கள் பிழைப்பது மட்டுமல்லாது செழித்தோங்கும்.

ஆனால் அப்படி நடக்க வருடத்தின் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு உறுப்பினரும் அந்த வெற்றிக்கானப் பங்களிப்பைக் கொடுக்க வேண்டும். திறன்மிக்க புதிய உறுப்பினர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு ஆதரவளிப்பதும், முன்னாள் உறுப்பினர்களைச் சந்தித்து திரும்ப வருவதற்கு அழைப்பு விடுப்பதும் முக்கியமானதாகும். மேற்கூறிய அனைத்தில், அவர்கள் புதிய உறுப்பினர்களோ அல்லது மறுபடியும் சேர்ந்த முன்னாள் உறுப்பினர்களோ, நமது சங்கத்தின் வலிமையான உறுப்பினர்களாக மாற்ற அவர்களை வழிநடத்தி செயலில் ஈடுபடுத்த வேண்டும். சங்கத் திட்டப்பணிகள், மாவட்டத் திட்டப்பணிகள் மற்றும் உலகளா விய திட்டப்பணிகள் போன்ற வற்றில் சட்டையை மடித்துவிட்டு களத்தில் இறங்க வேண்டும், ஏனெனில் உங்கள் சங்கத்தின் மற்ற உறுப்பினர்களுடன் இணைந்து வேலைசெய்வதன் மூலமாகத் தான் தோழமை உருவாக்க முடியும்.

TRFக்கு நம் ஆதரவைக் கொடுக்க வேண்டும். உலகத்தில் நற்செயல்கள் தானாக நடக்காது. அத்துடன் திட்டப்பணிகளை செயல் படுத்துவதற்கான ஆட்களை கொண்டிருக்க, அவர்கள் தொடர்ந்து செயல்படுவதற்கான நிதிகளும் நம்மிடம் இருக்க வேண்டும். அனைவரும் இந்த புள்ளியில் தான் இணைகிறோம். நாம், நமது கூட்டாளிகள் மற்றும் நமது பயனாளிகள் போன்றோர்கள் தான் அந்த நிதிகளுக்கான ஆதார மூலங்கள். நன்கொடை பெறுவதற்கு முன்னுரிமை உள்ளதாக நமது TRFஐ நாம் ஒவ்வொருவரும் மாற்றுவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது, அதனால் வாழ்க்கையை மாற்றவும் உலகத்தை முன்னேற்றவும் நம்மால் முடியும். ஒரு மாதத்தில் உயர்தர காஃபிக்கு இரண்டு முறை செலவழிக்கும் பணத்தை ஒருவர் சேமித்தாலே போதும், அவரால் வருடத்திற்கு $100 பவுண்டேஷனுக்கு கொடுக்க முடியும். TRF செய்யும் நல்ல காரியங்களுக்கு அனைவராலும் பங்களிக்கக்கூடிய சிறிய தொகைதான் இது.

இதுவரை இல்லாத வகையில் நமது TRFக்கு கொடுப்பதை மிக எளிதாக மாற்றியுள்ளோம். எந்த நேரத்தில் வேண்டுமானாலும் பாதுகாப்பாகவும் சௌகரியமா கவும் rotary.org/donate என்ற வலைத்தளத்தில் உங்கள் பங்களிப்பை அளிக்கலாம்.

ரான் D பர்டன்
TRF அறங்காவலர் தலைவர்

கலந்தாலோசனை அமர்வுகள்

ஹேன்க் சார்டின்

ஹவுஸ் ஆஃப் ப்ரண்ட்ஷிப்பில் உள்ள பழைய நண்பர்களைச் சந்திக்கவும், உள்ளூர் சங்கத்தின் விருந்து நிகழ்ச்சி களில் அங்குள்ள ரொட்டேரியன்களைப் பற்றி அறிந்துகொள்ளவும், பொது அமர்வுகளில் உத்வேகமான பேச்சுக்களைக் கேட்கவும் எது மிகச்சிறந்த இடம் தெரியுமா? ஒவ்வொரு வருடம் நடைபெறும் RI மாநாடு தான். அதேவேளையில் கலந்தாலோசனை அமர்வுகளில், உங்கள் சக ரொட்டேரியன்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றி அறிந்து கொள்ளவும் புதிய யோசனைகளை ஒன்று சேர்க்கவும் ஒரு மிகச்சிறந்த வழியாக இருக்கிறது. 2019 மாநாடுக்காக ஜூன் மாதம் 1 முதல் 5 வரை ஹேம்பர்க்கில் நீங்கள் இருந்தால், பல்வேறு வகையான தலைப்புகளில் உள்ள அமர்வுகளில் கலந்துகொள்ளலாம்.

இதர கலந்தாலோசனை அமர்வுகள் பின்வரும் தலைப்புகளுக்காக ஒதுக்கப்படும், அவை தலை மைப்பண்புகளை வளர்ப்பது புதிய உறுப்பினர் சேர்க்கை, தற்போதைய உறுப்பினர்களைச் செயலில் ஈடுபடுத்துவது போன்றவை. ரோட்டராக்டர்கள், இன்டராக்டர்கள், பரிமாற்ற மாணவர்கள், மற்றும் இதர முன்னாள் மாணவர்கள் போன்ற ரோட்டரியின் அடுத்த தலைமுறை தலைவர்களின் பேச்சுக்களையும் அவர்களைப் பற்றியும் தெரிந்துகொள்ள உங்களுக்கு வாய்ப்பு இருக்கும்.

உங்கள் சங்கத்தின் சாதனைகளை உங்கள் உள்ளூர் செய்தி ஊடகங்கள், சமூக ஊடகம் மற்றும் இந்த இதழ் வழியாக நீங்கள் பிரசுரிக்க உதவும் வகையில் நிறைய அமர்வுகள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

June 1–5 2019 RI மாநாட்டுக்கு
பதிவு செய்து கொள்ள:
www.riconvention.org
இணைய தளத்தை பாருங்கள்.

©தி ரொட்டேரியன்

WE ADD VALUE TO YOUR EFFORTS
Estd. 22-02-2002

Organisation Development Consultants

Hyderabad

Visit us at : www.odchyd.com

Mr P Seshadri
Management Consultant

Introduces New Services for Micro, Small & Medium Level Enterprises & Start up's on

ORGANISATION DEVELOPMENT

- Building Sustainable Organisations

Services could be availed as per need and maturity of the organisation

BASIC Package
(3 Months)
Professional Fees : Rs 2 Lakhs

Streamlining Systems / Processes in the organisation to meet business requirements

Organisation Development Plan to be provided for one year w.r.t the following aspects based on assessments

- Customer Focus
- Leadership
- Engagement of People
- Process Approach
- Improvements
- Evidence based Decision Making
- Relationship Management

SUPREME Package
(6 Months)
Professional Fees : Rs 5 Lakhs
(Includes BASIC Package Services)

Business Excellence Assessments w.r.t

- Leadership
- Strategy Development & Deployment
- People Management
- Resources & Infrastructure Management
- Process Management
- Customers Results
- People Results
- Social Results
- Business Results

Formulating Blue Print for Change Management within the organisation for one year and training assistance in initiating implementation of changes

PREMIUM Package
(12 Months)
Professional Fees : Rs 9 Lakhs
(Includes BASIC & SUPREME Package Services)

Establishing Integrated Management Systems (based on best practices) with 100+ Key Performance Indicators with focus on organisations :

- Economic Performance
- Environmental Performance
- Social Performance

Preparation of Business Sustainability Report which is useful for accessing finance , global work contracts and improving sustainability initiatives of the organisation.

Professional Profile of Mr. P Seshadri

A qualified Production & Industrial engineer with management specialisation in Industrial Management from Nagpur University has industrial and consulting experience of more than 28 years in the domains of HRD, TQM and OD with Corporates, MSME's and Start-up's.

Practicing as Management Consultant since 2002, he has evolved his core competencies in three areas which include – Developing Management Systems, Facilitating Business Excellence Practices and Establishing Sustainability Reports for Industries and Institutions.

Active with professional / industrial bodies and social organisations, he has held leadership positions in several of such organisation like QCFI, NIPM, ISTD, IMCI, HDCF, FAPCCI, CII, BNI and Rotary International. His current passion as qualified faculty from Rotary Leadership Institute is strengthening Rotary Movement using several initiatives in Clubs, Communities and Corporates.

Contact:

98490 82520

pseshadri29@gmail.com

ரோட்டரி தொட்டுவிட்டுப் போவதற்கு அல்ல

ரஷீதா பகத்

ரோட்டரி அமைப்பின் தலைமைக்கு வருவோர் ஓராண்டுக்கு மட்டும் இருந்துவிட்டால் போதும் என்பது நல்லதுதான். ஆனால், அதில் ஒரு சிக்கலும் உள்ளது என்று RIDE பரத் பாண்ட்யா கருத்து தெரிவித்தார்.

கேரள மாநிலம் வயநாட்டில் 'கல்ப்' (Qalb) என்ற பெயரில் நடைபெற்ற RID 3202ன் மாநாட்டில் பேசிய அவர், புதிதாகப் பொறுப்பேற்கும் ஒவ்வொரு தலைவரும் ஏதாவது புதியதாகத் தொடங்க ஆர்வம் காட்டுகிறார். அதே சமயம் இதற்கு முன்பு பொறுப்பில் இருந்தவர் என்ன செய்தாரோ அதைத் தொடர்ந்து செய்வதற்கு மறந்து விடுகிறோம். இப்படிச் செய்வதால், ரோட்டரி ஏதோ வந்து செல்லும் அமைப்போ என்ற எண்ணத்தை உருவாக்கி விடுகிறது என்றார்.

இப்படியே எல்லோரும் ரோட்டரி அமைப்பைத் தங்களது பாதையில் இழுத்துச் சென்றால் என்னாவது? இங்கே KR ரவீந்திரன் உள்ளிட்ட ரோட்டரி தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தவறாக எடுத்துக் கொள்ளவேண்டாம். கடந்த 10, 15 ஆண்டுகளாக ஒவ்வொரு ரோட்டரி தலைவரும் வெவ்வேறு விஷயத்தை வலியுறுத்தி வருகிறார்கள். இத்தகைய சிக்கலைக் கவனித்தாக வேண்டும் என்று அவர் கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:
தலைமைப் பொறுப்புக்குத் தேவையான திட்டமிடல் இல்லாமை, போதிய தயாரிப்பு இன்மை, ஆகியவை அடுத்தகட்ட சிக்கலாகும். ரோட்டரி சங்கத் தலைவர் பொறுப்பு முதல் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைமைப் பொறுப்பு வரையில் 11 அடுக்குகள் தலைமை இருக்கின்றன. இவற்றுக்கு இடையில் போதிய தகவல் தொடர்பு இல்லாமையால் பிரச்சினை எழுகிறது. அது மட்டுமின்றி, நீயா, நானா என்ற எண்ணமும் தலைதூக்குகிறது. "நான் தலைவர், உதவி ஆளுநர், செயலாளர். எனக்கு மேடையில் இடம் தருவதில்லை. எனக்கு முக்கியத்துவம் தரப்படுவதில்லை" என்றெல்லாம் இருப்பது நமது இலக்கை அடைவதற்கு இடையூறாக இருக்கின்றன.

இவற்றையெல்லாம் கடந்து வந்தாலொழிய உச்சத்தைத் தொட இயலாது.

நல்ல செயல்களைத் தொடர்ந்து செய்துகொண்டே இருங்கள். ஏதாவது

RID 3202 DG EK *உமர் RID C பாஸ்கருக்கு பொன்னாடையிட்டு வரவேற்கிறார். மாலா பாஸ்கர் மற்றும் மாநாட்டுத் தலைவர் பிஜோஷ் மானுவல் (வலது) அவர்களும் உள்ளனர்.*

செயல்படவில்லை எனில் அதைக் கைவிட்டுவிட்டு, புதிய வழியை, நடைமுறையைக் கடைப்பிடியுங்கள். ரோட்டரி மிகப் பெரிய கனவுகளைக் காண்பதற்கும் எண்ணுவதற்கும் உரிய காலம் கனிந்துவிட்டது. மாவட்ட ஆளுநர் EK உமர் சிறப்பாகச் செயல்படுகிறார்.

ரோட்டரியை வருணிக்க இரு சொற்கள் உண்டு. அவை நம்பிக்கை மற்றும் வாய்ப்பு ஆகும். நம்பிக்கை என்பது நல்ல உலகத்தை உருவாக்குவதற்கு. வாய்ப்பு அந்த நம்பிக்கை நிறைவேறுவதற்காக ரோட்டரியின் வழி. பல ஆண்டுகளாக நம் உலகம் மேம்பட்டு வருகிறது. 1800ம் ஆண்டுகளின் இடைக்காலத்தில் உலகில் ஏராளமானோர் வறுமையில் வாழ்ந்தனர். உலக மக்கள் தொகை பல மடங்கு அதிகரித்து வந்துள்ள நிலையிலும் தொழில் புரட்சியும் வேளாண் புரட்சியும் கடந்த 150, 175 ஆண்டுகளில் மிகப் பெரிய சாதனையை நிகழ்த்தியுள்ளன.

உலக வங்கியின் மதிப்பீட்டின்படி 1981ம் ஆண்டில் 44 சதவீத உலக அளவிலான மக்கள் தொகை வறுமைக் கோட்டுக்குக் கீழே இருந்தது. 2015ம் ஆண்டில் அது 10 சதவீதத்துக்கும் குறைந்துவிட்டது. இந்திய அரசின் 1991ம் ஆண்டு மதிப்பீட்டின்படி 45 சதவீத இந்தியர்கள் ஏழ்மையில் இருப்பதாகத் தெரியவந்தது. 2013ம் ஆண்டில் அது 20 முதல் 22 சத வீதமாகக் குறைந்துள்ளது. இன்று தனிப் பட்ட இந்தியர்களின் சொத்து மதிப்பீடுகளின்படி உலகில் இந்தியா முதல் 10 வளமான நாடுளில் இடம் பிடித்து விட்டது. மொத்த சொத்து மதிப்பு சுமார் 5,20,000 கோடி டாலர் (ரூ.சுமார் ரூ. 36,18,64,996.52 கோடி) ஆகும்.

இன்றைய உலகம் முன்னோரது காலத்தை விட சிறப்பாக அமைந் தாலும் நூறு கோடி மக்களுக்கு போதிய சுகாதார வசதியில்லை, குடிநீர் வசதி யில்லை, நூறு கோடி மக்களுக்கு எழுத் தறிவு கிடையாது. பல லட்சம் பேர் பட்டினியால் படுத்திருக்கிறார்கள். ஆயிரம் குழந்தைகள் பிறந்தால், 45 சிசுக்கள் ஐந்து வயதுக்குள் இறந்து விடுகின்றன. போதிய முன்னேற்றம் கண்டதற்கு நம்மை நாமே பாராட்டிக் கொண்டிருக்கலாம். ஆனால், அதே சமயம் இன்னும் நிறைய செய்ய வேண்டியிருக்கிறது.

மும்பை, ராஜாபாய் டவரில் வரலாற்று நினைவுச் சின்னத்தில் பழங்காலத்திய கண்ணாடியை ஒரு கோணத்திலிருந்து பார்த்தால், அழகாக இருக்கும். அதைப் போல் தான் ரோட்டரி அமைப்பும். குறிப்பிட்ட கோணத்தில் பார்த்தால் தான் ரோட்டரியின் அழகு தென்படும்.

சிலர் ரோட்டரியின் அழகை நட்பிலும் சகோதரத்துவத்திலும் காண்கிறார்கள். சிலர் ரோட்டரி அடையாளச் சின்னங்களை (Rotary pin) அணிவதில் பெருமையும் பெருமிதமும் கொள்கிறார்கள். சிலர் தங்களை வளர்த்துக் கொள்வதற்கு ரோட்டரியைப் பயன்படுத்துகிறார்கள். பலர் ரோட்டரியின் மூலம் பிறருக்கு உதவ வாய்ப்புக் கிடைக்கறது எனக் கருதுகிறார்கள்.

ரோட்டரி மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. கேரளத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் சேவை புரிந்தது, ஆயிரக்கணக்கான பள்ளிகளில் WinS திட்டத்தைச் செயல்படுகிறது. இலங்கையில் குழந்தைகளின் பிறவி நோய்களைத் தீர்ப்பதற்காக மனித இதயத்தின் நாளங்களுக்கான வங்கியைத் தொடங்கி நடத்துகிறார்கள். போலியோவை முற்றிலுமாக ஒழிக்கும் கட்டத்தை எட்டியிருக்கிறோம் என்பதை அனைவரும் அறிவர்.

அதே சமயம் ரோட்டரி இயக்கம் வரலாற்றின் முக்கியமான முனையில் இருக்கிறது. புதிய உத்திக்கான திட்டம் சரியான, புதிய பாதையில் இட்டுச் செல்ல இருக்கிறது. தி ரோட்டரி ஃபவுண்டேஷன் மானியம் கிடைப்பதால், மிகப் பெரிய திட்டங்களில் ரோட்டரியினர் ஈடுபடத் தொடங்குகிறார்கள். இருந்தாலும் இன்னும் நிறைய செய்யவேண்டியிருக்கிறது. அதனால்தான், எதையும் பின்னோக்கிப் பார்க்காதீர்கள் என்கிறேன். உச்சத்தை எட்ட வேண்டும். நம்மைப் பின்னுக்கு இழுக்கும் சிக்கல்களைக் கண்டறிந்து களைய வேண்டும். உச்சத்தை எட்டுவதற்கான சரியான செயலை மேற்கொள்ள வேண்டும்.

நம்மை நாமே அலசி ஆராய்ந்து விமரிசித்துக் கொள்ள வேண்டும். நம்மை பின்னால் இழுப்பது மாற்றத்தை விரும்பாத போக்குதான். நான் சார்ந்த ரோட்டரி சங்கத்தில் இது தான் மரபாக இருக்கிறது. பெண்கள், இளைஞர்களை எங்களது சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும்.

இவ்வாறு பாண்ட்யா பேசினார்.

RID C பாஸ்கர் பேசியபோது, வெள்ளம் பாதித்த மாவட்டங்களில் அந்தந்த ரோட்டரி அமைப்பினர் மக்களின் தேவைகளை ஈடு செய்து, உணவு, மருந்துகளை அளித்து உயிரைக் காத்து, தங்குமிடங்களைக் கட்டித் தந்ததைக் குறிப்பிட்டு பாராட்டினார்.

முன்னதாக காலையில் ஆஸ்டர் ஹெல்த்கேர் மருத்துவக் குழுமத்தின் உதவியோடு குறைந்த செலவிலான வீடுகளை அளித்த நிகழ்ச்சியில் பாஸ்கர் பங்கேற்றார். அந்தப் பணி ஒரு முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது.

கேரளம் முழுவதும் இந்த முன்னோடித் திட்டத்தின் கீழ் ரூ.2 கோடியில் 75 வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. ஆண்டு இறுதிக்குள் TRF, ஆஸ்டர் மருத்துவக் குழுமம் ஆகியவற்றின் ஆதரவுடன் மொத்தம் 500 வீடுகளைக் கட்டித் தருவதற்குத்

இடது புறத்திலிருந்து: PDGs *ஜார்ஜ் சுந்தர்ராஜ், போலாந்தைச் சார்ந்த* PDGs *பார்பரா பெளலிஸ், ரேகா ஷெட்டி, ப்ரிஸில்லா சுந்தர்ராஜ், கமருன்னிஸா,* DG EK *உமர், சஞ்சீவசாபு, ஜெரி ஜகோடா (போலாந்து).*

திட்டமிடப்பட்டுள்ளது என்றார் பாஸ்கர்.

சிறப்பாகச் செயல்படும் மாவட்டம்

நமது மக்களிடம் எதிர்பார்ப்புகள் அதிகரித்து வருகின்றன. அவர்களது தேவைகளும் அதிகரித்து வருகின்றன. அத்தகைய தருணங்களில் ரோட்டரி போன்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் அதிகரிக்கிறது. சிறப்பாகச் செயல்படும் மாவட்டம் என்ற முறையில் மனிதாபிமானப் பணிகள், எழுத்தறிவு அல்லது பள்ளியில் கைகழுவு திட்டம் ஆகியவற்றில் பிற மாவட்டங்களை விட இந்த மாவட்ட ரோட்டரி மிகவும் சிறப்பாகச் செயல்படுகிறது. குறிப்பாக மனிதாபிமான உதவிகளின்போது தாராள மனப்பான்மையை வெளிப் படுத்துகிறது. இன்று DG உமர் இந்த மாநாட்டை உண்மையிலேயே ஒரு பன்னாட்டு மாநாடாகவே ஆக்கியிருக்கிறார். இது மத்திய கிழக்கு நாடுகள், போலந்து, பிரேசில் மெக்சிகோ ஆகிய நாடுகளிலிருந்து வந்த குழுக்களை வரவழைத்ததன் மூலம் சாத்திய மாகியுள்ளது என்றார் பாஸ்கர்.

கேரள, கர்நாடக மாநிலங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு வீடுகள் கட்டித் தரப்படுவதன் அவசரத் தேவையை வலியுறுத்தி மூன்று ரோட்டரி மாவட்டங்களின் ஆளுநர்களிடமிருந்து வேண்டுகோள் வந்த பிறகு, நான் ரோட்டரி போர்டில் இருந்த சகாக்களிடம் அவரவர் சங்கங்கள், மாவட்டங்களிடமிருந்து உதவிப் பெறுமாறு வேண்டுகோள் விடுத்தேன்.

அப்போது ஒரு மின்னஞ்சல் எனக்கு வந்தது. அது வேறு மொழியில் எழுதப்பட்டிருந்தது. அது என்ன மொழி என்று தெரியாமல், ஜெர்மனி, பிரேசில், போலந்து, இத்தாலி ஆகிய நாடுகளில் இருக்கும் என் நண்பர்களுக்கு அந்த மின்னஞ்சலை அனுப்பிக் கேட்டேன். சில மணி நேரத்தில் போலந்தில் உள்ள ரோட்டரி மாவட்ட இயக்குநர் பியோட்டர் வைக்னன்ஸ்சுக் என்பவரிடமிருந்து பதில் வந்தது. கேரளத்தில் வீடு களைக் கட்டித் தருவதற்கு போலந்து ரோட்டரி சங்கம் 5000 டாலர் (சுமார் ரூ.3,47,633) உலகளாவிய நிதியை அளிப்பதாகத் தெரிவித்தார் அவர்.

இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ள போலந்து நாட்டு நண்பர்களின் மூலமாக உதவிக் கரம் நீட்டிய அனை வருக்கும் நன்றி என்றார் பாஸ்கர்.

அது மட்டுமல்ல, சான்டியாகோ நகரில் போலந்தில் உள்ள மாவட்ட இயக்குநர் பியோட்டருடன் விருந்தில் கலந்து கொண்டபோது, போலந்தின் ஒரு ரோட்டரி சங்கத்தில் சமூக உணவகம் (Social Kitchen) அமைப்பது குறித்த ஆர்வத்தை வெளிப்படுத்தினார். ஓர் உண்மையான இந்திய உணர்வுடன் எனது மாவட்ட (District 3000) ஆளுநருடன் எடுத்துச் சென்றேன். போலந்தில் ஏழைக் குழந்தைகளுக்கு உணவளிக்கும் இந்தத் திட்டத்தில் ரோட்டரி ஈடுபட்டது. இதுதான் உண்மையான சர்வதேச உணர்வாகும்.

தனி நபர் வருமானம் ரூ.1,20,000 கொண்டிருக்கும் இந்தியா தகவல் தொழில்நுட்பத் துறையில் முதலிடமும் இரும்பு உற்பத்தியில் இரண்டாம் இடம், வாகன உற்பத்தியில் மூன்றாம் இடம் வகிக்கிறது. உலகில் அதிக இளைஞர் தொகையைக் கொண்டிருக்கிறது. TRF நிதியைப் பெறும் நிலையிலிருந்து நிதியை நன்கொடையாக அளிக்கும் நிலைக்கு உயர்ந்திருக்கிறது. நன்கொடை வழங்குவதில் சில ஆண்டுகளாகத் தொடர்ந்து நிலைபெற்று வருகிறது.

PDGs EK *சகாதேவன், சுனில் சகாரியா,* RIDE *பரத் பாண்டியா,* PRIP KR *ரவீந்திரன், வானதி, சங்கீதா,* RIPR *வினோத் பன்சல்,* PDGs *ரேகா ஷெட்டி மற்றும்* PM *சிவசங்கரன்.*

இந்தியாவும் இந்தியாவில் உள்ள ரோட்டரியும் எப்படி மாறியிருக்கிறது என்பதை இதுவே காட்டுகிறது என்றும் பாஸ்கர் குறிப்பிட்டார்.

உறுப்பினர்களை மதித்தல்

மாநாட்டில் பங்கேற்ற RI அமைப்பின் தலைவரது பிரதிநிதியும் முன்னாள் மாவட்ட ஆளுநருமான வினோத் பன்சால் பேசுகையில், ரோட்டரி அமைப்பு சிறந்த அனுபவத்தைத் தனது உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். தொடரும் சேவைத் திட்டங்களின் மூலம் தாங்கள் எடுத்துக் கொண்ட உறுதிக்கு உண்மையாகவும் இருக்க வேண்டும் என்றார்.

ரோட்டரி அமைப்பிடமிருந்து சில விழுமியங்களைப் பெற்றுள்ளதை ரோட்டரியினர் உணர வேண்டும். நாம் வெளிப்படைத் தன்மையோடு இருக்கிறோமா என்பதையும் உறுதி செய்து கொள்ளவேண்டும். ரோட்டரி சங்கங்கள், மாவட்டங்களின் தலைவர்கள் முறையான இலக்குகளை வகுப்பதன் மூலமே இது சாத்தியமாகும்.

ரோட்டரியினர் தொண்டு, கொடையுள்ளம் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டை உணரவேண்டும். மாறுதல் நேரும் போதெல்லாம் அதற்கேற்ப நாமும் மாறிக் கொள்ள வேண்டும். ஒரே மாதிரி செய்துகொண்டிருந்தால், நாம் முன்னேறவே முடியாது என்றார்.

உமர், மற்றும் D3202வை பாராட்டிப் பேசிய பன்சால், 1000 பள்ளிகளில் கைகழுவு திட்டம் (WinS) சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இது பொது சுகாதாரத்தை மேம்படுத்தி மாணவ மாணவியரிடையில் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தும். இது தான் ரோட்டரி திட்டத்தின் உச்சமான குறிக்கோள் ஆகும் என்றார்.

உமர் பேசுகையில், கல்ப் (Qalb) என்றால் இதயம் என்று அரபு மொழியில் உள்ளது என்றார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு ஆஸ்டர் குழுமத்துடன் இணைந்து 75 பேருக்கு வீடுகள் கட்டித் தரலாம். நடப்பு ஆண்டில் 1000 பள்ளிகளில் WinS திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகிறது என்றார். மாவட்ட அளவிலான மனிதாபிமான பணிகளில் ஈடுபாடு காட்டியதற்காக ரோட்டரியினருக்கு நன்றி கூறிய அவர், அண்மையில் நடைபெற்ற செயற்கைக் கை பொருத்தும் முகாமில் (LN 4 medical camp) மொத்தம் ரூ.3 கோடியில் 1,300 மாற்றுத் திறனாளிகளுக்கு செயற்கைக் கைகள் பொருத்தப்பட்டன. ஒவ்வொரு செயற்கைக் கையும் தலா ரூ.21,000 மதிப்பிலானது. அவற்றைப் பயன்படுத்தி பல் துலக்கலாம், பொருட்களை எடுக்கலாம், எழுதலாம், காய்கறிகளைக் கூட வெட்டலாம் என்றும் உமர் கூறினார்.

மாநாட்டு ஏற்பாடுகளை வெகு சிறப்பாகச் செய்ததற்காக மாநாட்டுத் தலைவர் பிஜோஷ் மான்யூலுக்கும் இணைத் தலைவர் Dr ராஜேஷ் சுபாஷுக்கும் தனது நன்றிகளை உமர் தெரிவித்துக் கொண்டார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

RIDE *பரத் பாண்டியா,* PRIP KR *ரவீந்திரன்,* RIPR *வினோத் பன்சல், சங்கீதா மற்றும் வானதி ரவீந்திரன்.*

RI-TRF வேறுபாடுகள்

ரஷீதா பகத்

ரோட்டரி உறுப்பினர் என்ற முறையில் ரோட்டரி இன்டர்நேஷல் அமைப்புக்கும் (Rotary International) தி ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கும் (The Rotary Foundation) என்ன வேறுபாடு என்ற குழப்பம் ஏற்பட்டிருக்கும் அல்லவா?

இப்படிக் குழப்பமடைவது நீங்கள் ஒருவர் மட்டுமல்ல என்கிறார் PRIP தற்போது ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலருமான KR ரவீந்திரன். கேரள மாநிலம் வயநாடு என்ற இடத்தில் நடைபெற்ற கல்ப் (Qalb) என்ற RID 3202 வின் மாநாட்டில் பங்கேற்றுப் பேசியபோது இவ்வாறு அவர் பேசியதாவது:

நிறைய பேருக்கு இரு நிறுவனங்களுக்கும் உள்ள வேறுபாடு தெரிவதில்லை. பலர் ரோட்டரி என்ற பெயர் வந்தாலே ரோட்டரி என்று நினைத்துக் கொள்கிறார்கள். அது குழப்பமாகத் தெரிகிறது.

சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்லப் போனால், அந்தந்த நாடுகளில் வருமான வரிச் சலுகை பெறுவதற்காக இரு அமைப்புகளை உருவாக்கியுள்ளோம். ரோட்டரி ஃபவுண்டேஷனில் ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர்கள் நான்கு பேர் உள்பட 15 பேர் அறங்காவலர்களாக இருக்கிறார்கள். ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் போர்டில் தலைவர், தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர், 17 இயக்குநர்கள் இடம்பெறுவர். அமெரிக்காவின் வரிக் குறியீட்டின் பல்வேறு பிரிவுகளின் கீழ் இந்த இரு அமைப்புகளும் இடம்பெற்றுள்ளன. TRF வரிச் சலுகையுடன் நன்கொடை அளிக்கலாம். மற்ற அமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்து செலுத்தும் சந்தாவுக்கு வரிச்சலுகை பெறலாம்.

இதெல்லாம் அமெரிக்காவுக்குப் பொருந்தும், இந்தியாவுக்கு எப்படிப் பொருந்தும் என்று கேட்கலாம். அதனால்தான், இந்தியா, ஆஸ்திரேலியா, பிரேசில், ஜப்பான், கனடா, பிரிட்டன் எனப் பல நாடுகளில் மண்டல அலுவலகங்களைத் தொடங்கியுள்ளோம். அந்த நாடுகளில் ரோட்டரி உறுப்பினர்களாக இருப்போரும் அந்தந்த நாடுகளின் சட்டத்துக்கு உட்பட்டு சில வரிச்சலுகைகளைப் பெறலாம்.

1983ம் ஆண்டு வரையில் TRF ஓர் அறக்கட்டளையைப் போல் செயல்பட்டு வந்தது. அது வளர்ந்த பிறகு, அதன் சட்டப்பூர்வமான நிலை பரிசீலிக்கப்பட்டது. அறக்கட்டளையைப் போல் தொடர்ந்து செயல்பட்டால், சில சிக்கல்களைத் தீர்க்க வேண்டும் என உணர்ந்தோம். உதாரணத்திற்கு, ஓர் அறக்கட்டளை என்ற முறையில் TRF தொடர்பான வழக்குகளில் அறங்காவலர்களின் தனிப்பட்ட சொத்துகளும் இடம்பெற நேரிடும். அதனால்தான், TRF தற்போது நிறுவனமாக (Corporation) மாற்றப்பட்டது.

பாமர மொழியில் சொல்லப் போனால், TRF என்பது RI அமைப்புக்குச் சொந்தமானது. TRF என்பது RI என்ற அமைப்பு மட்டும் உறுப்பினராக உள்ள தன்னாட்சியுடன் செயல்படும் நிறுவனம் ஆகும்.

வரி குறித்த விவகாரங்களைக் கவனித்துக் கொள்ள இரு அமைப்பு களிலும் சில நடை முறைகள் உள்ளன. TRF தான் பெறும் சேவை களுக்காக உரியவற்றை RI அமைக்குச் செலுத்திவிடும். தகவல் செயல்பாடுகள், தொடர்புகள், பொதுமக்கள் தொடர்பு, நிதி, முதலீட்டு சேவைகள் என அனைத்து சேவைகளுக்கும் உரிய தொகை செலுத்தப்படும். அமெரிக்கா இலினாய்ஸ் மாகாணம் இவான்ஸ்டனில்

ரஷீதா பகத்

உள்ள RI அலுவலகத்தில் TRF வகிக்கும் இடத்துக்குரிய வாடகைக் கட்டணத்தையும் செலுத்துகிறது.

ரோட்டரியின் சில மூத்த உறுப்பினர்கள் இவான்ஸ்டனில் ஒரு கட்டடம் விலைக்கு வருவதைக் கண்டனர். இது தொடர்பாக ஒரு முன்மொழிவை RI போர்டின் முன் வைத்தனர். அந்தக் கட்டடம் கடனுதவியுடன் 2.5 கோடி டாலருக்கு வாங்கப்பட்டது. அதன் தற்போதைய மதிப்பு 10 கோடி டாலர் ஆகும். இந்திய மதிப்பில் அது சுமார் ரூ. 700 கோடியாகும். அதுதான் இன்றைக்கு மிகப் பெரிய சொத்து. கடந்த 2018ம் ஆண்டு நவம்பர் 30ம் தேதி அங்கே ஆராய்ந்த போது, அந்தத் தலைமையகத்தில் மொத்தம் 580 பேர் பணியாற்றுவதைக் கண்டேன். ஏழு சர்வதேச அலுவலகங்களில் மொத்தம் 140 பேரும், புனேயில் உள்ள சாஃப்ட்வேர் மேம்பாட்டு மையத்தில் 151 பேரும் பணியாற்றுகிறார்கள். 137 பேர் TRFக்கு சேவை புரிகிறார்கள்.

RIஅமைப்புக்கு ரோட்டரியினரின் சந்தா, முதலீடு மூலம் கிடைக்கும் வருமானம் உரிமக் கட்டணங்கள், கட்டடங்களின் வாடகை ஆகியவை மூலம்தான் வருவாய் கிடைக்கிறது. 18 மாடிகள் கொண்ட தலைமையகத்தில் 11 மாடிகளை ரோட்டரியின் பயன்பாட்டில் உள்ளன. மற்றவை வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

ஆனால், TRFக்கு ரோட்டரி உறுப்பினர்களின் சந்தா மூலம் தான் வருவாய் கிடைக்கிறது. அதை மூன்றாண்டுகளுக்கு முதலீடு செய்கிறோம். அதிலிருந்துதான் சேவைத் திட்டங்களுக்காக உங்களுக்கு நிதி வழங்குகிறோம். வருவாயில் ஒரு பகுதி TRF இயக்குவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

ரோட்டரி இப்படி இரு அமைப்புகளுடன் செயல்பட்டாலும் மொத்த நிறுவனமும் உலகில் நல்ல காரியங்களுக்காகச் செயல்படுகிறது. அதன் மூலம் புகழ் பெறுகிறோம். அதனால், நிதி திரட்ட முடிகிறது. உறுப்பினர்களையும் ஈடுபடுத்த முடிகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக ஆசியாவைச் சேர்ந்த ரோட்டரி உறுப்பினர்கள் மொத்தம் 33 கோடி டாலர் (சுமார் ரூ.2,276 கோடி) உதவியுள்ளனர். இது உலகளவில் மனிதாபிமானப் பணிகளுக்காக TRF அளிக்கும் மொத்த நிதியுதவியில் 35 சதவீதமாகும். ஆசிய நாடுகள் TRFக்கு ஆண்டுதோறும் 23 கோடி (சுமார் ரூ.1,586 கோடி) டாலர் அளிக்கின்றன. இது மொத்த பங்களிப்பில் 36 சதவீதமாகும். கனடா அமெரிக்கா நாடுகளை அடுத்து (கிட்டத்தட்ட 24.60 கோடி டாலர்) இரண்டாம் இடத்தில் ஆசியா உள்ளது. ஐரோப்பிய ஆப்பிரிக்க பங்களிப்பை விட (8.5 கோடி டாலர்) கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிக பங்களிப்பாகும்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் ஆசியாவில் உள்ள மாவட்ட ரோட்டரிகள் அதிகம் அளிக்கும் முதல் 50 மாவட்டங்களின் மொத்த தொகையில் பாதி அளவுக்கு அளித்துள்ளன. ரோட்டரி உலகில் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிப்பைப் பொறுத்த வரையில் ஆசியா வேகமாக வளர்ந்து வருகிறது. தற்போது மொத்தம் 10,795 ரோட்டரி சங்கங்கள் உள்ளன. அவற்றில் 3,82,883 உறுப்பினர்கள் உள்ளனர். இது உலக அளவிலான ரோட்டரி உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 32 சதவீதம் ஆகும்.

இவையெல்லாம் புள்ளி விவரங்கள். அதே சமயம் சிறந்த தரமான திட்டங்களின் மூலம் உரிய பலன்கள் கிடைக்கும் வகையில் செய்கிறோமா என்பதும் முக்கியம்.

பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள அதிக வசதியில்லாத ஆசிய மண்டலத்திலிருந்து தாராளமாக ஃபவுண்டேஷனுக்கு வாரி வழங்கப்படுகிறது. இப்படி இருப்பதைப் பகிர்ந்து கொள்வது ஆசியவின் பொதுவான பண்பாகும்.

அது மட்டுமல்ல, மக்களை அவர்கள் வைத்திருக்கும் கார்கள், சொத்து ஆகியவற்றை வைத்து மதிப்பிடுகிறோம். RI தலைவரின் பிரதிநிதி வினோத் பன்சல் கூறியதைப் போல் தொண்டுள்ளத்துக்கும் கொடையுள்ளத்திற்கும் நுட்பமான வேறுபாடு இருக்கிறது. தொண்டுள்ளம் உணர்வுபூர்வமான உடனடி சேவை யாகும். கொடையுள்ளம் என்பது தொலைநோக்குடன் கூடிய நீண்டகால சேவையாகும். நீங்கள் வசிக்கும் நாட்டில் தொண்டுள்ளம் பெரிய அளவில் மதிக்கப்படுகிறது. கடந்த ஓராண்டில் மட்டும் இந்தியாவைச்

RIPR *வினோத் பன்சல், மாநாடு தலைவர் பஜோஷ் மானுவல், கமருணிசா உமர்,* Dr *ராஜேஷ் சுபாஷ்,* DG E K *உமர்,* PRIP K R *ரவீந்திரன், வானதி,* PDGs E K *சகாதேவன்,* P M *சிவசங்கரன் மற்றும் போலாந்தின்* PDG *பார்பரா பெளலிஸ்.*

சேர்ந்த கொடையுள்ளம் கொண்டவர்கள் மொத்தம் ரூ.17,500 கோடி அளித்து உதவியுள்ளனர். இது கொடையுள்ளம் தொண்டுள்ளம் ஆகியவை நமது வாழ்வியல் நெறிகளில் பின்னிப் பிணைந்தவை ஆகிவிட்டன. சிறிதோ பெரிதோ தியாகத்துக்கு உயர்ந்த மதிப்புண்டு என்று நம்புகிறவர்கள் நாம். யாரோ சிலருக்குத் தேவைப்படுகிறது என்ற எண்ணத்தில்தான் மக்கள் கொடுக்கிறார்கள்.

ஒரு கோயிலுக்கோ, தேவாலயத்துக்கோ, மசூதிக்கோ நன்கொடை அளித்தால், அது கடவுளுக்குப் போய்ச்சேருகிறதா என்பது தெரியாது. ஆனால், ரோட்டரி மற்றும் அதைப் போன்ற தொண்டு நிறுவனங்களுக்கு அளித்தால், அது உரியவர்களுக்குப் போய்ச்சேருகிறது. அவர்கள் பலனடைகிறார்கள் என்பது திண்ணம்.

நான் வாழும் இலங்கையில் ஆண்டுதோறும் 2500 குழந்தைகள் பிறவியிலேயே இதயக் கோளாறுகளுடன் பிறக்கிறார்கள். அவர்களில் சிலர் ஓராண்டிலேயோ இரண்டு, மூன்று ஆண்டுகளிலோ உயிரிழந்துவிட்டனர். அனைவருக்கும் அற்பாயுள்தான் என்றாகிவிட்டது. பெரும்பாலான இதயக் கோளாறுகள் வால்வில் உள்ள குறைபாடுதான் காரணம். அவற்றை 2,500 டாலர் முதல் 3000 டாலர் வரை செலவிட்டால் செய்துவிடலாம். அதனால், எங்கள் நாட்டில் உள்ள ரோட்டரியினர் இணைந்து மனித வால்வு வங்கி உருவாக்கினர். அதை கடந்த ஆண்டு RI தலைவர் இயான் ரிஸ்லி தொடங்கி வைத்தார். இலங்கையில் பவுத்த மதத்தினர் அதிகம் உள்ளனர். கண்தானம், சிறுநீரக தானம் ஆகியவற்றைப் போல் இதய வால்வு தானத்திலும் அவர்கள் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். அவற்றை வங்கியில் சேமித்து குறையுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு அளித்து உதவுகிறார்கள். இது ரோட்டரியே முழுக்க முழுக்க செயல்படுத்தும் திட்டமாகும். ரோட்டரியினரே முழுக்க ஈடுபடுகிறார்கள்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இன்னொரு ரோட்டரி திட்டம் மன நலம் குன்றிய குழந்தைகளுக்குத் திறன் பயிற்சி அளிப்பதாகும். குழந்தைகளை வேலை செய்வதற்குத் தகுதியானவர்களாக உருவாக்கும் இத்திட்டத்தில் இரு கார்ப்பரேட் நிறுவனங்கள் ஒத்துழைப்பு தருகின்றன. இலங்கையில் ரோட்டரி இல்லாவிட்டால் வறுமையான நாடாகவே இருந்திருக்கும் என்றார்.

RID 3202 உறுப்பினர்கள் பெரிய திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். அதே சமயம் தனி நபர்களுக்கும் கருணையோடு உதவ வேண்டும். அண்மையில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளில் சிக்கியவர்களுக்கு உதவிக்கரம் நீட்டினீர்கள். அதுதான் ரோட்டரியின் உங்களது மாவட்டத்தில் நீங்கள் செலுத்திய உண்மையான ஈடுபாடும் உற்சாகமும் ஆகும் இவ்வாறு ரவீந்திரன் பேசினார். ■

புல்வாமா தியாகிகளுக்கு வீரவணக்கம்

ரோட்டரி செய்திக்குழு

ஜெய்ப்பூர் பிர்லா ஆடிட்டோரியம் முன் ரோட்டரியினர்.

பிப்ரவரி 14 அன்று ஜம்மு காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் உள்ள லேத்போராவில் ஜம்மு ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில், பாதுகாப்பு படையினர் சென்று கொண்டிருந்த வாகனங்கள் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. சிஆர்பிஎஃப் வீரர்கள் மற்றும் தாக்குதல் நடத்தியவன் உட்பட இந்த தாக்குதலில் 40 பேர் பலியாகினர். இந்தத் தீவிரவாத தாக்குதல் நாட்டு மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

தாக்குதலில் தன்னுயிர்களை தியாகம் செய்த படை வீரர்களை நினைவு கூறும்வகையிலும், உலக அமைதியை முன்னிறுத்தும் விதமாகவும், பிப்ரவரி 17 அன்று ஜெய்ப்பூர் ரோட்டரி சங்கம் RID 3054 சைக்கிள் பேரணியை நடத்தியது.

ஒரு மணிநேரம் நடை பெற்ற இந்த பேரணியில் சுமார் 25 ரொட்டேரியன்கள் கலந்துகொண்டனர், இதை D 3211 PDG KS சசி குமார், பிர்லா ஆடிட்டோரியத்தில் இருந்து கொடியசைத்து தொடங்கி வைத்தார், பேரணியில் பங்கேற்றவர்கள், ஸ்டேச்சு சர்க்கிள், MI ரோட்டில் உள்ள ஜெய் கிளப், ஜாஹ்ரி பஜார், ஹவா மஹால் வழியாகப் பயணித்து ஆடிட்டோரியத்தை வந்தடைந்தனர். பிறகு ரொட்டேரியன்கள் அமர் ஜவான் ஜோதி ஸ்மாரக் இடத்தில் உயிர்நீத்த படைவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தினர்.

பிர்லா ஆடிட்டோரியத்தில் நடைபெற்ற இரண்டு நாள் மாவட்ட மாநாடு ‘சனித்யா’வின் முக்கிய அமர்வுகளுக்கு இடையே இந்த பேரணி நடத்தப்பட்டது. ■

GOLDEN OPPORTUNITY
to Meet Global Leaders

Traditional South Asian Reception

RI Convention, Hamburg, Germany

RID C. Basker & Malathi Basker

We cordially invite
you to the
Traditional
South Asian Reception
on June 1, 2019, Saturday
at
Hotel Grand Elysee Hamburg
between
05.00 pm – 07.00 pm

Venue:
Hotel Grand Elysee Rothenbaumchaussee 10,
D-20148 Hamburg, Germany
Tel: +49 40 41412-748

Chairman - PDG Dr. E.K. Sagadhevan
& Dr. Usha, RID 3202

The registration charges per person is Rs. 5000 (EUR 65 / US $ 75)

For NEFT
Bank Name: Axis Bank Account Name: E K Sagadhevan, A/c No: 915010014574348
Branch: Gandhiji Road B ERD IFSC: UTIB0002146, Axis bank Swift code.AXISINBB118

Payment can be made by cheque payable at par or DD favouring E.K. Sagadheven
Payable at ERODE, TAMIL NADU and send to:

PDG Dr EK Sagadhevan, Chairman – South Asian Reception
Lotus Hospital, 90, Thayumanavar Sundaram Street, Kollampalayam,
Erode – 638 002 Tamil Nadu, India Mob: +91 99944 77725E-mail: pdgdrsaga@gmail.com

புதிய வீடுகள் கட்டுவதற்கு பூமி பூஜை

ரஷீதா பகத்

கேரள மாநிலத்தில் ஏற்பட்ட மழை வெள்ளம் குறித்து ஊடகங்களில் அதிகமான செய்திகள் வெளியாயின. காரணம், ஏராளமான உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் ஆகும். அதைப் போல், கர்நாடக மாநிலம் குடகு மலைப் பகுதியில் நிலச்சரிவுகள் ஏற்பட்டு ஏராளமான வீடுகள் நாசமாகியுள்ளன.

பாதிக்கப்பட்டோருக்கு உடனடி நிவாரண உதவி அளிக்கப்பட்ட பிறகு அவர்களுக்கு உதவுவதற்காக RID 3181 சேர்ந்தவர்கள் ஓர் அறக்கட்டளையை உருவாக்கியுள்ளனர். RI 3181 மாவட்ட வெள்ள நிவாரண நிதி (RID 3181 Flood Relief Fund) என்று உருவாக்கப்பட்டுள்ள அறக்கட்டளை மூலம் வெள்ளம், நிலச்சரிவால் பாதிக்கப்பட்டோருக்கு வீடுகள் கட்டித் தரப்படுகின்றன.

குடகு பகுதி மலைப்பிரதேசங்களில் 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் ஹெக்டேர் வரை காபித் தோட்டங்கள் உள்ளன. அங்குதான் நிலச்சரிவுகள் நேர்கின்றன. அவற்றினால், பல வீடுகள், குறிப்பாக, தோட்டத் தொழிலாளர்கள் வசிக்கும் வீடுகள் சேதமடைந்துள்ளன.

அதனால், எங்களது மாவட்டத்தையும் அருகிலுள்ள பல்வேறு ரோட்டரி அமைப்பினரும் ரோட்டரி நியூஸ் அறக்கட்டளை யும் இணைந்து இந்த அறக் கட்டளையை உருவாக்கியுள்ளனர். பாதிக்கப்பட்டோருக்கு மொத்தம் ரூ.1.25 கோடியில் 25 வீடுகளைக் கட்டித் தருவது என்று முடிவு செய்யப் பட்டுள்ளது என்று முன்னாள் ஆளுநர் Dr K ரவி அப்பாஜி தெரிவித்தார்.

இந்தப் பணியில் மானுடத்துக்கான வாழ்விடம் (Habitat for Humanity India) என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனமும் இணைந்துள்ளது. முதல் கட்டமாக ரூ.30 லட்சத்துக்கான காசோலை அந்தத் தன்னார்வத் தொண்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அதில், முதல் கட்டமாக தலா ரூ.5 லட்சம் மதிப்பிலான ஆறு வீடுகள் கட்டித் தரப்படும். ஒவ்வொன்றும் 320 சதுர அடிப் பரப்பில் அமைந்திருக்கும்.

அதில் இரு வீடுகளுக்கான பூமி பூஜை அண்மையில் நடைபெற்றது. RID C பாஸ்கர், மாவட்ட ஆளுநர் P ரோஹிநாத் ஆகியோர் பங்கேற்றனர்.

வீட்டு மனை கட்ட பூமி பூஜையில் RID C பாஸ்கர் மற்றும் PDG K ரவி அப்பாஜி மற்றும் DG P ரோஹிநாத்.

அப்போது அங்கே வந்திருந்த பாஞ்சாலி என்ற கிராமப்பெண்ணின் கண்களில் மகிழ்ச்சியைப் பார்க்க வேண்டுமே அவ்வளவு மன நிறைவு என்றார் பாஸ்கர்.

நிலச்சரிவின் போது பாதிக்கப் பட்டோரின் நிலங்களுக்கு உரியவர்கள் உள்ளூர் கிராம ஊராட்சி, ஹாபிடாட் நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் கண்டறியப்பட்டனர். முழுமையாகச் சேதமடைந்த வீடுகளுக்கு மாற்றாக வீடுகளைக் கட்டித் தருவதற்கு ரோட்டரி முன் வந்துள்ள நிலையில், கர்நாடக மாநில அரசு ஓரளவு சேத மடைந்த வீடுகள் உள்பட மொத்தம் 850 வீடுகளைக் கட்டித் தர முன் வந்துள்ளது என்று அப்பாஜி தெரிவித்தார்.

முதல் கட்டப் பணியில் வீடுகளை மே மாத இறுதிக்குள் பருவமழை தொடங்கு முன்பு கட்டி முடிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற் கொள்ளப்படும். ஒரு படுக்கையறை உள்ள இந்த வீடுகளில் எதிர்காலத்தில் தேவைக்கு ஏற்ப கூடுதல் கட்டணத்தில் மேலும் ஓர் அறையைக் கட்டிக் கொள்வதற்கான வசதியும் உள்ளது.

பூமி பூஜை நிகழ்ச்சியில் RID C பாஸ்கர், முன்னாள் மாவட்ட ஆளுநர் அப்பாஜி ஆகியோருடன் மாவட்ட ஆளுநர் ரோஹிநாத், முன்னாள் ஆளுநர் கிருஷ்ணா ஷெட்டி, ஹாபிடாட் தொண்டு நிறுவனத்தின் மூத்த இயக்குநர் சஞ்சய் தஸ்வானி ஆகியோரும் பங்கேற்றனர்.

வீடு கட்டித் தரும் இந்தப் பணிக்கு உதவ முன்வருவோர், நன்கொடை அளிப்பதற்கான விவரம்:
RID 3181 Flood Relief Trust;
A/c No. 0178101016769;
Canara Bank, Mangalore;
IFSC Code CNRB0000178.■

அமைதிகுலைந்த நேரத்தில் சமாதானத்தை அமைத்தல்

ரோட்டரி செய்திக்குழு

மாநில அளவிலான குழுக்களின் மூலம் அமைதி மற்றும் நல்லெண்ணத்தை முன்னெடுக்க ஒரு ஐந்து-அம்ச செயல்திட்டம் உருவாக்கப்பட்டது, அமைதிக் கூட்டங்களை ஏற்படுத்த இந்த குழுக்கள் அமைக்கப்படும். இதுதவிர, வழிபாட்டு இடங்களுக்கு மாணவர்கள் மற்றும் இளைஞர் அழைத்துச் செல்லப்படுவார்கள், இந்த இடங்களை அடிக்கடி பார்வையிடுவதன் மூலம் சமயங்களைப் பற்றி அவர்களால் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும்.

இது குருகிராமில் சமீபத்தில் நடைபெற்ற மூன்று நாள் தேசிய அமைதி மாநாட்டில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவாகும் மற்றும் இதில் மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 30-க்கும் அதிகமான ரொட்டேரியன்கள் கலந்துகொண்டனர். PDGக்களுடன் DG குஸ்தாத் அங்லேஸரியா, DGE தீரன் தத்தா, DGN கஜேந்திர நராங், போன்றோர் அமர்வுகளுக்கு தலைமை வகித்தனர். ஒவ்வொரு ஆண்டும் மாநாட்டை ஏற்பாடு செய்யும் தேசிய அமைதி இயக்கத்தின் தலைவர் ரொட்டேரியன் வர்கீஸ் அலெங்காடென் அவர்களை அவருடைய ஓய்வில்லா முயற்சிக்கு அங்லேஸரியா பாராட்டுத் தெரிவித்தார்.

தனியாகச் செயல்பட்டு, சாதக மனப்பான்மையுடன் அமைதிக்காக பாடுபடவேண்டும் என்று கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் வார்த்தைகளில் இருந்து உத்வேகத்தைப் பெற்று அலெங்காடென் பேசினார். அமைதி உருவாக்கம் மற்றும் போர் சமரசத்தில் ரோட்டரியின் பங்கைப் பற்றி புனேயைச் சார்ந்த ரொட்டேரியன் பிரதீப் வாக் குறிப்பிட்டு காட்டினார்.



குருக்ராம் அமைதி பேரவையில் DGE தீரன், தத்தா (3040), கிரண் லால் ஸ்ரேஷ்டா (3292), DG குஸ்தாத் அங்லேஸாரியா.

அடுத்த வருட மாநாடு நேபாளத்தில் ஏற்பாடு செய்யவேண்டும் என ஆலோசனை தெரிவித்தார் RID 3292, DGE கிரண் லால் ஸ்ரேஷ்தா, அத்துடன் அதற்கான முழு ஆதரவையும் தன் மாவட்டம் தருவதாகவும் உறுதியளித்தார். நிறைவு உரையில், சமூகத்தின் நலிவடைந்த பிரிவினருக்கு அதிகாரம் அளிப்பதில் உங்களுடைய அணுகுமுறையைச் செயல்படுத்தி பணியாற்ற வேண்டும் என பிரதிநிதிகளை வலியுறுத்தினார் கனடா நாட்டைச் சேர்ந்த அமைதிக்கான ஒரு சமூக சேவகர், சிறப்பு விருந்தினர் டாக்டர் ஜில் கார்-ஹாரிஸ்.■

கவிதைத் திருவிழா!

ஜெய்ஸ்ரீ

மீரட் நகரில் நடந்த ரோட்டரி மாநாட்டில் அன்றைய தினம் கவிதை வெள்ளம் பெருக் கெடுத்து ஓடியது. வெள்ளம் வந்தால், அதில் மக்கள் மூழ்காமல் கைகொடுக்கும் ரோட்டரியினர் அந்தக் கவிதை வெள்ளத்தில் மூழ்கித் திளைத்தனர். ஆம், RID 3100 இரண்டு நாள் மாநாட்டில் தான் TRF கொடையளித்தல், ரோட்டரியின் மதிப்பு, உறுப்பினர் வளர்ச்சி ஆகிய தலைப்புகளில் கவிதைகள் பாடப்பட்டன. மாவட்ட ரோட்டரி அடுத்தடுத்து ஆண்டுதோறும் இதைப் போன்ற நிகழ்வுகளை நடத்தினால் உற்சாகத்துக்கு எல்லை ஏது?

மாநாட்டின் தலைவர் விகாஸ் குருமுக் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தினார். மத்திய மொராதாபாத் ரோட்டரி சங்க உறுப்பினர் அனுஜ் அகர்வால் இந்த நிகழ்ச்சியில் ஒவ்வொரு பிரதிநிதிக்கும் ஏதாவது மகிழ்வூட்டும் அம்சம் உள்ளது என்று தெரிவித்தார்.

மாநாட்டு நிகழ்வில் திடீரென அசாத்திய அமைதி நிலவியது. மேடையில் இருந்த திரையில் RI தலைவர் பேரி ரஸ்ஸின் தோன்றி, ரோட்டரி மாவட்ட அமைப்பு பள்ளியில் கைகழுவு (WinS) திட்டம், (Measles Prevention) ஆகிய பணிளைச் சிறப்பாக மேற்கொள்வதைக் குறிப்பிட்டு, மாவட்ட ஆளுநர் தீபக் ஜெயினைப் பாராட்டினார். இத்தகைய மனிதாபிமானப் பணிகளில் ரோட்டராக்ட் இளைஞர்களை ரோட்டரி அமைப்பினர் ஈடுபடுத்த வேண்டும் என்று பேரி ரஸ்ஸின் கேட்டுக் கொண்டார். ரோட்டரி பிரதிநிதிகளின் நிலையை ரோட்டரியினர், ரோட்டராக்ட் அமைப்பினரின் தலைமைப் பண்பை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள டோஸ்ட்மாஸ்டர் இன்டர்நேஷனல் (Toastmaster's International) அமைப்புடன் இணைந்து செயல்படுவது என்ற RI அமைப்பின் புதிய திட்டங்கள் குறித்து உடனுக்குடன் அறிவுறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். அதையடுத்து RI பொதுச் செயலாளர் ஜான் ஹேவ்கோவின் செய்தி அளிக்கப்பட்டது.

மேலே: *ராகேஷ் ரஸ்தோகி, DG தீபக் ஜெயின், RIPR சஞ்சய் கேம்கா, AGs உமா சங்கர் கர்க மற்றும் புனித் ஜெயின்.*

கீழே: *RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் தலைவர் D ரவிசங்கரை வரவேற்கும் SC அகர்வால், PDGs ராகேஷ் சிங்கல், லலித் மோகன் குப்தா, ஷிகா சிங்கல், வந்தனா குப்தா, பாரதி மற்றும் RC மொராதாபாத் சென்ட்ரல் தலைவர் அனுஜ் அகர்வால்.*

எதிர்ப்பக்கம்: *கீதா ஜெயின், மம்தா தாமா மற்றும் மீனாக்ஷி கேம்கா.*

RI தலைவரின் பிரதிநிதியான ரோட்டரி மாவட்ட (RID 3250) முன்னாள் ஆளுநர் சஞ்சய் கெம்கா ஆரோக்கியமான ரோட்டரி அமைப்பாகத் திகழ்ந்து துடிப்புடன் நற்பணிகளை ஆற்றவேண்டும் என்று RI அமைப்பின் தலைவர் ரஸ்ஸினின் அளித்த செய்தியை மாநாட்டு மேடையில் குறிப்பிட்டார். ரோட்டரி இயக்கத்தில் தகுதியான தரமான உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டியதன் அவசியத்தையும் TRF நிதியைப் பெற்று பயன்படுத்துவதைப் பற்றியும் விவரித்தார்.

மாவட்ட ஆளுநர் ஜெயின் ரோட்டரி கடந்த சில மாதங்களாக நிறைவேற்றிய பல்வேறு பணிகளை விவரித்தார். பெண்களின் மாதவிடாய் குறித்த பிரச்சினைகளில் விழிப்புணர்வு ஏற்படுத்துவது, சுகாதாரம் ஆகிய திட்டங்களை மாவட்ட ரோட்டரி திறம்பட செயல்படுத்தியுள்ளது. அதற்கு நன்றி கூறுகிறேன். உங்களது ஒருங்கிணைந்த செயல்களால் பல பள்ளிகளில் சானிடரி நாப்கின்கள் வழங்கும் இயந்திரங்களும், கைகழுவுவதற்கான பிரிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன என்றார்.

மாவட்ட ரோட்டரி உறுப்பினர்களான சௌரப் சுமன், அனாமிகா அம்பர், மன்சூர் உஸ்மானி ஆகியோர் உருதுக் கவிதைகளை வழங்கி, பார்வையாளர்களை உற்சாகப்படுத்தியதற்காக அவர் வெகுவாகப் பாராட்டினார்.

மாவட்ட ஆளுநர்கள் ஸ்துதி அகர்வால் (RID 3120), ராஜீவ் சர்மா (RID 3030), அருண்ஜெயின் (RID 3110) ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக மாநாட்டில் பங்கேற்றனர்.

RC பெங்களூர் ஆர்ச்சர்ஸ்ட் தலைவர் D ரவிசங்கர் TRFக்கு தாராள மனத்துடன் பங்களிக்க வேண்டும் என்பது குறித்து ரோட்டரியினரை ஊக்குவிக்கும் வகையில் பேசினார். அத்துடன், ரூ.100 கோடி நன்கொடையா வழங்குவதற்கு எப்படி உத்வேகம் ஏற்பட்டது என்றும் விவரித்தார். தனி நபர்களின் சமூகப் பொறுப்புணர்வு ஒவ்வொருவரிடமும் தோன்ற வேண்டும். ஒவ்வொருவருக்கும் இந்த சமுதாயத்திற்கு ஏதாவது ஆற்றவேண்டிய கடமை இருக்கிறது. அதை யாரும் தூண்டாமல், வலியுறுத்தாமல் தமாமாகவே இயல்பாக நிறைவேற்ற வேண்டும் என்றும் பேசியபோது, கையொலி விண்ணைத் தொட்டது.■

ரூ.40 கோடியில் திட்டங்கள்
புதிய RI தலைவர் மலோனி தொடங்கினார்

ரஷீதா பகத்

ஒரு தனி ரோட்டரி சங்கத்தின் நிகழ்ச்சியில் RI தலைவர் பங்கேற்பது மிகவும் அரிதான சம்பவம். RC கோல்கத்தா மகாநகர் சார்பில் மொத்தம் சுமார் ரூ.40 கோடியில் பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட உள்ளன. அவற்றின் மூலம் 1,50,000 பேர் பலனடையப் போகின்றனர். இத்திட்டத்தைத் தொடங்கி வைக்கிறார் மலோனி. அதற்காக நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்று ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் இயக்குநர் சேகர் மேத்தா கூறினார்.

RC கோல்கத்தா மகாநகர் சார்பில் கோல்கத்தாவில் நடைபெற்ற பிரம்மாண்டமான நிகழ்ச்சியில் சேகர் மேத்தா இதை அறிவித்தார். இத்திட்டங்களில் நான்கு திட்டங்கள் கோல்கத்தா மகாநகர் ரோட்டரி சங்கத்தின் திட்டங்களாகும். மற்ற இரு திட்டங்கள் RID 3291ன் திட்டங்களாகும்.

நிகழ்ச்சியில் பேசிய சேகர் மேத்தா, ஒரே நிகழ்ச்சியில் மொத்தம் ரூ.40 கோடிக்கான திட்டங்கள் தொடங்கப்பட்டது இது போல் உண்டா? அட்லாண்டாவில் நடைபெற்ற மாநாட்டில் போலியோ ஒழிப்புக்காக உலக நாடுகளும் பில் கேட்ஸ் அறக்கட்டளையும் இணைந்து மிகப் பெரிய நன்கொடை தொகைக்கான திட்டத்தைத் தொடங்கியதுதான் என்றார்.

புதிய திட்டத்தின் கீழ் ஆதரவற்ற, மற்றும் கணவனை இழந்த 30 ஆயிரம் பெண்களின் வாழ்வாதாரத்துக்கான தொழில் திறன் பயிற்சி அளிக்கப் படும். நாட்டின் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் தலா ஆயிரம் பெண்கள் இதில் பலன் பெறுவர். இவை தவிர மீதி 5 திட்டங்கள்

DG முகுல் சின்ஹா, கொல்கத்தா மகாநகர் சங்கத் தலைவர் சித்ரா அகர்வால், RIDE கமல் சங்வி, RIPE மார்க் மலோனி மற்றும் ப்ரதீப் ராவத் பள்ளி பிரதிநிதிகளுடன்.

எழுத்தறிவு தொடர்பானவை என்றார் சேகர் மேத்தா.

ரோட்டரி சங்கத் தலைவர் சித்ரா அகர்வால் பேசுகையில், 145 பள்ளிகளுக்கு மின்வழிக் கல்விக்கான உபகரணங்கள் (e-learning kits) வழங்கப்படும். 300 ஆசிரியர்களுக்கு இது குறித்த பயிற்சி அளிக்கப்படும். மொத்தம் 4 லட்சம் டாலர் உலகளாவிய மானியத்தின் கீழ் இவை நிறைவேற்றப்படும் என்றார்.

எங்களது ரோட்டரி சங்கம் இதுவரை ஆயிரம் குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சை நடத்தி முடித்திருக்கிறது. இரண்டாயிரம் இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. வயது வந்த 10 ஆயிரம் பேருக்கு கண் அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டுள்ளது என்றார்.

ரோட்டரி சங்கம் தொடங்கிய மேலும் இரு பெரிய திட்டங்களில்

இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்படு வோருக்கு கடந்த பத்தாண்டுகளாக தங்குமிடங்களை இச்சங்கம் ஏற்பாடு செய்து வருகிறது. இதுவரை 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு அடைக்கலம் அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் எங்களது ரத்த வங்கியும் உள்ளது என்றார்.

கட்டாயக் கூட்டாளி

எழுத்தறிவுத் திட்டத்தில் இந்திய அரசுடன் போட்டி போட்டுக் கொண்டு இச்சங்கம் சேவை புரிகிறது என்று கூறிய சேகர் மேத்தா, இந்திய அரசு நாடு முழுவதும் மின்வழிக் கல்விக்கான உபகரணங்களை ஒன்றரை லட்சம் பள்ளிகளுக்கு வழங்கியுள்ளது. நாங்கள் இரண்டு லட்சம் பள்ளிகளுக்கு வழங்க இருக்கிறோம். அத்துடன் ஆஷா கிரண் திட்டத்தின் கீழ் சிறுவர்களை மீண்டும் பள்ளிக்கு அனுப்பும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றார்.

மலோனி தொடங்கி வைத்த மூன்று உலகளாவிய திட்டங்களில் எங்களது சங்கம் 10 உலகளாவிய நிதியுதவி திட்டங்களைத் தொடங்கியுள்ளது. RI விசாரித்த போது, இது போல் ஒரே நிகழ்ச்சியில் உலகளாவிய நிதியின் கீழ் 10 திட்டங்கள் செயல்படுத்தப்படுவது மிகவும் அரிதானது என்று தெரிவித் தனர். பேலூர் ரோட்டரி சங்கத்திற்கு 8 உலகளாவிய நிதியுதவித் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன என்றார் அவர்.

இந்த சங்கம் ஏற்கெனவே 145 பள்ளிகளுடன் மேலும் 100 பள்ளிகளில் மின்வழிக் கற்றல் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இது அப்பள்ளிகளில் பயிலும் 75 ஆயிரம் சிறுவர்களின் பாதையையே மாற்றிவிடும்.

கடந்த ஆண்டு இங்கிலாந்தில் உள்ள லார்டு லூம்பா நிறுவனத்துடன் அதன் தலைவர் செர்ரி ப்ளேர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி 30 ஆயிரம் ஆதரவற்ற பெண்களுக்குத் தொழில் திறன் பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டது. இதற்காக TRFக்கு லூம்பா நிறுவனம் 10 லட்சம் டாலர் (சுமார் ரூ.7 கோடி) அளிக்க முன்வந்துள்ளது. அதற்கு இணையான தொகையை இந்திய ரோட்டரி சங்கங்கள் வழங்கும். மொத்தம் 20 லட்சம் டாலர் செலவில் (சுமார் ரூ. 14 கோடி) இது நிறைவேற்றப்படும். இதற்கு முதல்கட்டமாக ஐந்து நிதியுதவி திட்டத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டு விட்டது. மேலும் நான்கு நிதியுதவித் திட்டத்திற்கு கிடைக்கிறது. மேலும் ஐந்து நிதியுதவித் திட்டங்களுக்கான விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டு விட்டன. 10 ரோட்டரி மாவட்ட அமைப்புகளில் ஏழு அமைப்புகள் இத்திட்டத்தைச் செயல்படுத்துகின்றன. அவற்றின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற நேபாளம் மற்றும் வங்க தேசம் ஆகிய நாடுகளிலிருந்து வந்து நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களை சேகர் மேத்தா வரவேற்றார்.

ஒரு லட்சம் பேருக்கு நோய் அறிகுறி

சங்கத்தின் ஆறு திட்டங்களைத் தொடங்கி வைத்த RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மலோனி, நல்ல காலம் இந்த முறை திட்டங்களைத் தொடங்க தேங்காய் உடைக்க வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை என்று நகைச் சுவையாகக் குறிப்பிட்டார்.

15 ஆண்டுகளுக்கு முன்பு சூரத் நகரில் ஒரு குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கி வைப்பதற்காக தேங்காய் உடைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டேன். அப்போது தேங்காயை என்னால் உடைக்கவே முடியவில்லை. அண்மையில் எனது நண்பர் ஹிமான்ஷு தாக்கர் அந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே பொதுமக்களுக்குத்

DG முகுல் சின்ஹா, RIDE கமல் சங்வி, RIPE மலோனி, PRID சேகர் மேத்தா மற்றும் ராஷியுடன் இன்னர் வீல் உறுப்பினர்கள்.

தடையின்றி தண்ணீர் கிடைத்ததைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். இங்கே வந்தபோது, அதைப் போல் தேங்காய் உடைக்க வேண்டுமா என்று கேட்டேன். 15 ஆண்டுக்கு முன்பே உடைக்க முடியாத தேங்காயை இப்போது முடியுமா? என்றார் அவர்.

TRF உதவியோடு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது வியப்புக்குரியது என்று கூறிய அவர், இன்று 6 மில்லியன் டாலர் அதாவது ரூ.40 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவதைக் காண்கிறோம் என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், உங்கள் நாட்டில் கோடி, லட்சம் என்று குறிப்பிடுகிறீர்கள். அமெரிக்கர்களாகிய எங்களுக்கு இது புதுசு. கோடி, லட்சம் என்று நீங்கள் கூறுவதைப் புரிந்து கொள்ள எங்களுக்குச் சிரமமாக இருக்கிறது. அந்த எண்களுக்கு இடையில் பல இடங்களில் காற்புள்ளிகளைப் போடுகிறீர்கள். எங்களுக்குத் தெரிந்ததெல்லாம் மில்லியன்தான். இந்தியாவுக்கு 20 ஆண்டுகளாக வந்ததில் கடைசியாக ஒரு லட்சம் என்பது 1,00,000 என்றும் அதை விட பத்து மடங்கு கோடி என்பது பெரியது என்றும் புரிந்து கொண்டிருக்கிறேன் என்றார் நகைச் சுவையாக.

சிறிய பணி, சீரிய பலன்!

தொடர்ந்து பேசிய மலோனி, கோல்கத்தா மகாநகர் ரோட்டரி சங்கமும், RID 3291ம் செய்யும் பணிகள் ஈர்க்கக் கூடியவையாக உள்ளன. TRF மேற்கொள்ளும் திட்டங்கள் எல்லாமே பெரியதாக கோடிக் கணக்கிலானவையாக இருக்க வேண்டியதில்லை.

கடந்த அக்டோபர் மாதம் கரிபியன் கடலில் உள்ள தீவுகளில் ஒன்றான செயின்ட் தாமஸில் ஒரு திட்டத்தைப் பார்வையிடச் சென்றேன். நான் சார்ந்த டெகாடூர் ரோட்டரி சங்கத்தினரும் என் மனைவி சார்ந்த ரோட்டரி சங்கமும் செயின்ட் தாமஸ் (கிழக்கு) இணைந்து குடிநீர் சுத்திகரிப்பு சாதனங்களை வழங்கினோம்.

அத்திட்டம் மிகவும் எளிமை யானது. அந்த உபகரணத்தை எப்படி இயக்குவது என்று எளிய வழியில் விளக்கிவிட்டு அவற்றை வழங்குவதுடன் முடிந்துவிடும். அதற்கான திட்டச் செலவு 8000 டாலர் (சுமார் ரூ.5.6 லட்சம்) மட்டுமே. இருந்தாலும் அந்த எளிய திட்டத்தின் மூலம் கிடைக்கப் போகும் பலன் பெரியது. காரணம், அத்தீவில் 2017ம் ஆண்டு சூறைக்காற்று தாக்கியபோது, நீர் நிலைகள் பெரிதும் பாதிக்கப்

பட்டது. குடிக்க முடியாத நீர்தான் கிடைத்தது. மக்கள் குடிநீருக்காக மாதம் 40 டாலர் முதல் 150 டாலர் வரை செலவிட வேண்டியிருந்தது.

அது மட்டுமல்ல, பிளாஸ்டிக் தண்ணீர் புட்டிகள், கேன்கள் சேர்ந்து விட்டன. அவற்றை அழிக்கவோ, மறுசுழற்சி செய்வதோ அவர்களுக்கு மிகப் பெரிய இடர்ப்பாடாக இருந்தது. அதற்குச் சரியான தீர்வு வெறும் 10 டாலர் மதிப்பிலான தண்ணீர் சுத்திகரிப்பு சாதனம் போதும். அங்கே தான் TRFகை கொடுக்கிறது. இது உலகளாவிய நிதியுதவித் திட்டத்தில் செயல்படுத்தப்படவில்லை. மூன்று ரோட்டரி சங்கங்கள் இணைந்து மாவட்ட அளவிலான நிதியுதவித் திட்டத்தில் செயல்படுத்தப்படுவதாகும். அதனால், பல ஆயிரம் டாலர் செலவு மிச்சப்படும். அத்துடன் அந்தச் சின்னத் தீவுக்கும் பாதிப்பு குறையும் என்றார்.

TRFன் மாயா ஜாலம்!

மேலும் பேசிய மலோனி, இது போன்ற சேவைகளில் TRFன் செயல்பாடு வியப்பளிக்கிறது. ஒரு புறம் பல கோடி மதிப்பில் பெரிய பெரிய திட்டங்களைச் செயல்படுத்த ஆதரவளிக்கிறது. மறுபுறம் மிக மிகக் குறைவான திட்டங்களுக்கும் அனுமதி அளிக்கிறது.

TRF தொடங்கியது முதல் பல திட்டங்களுக்கு 470 கோடி டாலர் அளித்துள்ளது. அந்த நிதி உலகில் அமைதி, நோய்த் தடுப்பு, சுத்தமான தண்ணீர், சுகாதார வசதி, தாய் - சேய் நலம், கல்வித் திட்டம், உள்ளூர் பொருளாதார வளர்ச்சி என உலகம் முழுவதும் பல்வேறு பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது என்றார்.

கடந்த ஆண்டு ரோட்டரி இயக்கம் தனது பணியின் இரண்டாவது நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. 36 கோடி டாலர் நிதியைத் திரட்டுவது எங்களது லட்சிய இலக்காகும்.

2017-18ம் ஆண்டில் மொத்தம் 414.7 மில்லிடன் டாலர் (ரூ.3000 கோடி) திரட்டியதை டொராண்டோ சர்வதேச மாநாட்டில் நினைவுகூர்ந்த ரோட்டரி அறங்காவல் குழுத் தலைவர் பால் நெட்செல், இது TRFன் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஆண்டு என்று குறிப்பிட்டு பாராட்டினார். இந்த நிதியெல்லாம் உலகில் பொதுமக்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படுகிறது என்று கூறினார்.

ரோட்டரியினர் போலியோ ஒழிப்பில் முழுக்கவனத்துடன் ஈடுபடுங்கள் என்றும் அதற்காக ஆண்டுதோறும் குழந்தைகளுக்குச் சொட்டு மருந்தினைத் தவறாமல் செலுத்துங்கள் என்றும் வலியுறுத்தி னார் மலோனி. இரண்டாவது, RI மாவட்டங்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை முற்றிலும் சமுதாய நன்மைக்காக செலவழிக்க வேண்டும் என்றார். மேலும், அந்த நிதி ஏதோ சேமிப்பிற்காக கொடுக்கப்படவில்லை என்றும் வலியுரித்தினார்.

ரோட்டரியினரின் மூன்றாவது முன்னுரிமை TRF வலுப்படுத்துவது தான். ஆண்டுதோறும் நிதியுதவி செய்து, அறக்கட்டளைக்கு 2015ம் ஆண்டில் மொத்தம் 2.025 பில்லியன் டாலர் நிதி சேர்க்கவேண்டும். இந்த மூன்று முன்னுரிமைகளும் அடுத்த நூற்றாண்டில் TRF வலுப்படுத்தும். ரோட்டரி அமைப்பையும் வலுப்படுத்தும்.

மகளிர்க்கு அதிகாரமளித்தல்

நிகழ்ச்சியில் பேசிய RIDE கமல் சங்வி, லார்டு லூம்பாவுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் தொழில் திறன் பெற்றுப் பயன்பெறப் போகும் 30 ஆயிரம் பெண்களை மனமார வரவேற்பதாகக் கூறினார்.

பெண்களுக்கு உயர்வு அளித்தால், அடுத்து சர்ச்சைகள் குறையும். 72 நாடுகளில் 1995ம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வுப் படி பெண்களின் கல்விக்கும் தொழிலுக் கும் 1975ம் ஆண்டில் முதலீடு செய்த நாடுளில் 10 ஆண்டுகளில் சிசு மரணம் 68 சதவீதம் குறைந்தது தெரியவந்துள்ளது. பெண்களுக்கு வாய்ப்புகளும் கல்வியும் அளிப்ப தால் ஏற்படும் வலிமை இதுதான். சர்ச்சைகள், பிரச்சினைகள் தீர வேண்டுமானால், எந்த நாடும் பெண்களுக்கு அதிகாரமளிக்க வேண்டும். அதை இத்திட்டத்தின் மூலம் நாம் செயல்படுத்தப் போகிறோம் என்றார்.

கூட்டத்தில் பேசிய மாவட்ட ஆளுநர் முகுல் சின்ஹா இந்தியா வில் எங்களது மாவட்ட ரோட்டரி தொடங்கி அடுத்த ஆண்டு நூறு ஆண்டு ஆகப் போகிறது. 2020ஆம் ஆண்டு ஐ.நா. சபை தனது 75வது ஆண்டைக் கொண்டாடும் சமயத்தில், இந்திய ரோட்டரி 100வது ஆண்டைக் கொண்டாடப் போகிறது என்றார்.

PRID மேத்தா, இன்னர் வீல் உறுப்பினர்கள் ஓர் எழுத்தறிவுத் திட்டத்திற்கு மொத்தம் $19,500 நிதியைத் திரட்டியுள்ளனர் என்றார். பெண்களிடையே கருப்பை வாய்ப் புற்றுநோய் வராமல் தடுப்பதற்காக தடுப்பு மருந்து அளிக்கும் திட்டம் தொடங்கப்பட்டது என்றார்.■

Rotary PEOPLE OF ACTION

அமராவதி மிட்டவுனின் உற்சாகமான திட்டங்கள்

ரஷீதா பகத்

மகாராஷ்டிர மாநிலம் அமராவதி நகரில் ரோட்டரி தலைவர்களாகவும் செயலாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டோருக் கான பயிற்சிக் கருத்தரங்கு (PETS மற்றும் SETS) நடைபெற்றது. D3030 இதற்கு ஏற்பாடு செய்திருந்தது. RIPE மார்க் மலோனி அமராவதி நகரில் அமராவதி மிட் டவுண் ரோட்டரி சங்கத்தின் செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களைக் காண ஆர்வம் செலுத்தினார். நாற்பது ஆண்டுப் பழைமை வாய்ந்த அந்த சங்கத்தில் மொத்தம் 180 பேர் உறுப்பினர்கள்.

அமராவதியில் டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக் மருத்துவக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள தாய்ப்பால் வங்கி மற்றும் அடைகாப்பு மையம் ஆகியவற்றைப் பார்வை

ப்ளாஸ்டிக் அறுவை சிகிச்சை முகாமில் RIPE மார்க் மலோனி, PDG கிஷோர் கேடியா மற்றும் RIDE பரத் பாண்டியா.

யிட்டார். RIDE பரத் பாண்ட்யா உடனிருந்தார். இதனை அமராவதி மிட்டவுண் ரோட்டரி சங்கம், RID 3030, அமெரிக்காவில் உள்ள கவ்டியர் ரோட்டரி சங்கம், RI மாவட்டம் (RID 6840) ஆகியவை இணைந்து உலகளாவிய நிதியுதவியின் கீழ் அமைத்துள்ளன.

அந்த மையத்தில் பணியில் இருந்த நர்சுகள் மார்க் மலோனியிடம் அதன் செயல்பாடுகள் குறித்து விவரித்தனர். பாலூட்டும் நிலையில் உள்ள தாய்மார்களிடமிருந்து பால் பெறப்பட்டு, உரிய வகையில் சேமிக்கப்பட்டு, தாயை இழந்த குழந்தைகள், பால் கொடுக்க இயலாத தாய்மாருக்குப் பிறந்த குழந்தைகளுக்கு வழங்கப்படும் என அவர்கள் விளக்கினர்.

மாவட்ட முன்னாள் ஆளுநர் கிஷோர் கெடியா இரு தாய்ப்பால் வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். ஒரு வங்கி மருத்துவ மனையிலும் இன்னொரு தாய்ப்பால் வங்கி 6 கி.மீ. தொலைவில் அமைக்கப்பட்டுள்ளது என்றார். தாய்ப்பால் வங்கி அமைக்கலாம் என்பது ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த குழந்தை நல மருத்துவர் Dr ராஜேஷ் பூப் அளித்த யோசனை. பல்வேறு காரணங்களால் குழந்தைகளுக்குப் போதிய தாய்ப்பால் கிடைப்பதில்லை. எனவே, இதற்காக ஒரு தனி வங்கியை அமைக்கலாம் என்று யோசனை கூறினார் என்றார் கிஷோர்.

நன்கொடையாளர்களில் ஒருவரான காவ்யா ஜக்மலானி மார்க் மலோனிக்கு அறிமுகம் செய்யப்பட்டார். காவ்யா ஒரு ரொட்டேரியனின் மனைவி ஆவார். அவர் தனது தாய்ப்பாலை இந்த வங்கிக்கு அளித்துள்ளார். இப்படி சமூகத்துக்குப் பயனுள்ள காரியத்தைச் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு பெண் என்ற முறையில் ஒரு குழந்தைக்குப் பால் அளிப்பதைத் தனிப்பட்ட சலுகையாகக் கருதுகிறேன்.

தாய்ப்பால் வங்கியை அடுத்து மார்க் மலோனி அங்குள்ள எரிவாயுவால் இயங்கும் மயானத் தைப் பார்வையிட்டார். அந்த மயானம் பிரேசில் நாட்டின் ரோட்டரியுடன் இணைந்து அமராவதி மிட் டவுண் ரோட்டரி சங்கம் உருவாக்கியதாகும். இரு ரோட்டரி சங்கங்களும் சமமான தொகையை அளித்து உதவி யுள்ளன. ரூ.1.4 கோடி மதிப்பில் அமைக்கப்பட்ட இந்த மயானத்தை கெடியா மாவட்ட ஆளுநராக இருந்தபோது 2013-14ம் ஆண்டில் திறந்து விடப்பட்டது. இதற்கு அவர் தனது பெற்றோர் பெயரில் ரூ.21 லட்சம் நன்கொடையாக அளித்தார்.

அந்தப் பகுதியில் வசிக்கும் பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் குறித்துக் கண்டறிவதற்கான மார்பக ஊடுகதிர்ப் படக் கருவி வசதி (Mammography) கொண்ட மருத்துவ வேனை இருவரும் பார்வையிட்டனர். இம்மாவட்டத்திற்கு உட்பட்ட சில

Dr பரத் ஷாவுடன் ரோட்டரி தலைவர்கள். சங்கத் தலைவர் சுஷில் சிக்ச்சியும் உள்ளார்.
இடது பக்கம்: Dr பஞ்சாப்ராவ் தேஷ்முக் மருத்துவ கல்லூரியில் அமைந்துள்ள தாய்பால் வங்கி.

ரோட்டரி சங்கங்கள் TRF நிதியைப் பெறுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளன. எனினும், அந்த சங்கங்கள் தங்களது உறுப்பினர்கள் சமூகப் பணி ஆற்றுவதற்குத் தடை செய்யவில்லை. கடந்த ஆண்டு ரூ.3 கோடி மதிப்பில் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளோம். மார்பக ஊடுகதிர் வசதியை அமைத்துத் தருவதற்கு மட்டும் ரூ.1.1 கோடி ஆயிற்று என்றார். அதில் கெடியா தனது சொந்தப் பங்காக ரூ.11 லட்சத்தை அளித்துள்ளார். மீதமுள்ள தொகை ரோட்டரி சங்க உறுப்பினர்களிடமிருந்தும் மக்களிடமிருந்தும் பெறப்பட்டன.

கார்ப்பரேட் நிறுவனங்களின் சமூக நிதியம் (CSR funds) குறித்து கேட்டதற்குப் பதிலளித்த மாவட்ட முன்னாள் ஆளுநர் கிஷோர் கெடியா, அமராவதியில் இது சாத்தியமில்லை. காரணம் விவசாய நகரம் என்பதால் இங்கு கார்ப்பரேட் நிறுவனங்கள் அதிகமில்லை என்றார்.

மேலும், இது வறட்சி பாதித்த இடம் என்பதால், பல விவசாயிகள் வறுமை காரணமாகத் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அவர்களது குடும்பங்களுக்குத் தலா ரூ.20 ஆயிரம் நிவாரணம் நமது ரோட்டரி சங்கம் அளித்துள்ளது. அத்துடன் 80 விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்காக ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்ற தொழில்களைத் தொடங்கி நடத்த உதவி அளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு எய்ட்ஸ் பாதிப்புக்கு ஆளானோருக்கு சத்தான உணவு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது என்றார்.

மலோனியும், பாண்ட்யாவும் 110 பேருக்கு பிளாஸ்டிக் சர்ஜரி அளிக்கும் மருத்துவ முகாமுக்குச் சென்றனர். அமராவதி, அரசு பல்நோக்கு மருத்துவமனையில் இரு தினங்கள் அந்த முகாம் நடைபெற்றது. மூத்த பிளாஸ்டிக் சர்ஜன் டாக்டர் பரத் ஷா தலைமையில் இந்த முகாம் நடத்தப்பட்டது. ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த அவர் கடந்த 25 ஆண்டுகளாக இந்த முகாமை நடத்தி வருகிறார். ரோட்டரி சங்கத் தலைவர் Dr சுசீல் சிக்சி, இந்த முகாம் 25 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது என்றார். முறையான பரிசோதனைகளுக்குப் பின் 110 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டு பிளாஸ்டிக் சர்ஜரி நடத்தப்படுகிறது என்றார்.

மருத்துவமனை வார்டுகளுக்கு விஜயம் செய்த மலோனி; நோயாளிகள் எப்படி சிகிச்சைக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள், எந்த வகையான பாதிப்பு பரவலாக இருக்கிறது என்று கேட்டார்.

எரிவாயு மயானத்தில் DGE ஷபிர் ஷகிர், DG ராஜீவ் சர்மா, RIPE மார்க் மலோனி, RIDE பரத் பாண்டியா மற்றும் PDG கிஷோர் கேடியா.

டாக்டர் ஷா, இதற்கு முன்னதாக பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. அது குறித்து சமூக ஊடகங்கள் வாயிலாகவும் பொதுவான கருத்துப் பரிமாற்றம் மூலமாகவும் இது தகவல் பரப்பப்பட்டது என்றார். அவருக்கு உதவியாக அமராவதியில் உள்ள தனியார் மருத்துவ மனைகளைச் சார்ந்த 12 பிளாஸ்டிக் சர்ஜன்களும் மும்பை மருத்துவமனை யைச் சார்ந்த 3 சர்ஜன்களும் இப்பணியில் ஈடுபட்டனர்.

அவரது மனைவி மகப்பேறு மருத்துவ நிபுணர் Dr ஜாக்ருதி ஷா அவருக்கு 25 ஆண்டுகளாகத் துணை புரிந்து வருகிறார். அத்துடன் அந்த மருத்துவர் குழுவில் அவர்களது 25 வயது மகள் அபூர்வியும் இணைந்துள்ளார். மருத்துவம் படித்த அவர் பிளாஸ்டிக் சர்ஜரிக்கான பயிற்சியைப் பெற்று வருகிறார்.

இந்த முகாமில் பெரும் பாலும் தீக்காயங்களுடன் வருபவர்களே அதிகம். பிளாஸ்டிக் சர்ஜரிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலர் 20, 25 ஆண்டுகளுக்கு முன்பே காயமடைந்தவர்கள் ஆவர். அவர்களில் பெரும் பாலானோர் ஏழைகள், பழங்குடி பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அண்டை மாநிலங்களிலிருந்தும் வந்துள்ளனர். தீக்காயத்துக்கு ஆளான காலத்தில் அவர்களுக்குப் போதிய சிகிச்சைக்கு வழியில்லை. அதனால், அரசு மருத்துவ மனைகளுக்குச் சென்று சிகிச்சை பெறுகிறார்கள் என்று Dr ஜாக்ருதி தெரிவித்தார்.

காவ்யா ஜெத்மலானியுடன் RIPE மலோனி மற்றும் RIDE பரத் பாண்டியா.

முழுச் சிகிச்சை பெறாத தால், நாளாக நாளாக தோலில் சுருக்கம் விழுந்து விடுகிறது என்று டாக்டர் பாண்ட்யா கூறினார்.

முகாமுக்கு வந்த பல பெண்களின் தோலில் சுருக்கம் விழுந்துவிட்டது. அதன் விளைவாகவும் உடலில் மாற்றம் நேருகிறது. இவற்றுக்கு இந்த முகாமில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதனால், பெண்கள் தங்களுக்கு நேர்ந்த இழிவைக் கடந்துவருகிறார் கள். அத்துடன் உடல் நல பாதிப்பினால், வேலை செய்ய முடியாத நிலையும் சிகிச்சையால் நீங்குகிறது என்றார் டாக்டர் ஷா.

பிறவிக் கோளாறு களுடன் பிறக்கும் குழந்தை களுக்கும் இந்த முகாமில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. அண்ணப் பிளவு (cleft palate), கைகள் சுருங்குதல், சிறுநீர் பிரச்சினை போன்றவற்றுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆபரேஷன் செய்வதற்குத் தேவையான உபகரணங் களை வாங்குவதற்காக ரோட்டரி சங்கம் ரூ.5 லட்சம் நிதியை திரட்டியது. மருத்துவமனை கட்டுமானச் செலவுகளை ஏற்றுக் கொள்கிறது.

இத்தகைய சிகிச்சைக்குத் தனியார் மருத்துவ மனைகளில் ரூ.50 லட்சம் வசூலிக்கிறார்கள் என்றார் டாக்டர் ஷா.

சிகிச்சை பெறும் 110 பேரில் 22 பேர் இரண்டு, மூன்று, நான்கைந்து முறை சிகிச்சை பெற வருகிறார்கள். காரணம் அவர்களது உடல் அந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு ஒரே முறை சிகிச்சை தர முடியாது. ரோட்டரி மீது அவர்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருப்ப தால் மீண்டும் வருகிறார்கள் என்றார் Dr ஜாக்ருதி.

கடந்த பல ஆண்டுகளாக எனது தாயும், தந்தையும் செய்யும் அறுவை சிகிச்சை களைக் கவனித்து வந்தேன். அவர்களது பணி உற்சாகம் அளிப்பதாக இருக்கும் என்று டாக்டர் அபர்வா கூறினார்.

புகைப்படங்கள்:
ரஷீதா பகத்

தலைக்கு மேலே கூரை

ஜெய்ஸ்ரீ

கடந்த ஆண்டு கேரளத்தையே புரட்டிப் போட்ட வெள்ளத்தில் வீடு, வாசல் எல்லாம் இழந்த பாதிப்பிலிருந்து அந்த மக்கள் இன்னும் முழுமையாக மீளவில்லை. இயற்கைச் சீற்றத்தால், சுமார் பத்து லட்சம் பேர் வெளியேறி வெவ்வேறு இடங்களில் குடி பெயர்ந்தனர்.

எல்லாம் போச்சு! அழுது அழுது கண்ணில் தண்ணீர் கூட வற்றிவிட்டது என்று வேதனையுடன் புலம்பாத ஆளே இல்லை. சிதலமடைந்த வீடுகள், நாசமாகிப் போன பொருட்கள், வெள்ளக் காடாய் மாறிய வயல்வெளிகள், அழந்துபோன பயிர்கள் இவைதான் எங்கும் தென்படும் காட்சிகள்.

மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எர்ணாகுளம் மாவட்டத்தில் வடக்கு குத்தியகோடு என்ற இடத்தில் ஏழு பேர் உயிரிழந்துவிட்டனர்.

மலையாள நடிகர் ஜெயசூரியா RC கேலிக்கட் மிட்டவுன் உறுப்பினர் ராஜேஷ் சுபாஷ் மற்றும் திட்டத்தலைவர் திலிப் நாராயணனுடன் வீடுகள் கட்ட அடிக்கல் நாட்டுகிறார்.

கொச்சி துறைமுக ரோட்டரி சங்கம் (RID 3211) அங்குள்ள ஒரு குடியிருப்பில் உள்ள 10 குடும்பத்தினரைக் கண்டறிந்தனர். வெள்ளம் ஏற்பட்ட சமயத்தில் அவர்கள் குடியிருந்த பகுதிக்குள் செல்லவே முடியவில்லை. பெரும் பாலானோர் அங்கிருந்து அகற்றப்பட்டு, பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டனர். தண்ணீர் வடிந்த பிறகு, நிவாரணப் பொருட்கள், மருத்துவ உதவி வசதியுடன் அங்கே அணுகினோம். அவர்களில் சில குடும்பத்தினருக்கு தங்கும் இடங்கள் தேவையாக இருந்தன. அதையடுத்து, அவர்களுக்கு வீடுகள் கட்டித் தர முடிவு செய்தோம் என்று திட்டத்தின் தலைவர் திலீப் நாராயணன் கூறினார்.

G சங்கர் தலைமையிலான தி ஹாபிடாட் டெக்னாலஜி குழுமம் (The Habitat Technology Group) வீடுகள் கட்டித் தருவது குறித்தும் வடிவமைப்பு குறித்தும் ஆய்வு நடத்தியது.

சில வீடுகள் முழுமையாகச் செப்பனிட வேண்டியிருந்தது. சில வீடுகள் புதிதாகவே கட்டித் தரப்படவேண்டும். சேதத்தின் அளவை ஒட்டி வடிவமைப்புகள் தயாரிக்கப்பட்டன. மொத்தம் ரூ.36 லட்சம் அளவில் மதிப்பீடுகளைத் தயாரித்தோம் என்று நாராயணன் கூறினார்.

ஆஸ்தர் மருத்துவக் குழுமத்தின் கார்ப்பரேட் சமூகப் பொறுப்புக் குழுத் தலைவரான ரோட்டரி சங்க உறுப்பினர் கிருஷ்ணபிரசாத் உதவியுடன் வீடுகள் கட்டித் தருவதற்காக ஆஸ்தர் நிறுவனத்துடன் உடன்பாடு எட்டப்பட்டது.

அதையடுத்து, கடந்த ஜனவரியில் மலையாள திரைப்பட நடிகை ஜெயசூர்யா வீடுகள் கட்டித் தரும் திட்டத்துக்கு அடி க்கல் நாட்டினார். ரோட்டரி சங்கத் தலைவர் CV இக்னேஷியஸ் முன்னிலை வகித்தார். மலையாளப் புத்தாண்டு தினமான விஷு அன்று (ஏப்ரல் 14ம் தேதி) இந்த வீடுகள் ரோட்டரியின் பரிசாக வழங்கப்பட இருக்கின்றன என்றார்.

RID C *பாஸ்கர்* PDG EK *சகாதேவன், சிவசங்கருடன் வயநாடு பகுதியில் வீடுகளுக்கான அடிக்கலிடுகிறார்.*

வாழ்வாதாரம் மீட்பு

கொச்சியின் புறநகரில் அமைந்துள்ள பரூர் கிராமத்தினரின் வாழ் வாதாரத்தை வெள்ளம் நாசமாக்கி விட்டது.

அதையடுத்து ஜீவதாரா திட்டம் (Project Jeevadhara) என்ற திட்டம் உருவாக்கப்பட்டு, இயந்திரங்கள், கருவிகள் உபகரணங்கள் ஆகியவற்றை 71 குடும்பத்தினருக்கு ரோட்டரி சங்கத்தி னர் அளித்தனர். ரோட்டரியின் சொந்த முயற்சியில் திரட்டப்பட்ட இத்திட்டம் ரூ.10 லட்சம் மதிப்பீட்டிலானது.

தற்போது மேலும் 8 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டத் தருவதற்காக ரோட்டரி உலளாவிய நிதியை சங்கம் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

மேலும் RID 3202வில் DG EK உமர் தலைமையில் ஆஸ்தர் நிறுவனத்துடன் ஒப்பந்தமிட்டு வயநாடு பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 25 குடும்பங்களுக்கு வீடுகள் கட்ட RID C பாஸ்கர் அங்கு அடிக்கல் நாட்டியுள்ளார். ■

பாரம்பரிய உணவுகள்

ரோஹன் கமிசெரில்

சிறப்பு ஏற்பாடு

இரண்டு கோடிப் பேர் வசிக்கும் மும்பை இந்தியாவிலேயே உணவு வகைகளுக்குப் பெயர் போன மாநகரம் ஆகும். உலகில் நியூயார்க், சிங்கப்பூர், ஹாங்காங் போன்ற நகரங்களைப் போலத்தான் மும்பையும். அதே சமயம் சாமானியர்களுக்கு உணவளிக்கும் நகரமாகவும் திகழ்கிறது.

ஆனால், உணவு குறித்து எழுதி வரும் மும்பைவாசி உணவுத் தகவல் நிபுணர் விக்ரம் டாக்டர் இப்படி மேட்டுக்குடி உணவகங்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. சாமானியர்கள், கையேந்தி பவன்கள், வீட்டுச் சமையல் உணவு வகைகள், எளியவர்களுக்கான உணவு வகைகள் குறித்த தகவல்களைத் தேடிப் பிடித்து எழுதிவருகிறார். மும்பையில் உணவு வாழ்க்கை முறை குறித்த தகவல் களஞ்சியமான விக்ரம் டாக்டர் அத்தனை தகவல்களையும் சேகரித்து ஆவணப்படுத்தி வருகிறார். சமையல் கலைஞர்கள், உணவு சுவைஞர்கள், வாசகர்கள், உணவு குறித்து எழுதும் சக எழுத்தாளர்கள் எல்லோரும் கண்டுகொள்ளாத விஷயங்களைத் தேடிப்பிடித்து எழுதி வருகிறார். அவரது எழுத்தில் அனைத்து வகையான தலைப்புகளும் இடம்பெற்றுள்ளன. நவீன இந்திய உணவு முதல் அதன் வரலாறு, பசுமைப் புரட்சியை இந்தியர்கள் எப்படி ஏற்றுக் கொண்டனர் என்று பல வகையான அம்சங்களும் உள்ளன. விக்ரம் டாக்டர் வெளிப்படையானவர். மும்பையில் தனித்துவமான சிற்றுணவுத் தொழில் எப்படி சிறப்பாகச் செயல்படுகிறது என்றெல்லாம் அவர் எழுதியுள்ளார்.

விக்ரம் டாக்டரை அவரது பந்த்ரா அடுக்குமாடிக் குடியிருப்பு வீட்டில் சந்தித்தேன். வீட்டில் ஏராளமான புத்தகங்கள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, சுவையான தேநீர் பிரபல கிறிஸ்துமஸ் கேக் ஆகியவற்றுடன் விருந்து உபசரித்தார். மும்பை மாநகரில் மக்களிடையில் உணவுப் பழக்கத்தில் எப்படியெல்லாம் மாற்றம் வந்துள்ளது என்பதை அவர் அழகாக விவரித்தார். இனி அவருடன் நேர்காணல்:

ரோஹன் கமிசெரில் (RK) : உணவு வகைகளைப் பற்றி எழுதுவதில் எப்படி ஈடுபட்டீர்கள் என்று சொல்ல முடியுமா?

விக்ரம் டாக்டர் (VD): ஆரம்பத்தில் உணவகங்களை பற்றி எழுதிவந்தேன். ஆனால், சீக்கிரமே அலுத்துவிட்டது. அப்போதெல்லாம் மும்பையில் உணவகங்கள் குறைவு. பல வகையான உணவகங்கள் கிடையாது. அது மட்டுமின்றி, உணவகங்களைப் பற்றி எழுதுவதற்கென்று தனி மனப்போக்கு தேவை. அது எனக்கு இல்லை. ஓட்டல் உணவில் (Restaurant Food) ஆர்வம் இருக்க வேண்டும். இந்தியாவில் ஓட்டல் உணவுக்கும் வீட்டுச் சாப்பாட்டுக்கும் நிறைய வேறுபாடு உண்டு. வீட்டுச்
சாப்பாடு ரொம்ப தேவையாக இருப்பதைப் பார்க்கிறேன். இந்திய சமூகத்தில் உணவைச் சுவையான விஷயமாகப் பார்க்கிறார்கள். காரணம் எல்லோருக்கும் உணவு மீது ஆர்வம் இருக்கிறது. அதுதான் அனைவரையும் குறிப்பாக, பெண்களையம் வேலைக்காரர்களையும் கூட இணைக்கிறது. அவர்களது பரம்பரையும் அவர்கள் தயாரிக்கும் உணவில்தான் வெளிப்படுகிறது.

RK: மதிப்புரைகள், விமர்சனங்களை எழுதி வந்த நீங்கள் உணவு குறித்து எழுதிய மாற்றம் எப்படி அமைந்தது? எப்படி வித்தியாசமாகத் தெரிகிறது?

VD: அதெல்லாம் எழுதுவதுதான், அவ்வளவுதான். என்னுடைய அதிர்ஷ்டம் நான் எழுதுவதைச் செப்பனிடும் ஆசிரியர்கள்தான்! என்னுடைய எழுத்து வித்தியாசமாக இருப்பதற்கு நான் செய்யும் ஆராய்ச்சி தான் காரணமாக இருக்கும் எனக் கருதுகிறேன். ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் கட்டுரை எழுத ஆய்வு மேற்கொள்வதுண்டு அல்லவா. இந்த ஆதாரத் தகவல்களை பொதுவாக யாரும் அணுகுவதில்லை. அவ்வளவுதான். இந்தியா முழுவதும் விவசாயம் குறித்த ஆராய்ச்சி நிறுவனங்களின் அற்புதமான கட்டமைப்பு குறித்து மக்கள் அறிவதில்லை. அது ஒரு வகையில் பிரிட்டிஷ் பாணியையும் இன்னொரு வகையில் நமது

கிராமப்புறத்தையும் பின்பற்றுவதாகும். எல்லாவற்றுக்குமான வேளாண் ஆய்வு நிறுவனமும் இருக்கிறது.

இந்த ஆய்வு நிறுவனங்களுக் கெல்லாம் நான் எழுதினேன். அவர்களிடம் வெவ்வேறு வகையான பதில் கிடைத்தது. சிலரிடம் அதிகார தோரணை தெரிந்தது. சிலர் மேலிடத்தின் அனுமதியைப் பெற்றுத்தான் தகவல் சொல்ல முடியும் என்றனர். ஆனால், பலர் பேசுவதற்கு ஆர்வம் காட்டினர். அவர்களிடம் ஏராளமான தகவல்கள் சுரங்கம் போல் இருந்ததைக் கண்டேன். அவர்கள்தான் விவசாயிகள் எதிர்கொள்ளும் இன்னல்கள், அரசாங்கம் என்ன வகையான உணவுக்கு முக்கியத்துவம் அளித்து மேம்படுத்துகிறது, உணவு நிறுவனங்கள் என்ன வகையான உணவைப் பிரபலப்படுத்துகின்றன

பருப்புவகைகளில் நைட்ரஜன் உள்ளது. அவை வறண்ட நிலத்தில் விளைகின்றன. அவைதான் புரதச் சத்துக்கு முக்கியமானவை. ஆனால், பருப்புகள் குறித்து அதிகம் அக்கறை இல்லை. அது குறித்து ஆராய்ந்தேன். இந்தியாவின் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு வகையான பருப்பு வகைகள் இருப்பதைக் கண்டறிந்தேன். தென் மாநிலங்களில் துவரம் பருப்புக்கு முக்கியத்துவம் உள்ளது. அதுதான் சாம்பாரில் பயன்படுத்தப்படுகிறது. பஞ்சாபில் ராஜ்மா எனப்படும் பருப்புதான் பிரதானம். இப்படி வெவ்வேறு விதமான சந்தைகள் இருக்கின்றன.

அதே சமயம் எல்லாவற்றுக்கும் வணிக நலன்கள் அதிகரித்து வருகின்றன. உதாரணத்திற்கு கனடா நாடு துவரம் பருப்புக்குப் பதிலாக உடைந்த மஞ்சள் பீன்ஸைப் பிரபலமாக்கி வருகிறது. நாம் இங்கே துவரம் பருப்பு என எதைச் சாப்பிடுகிறோமே அது கனடாவின் உடைந்த மஞ்சள் பீன்ஸ் பருப்பு ஆகும். நாம் பெரும்பாலும் உணவில் சேர்த்துக் கொள்ளும் சாம்பாரில் இருப்பது துவரை அல்ல, அதுதான். அது சாம்பாரின் இயல்பையே மாற்றிவிட்டது. எது நல்லது எது கெட்டது என்பதல்ல முக்கியம். உடைந்த மஞ்சள் பீன்ஸும் ஒரு வகையில் நல்லதுதான். அது நமது இயல்பான உணவை மாற்றியிருக்கிறது. என்ன இருந்தாலும், துவரம்பருப்பின் வாசனைக்கு உடைந்த மஞ்சள் பீன்ஸ் பருப்பு ஈடாகாது.

RK: இந்தியா போன்ற நாடுளில் உணவுக்கும் தொழில்நுட்பத்துக்கும் இடையில் ஒரு விதமான பதற்றம் இருப்பதாக
நீங்கள் கருதுகிறீர்களா? உதாரணத்திற்கு பசுமைப் புரட்சியால் நமது உணவு முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக பலர் விமர்சிக்கிறார்கள், அதே மாதிரி.

VD: இந்தியாவில் உள்ள உணவு சம்பந்தமாக எழுதுபவன் என்ற முறையில் கூறுகிறேன். உணவுத் தட்டுப்பாடு, நம் நாட்டில் உணவுப் பற்றாக்குறை மிகப் பெரிய அளவில் உள்ளதையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதனால்தான் பசுமைப் புரட்சியை விமர்சித்து நான் எழுதுவதில்லை. வந்தனா சிவா போன்றோர் விமர்சிக்கிறார்கள் என்பது தெரியும். ஆனால், 1960ம் ஆண்டுகளில் நாடு எப்படி இருந்தது என்றெல்லாம் தெரியவந்தது. அநேகமாக இந்த விஷயத்தில் நான் மற்றவர்களை விடக் கொஞ்சம் வித்தியாசமாக அணுகியிருக்கிறேன் எனக் கருதுகிறேன். அந்தத் தகவல்களையெல்லாம் வெளிப்படுத்தி வருகிறேன்.

RK: அது மாதிரி தகவல்கள் கிடைத்திருக்காவிட்டால், இப்படி கட்டுரைகளை எழுத முடிந்திருக்காது அல்லவா?

VD: பருப்பு குறித்து ஆர்வம் ஏற்பட்டது. அது பற்றி யாருமே எழுதுவதில்லை. காரணம், அதைப் பெரிதாக யாரும் எடுத்துக் கொள்வதில்லை. பிரெட், அசைவம், காய்கறி உணவுகளில்தான் அதிகம் நாட்டம் கொள்கிறார்கள். ஆனால், இந்திய உணவில் பருப்புதான் அடிப்படை.

மரியம் மெட்ராஸ்வாலா

என்பதைப் பார்க்க வேண்டும், என்ன செய்திகள் வந்தன என்பதைத் திரும்பிப் பார்க்க வேண்டும். அப்போது உணவு உற்பத்தியின் நிலை குறித்து தெரிந்து கொள்ள வேண்டும்.

பசுமைப் புரட்சி மட்டும் இல்லாமல் இருந்திருந்தால், கோடிக் கணக்கானோர் பட்டினியால் இறந்து போயிருப்பார்கள். பசுமைப் புரட்சியில் பல கோளாறுகள் இருந்தன என்பது வாஸ்தவம்தான். செயற்கை உரங்கள், ரசாயன பூச்சிகொல்லி மருந்து ஆகியவற்றால் பாதிப்பு என்பதும் சரிதான். ஆனால், அவற்றையெல்லாம் எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று விவசாயிகளிடையே விழிப்பு ஏற்படுத்தாமல் போனதுதான் பல பிரச்சினைகளுக்குக் காரணம். பசுமைப் புரட்சியால் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. புகார்கள் உண்மை என்றாலும் அவை திருத்தப்பட வேண்டும்.

RK: உங்களது வாழ்க்கை பற்றிச் சொல்லுங்கள்.

VD: மும்பையில் பிறந்தவன் நான். 12வது வயது வரையில் இங்கேதான் வளர்ந்தேன். பிறகு சென்னையில் வளர்ந்தேன். பிறகு, கோல்கத்தாவில் இரண்டு ஆண்டுகள் படித்தேன். அதையடுத்து மும்பையில்தான் எனது பணிகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன.

மேலே: *இம்ஃபாலில் அனைத்து மகளிர் சந்தையில் ஒரு உணவகம்.*

கீழே: *பஞ்சாபில் ஒரு உணவகத்தில் பித்தளைப் பாத்திரத்தில் லஸ்ஸி மற்றும் குளிர்ந்த காபி.*

RK: உங்களது பார்வையில் உலகில் உணவுதான் மிக முக்கியம் வகிக்கிறதா?

VD: அப்படித்தான் நினைக்கிறேன். எனது பெற்றோர் வெவ்வேறு சமூகங்களிலிருந்து வந்தவர்கள். தந்தை குஜராத்தி, தாய் மலையாளி. நான் எல்லை வகையான உணவுப் பாரம்பரியங்களுடன் வளர்ந்தேன். பெற்றோர்களிடமிருந்து இரு வகையான உணவுப் பழக்கங்களும் வேலையாட்களிடமிருந்து இன்னொரு வகையான உணவுப் பழக்கங்களும் பெற்றேன். என் தாயார் பத்திரிகையாளர் என்பதால் வீட்டில் சமையல்காரர் எப்போதும் இருப்பார். இதை எப்போதும் வலியுறுத்துவேன். காரணம், நம் நாட்டு உணவில் வேலைக்காரர்கள், வீட்டில் உள்ள சமையல்காரர்களின் தாக்கம் மிகப் பெரியது. அவர்கள் தயாரிக்கும் பல உணவுகள் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. நாம் அதைப் பற்றியெல்லாம் நினைப்பதில்லை, காரணம், வீட்டில் தாய்மாரே எல்லாம் சமைக்கிறார்கள் என்று அழகாகக் கற்பனை செய்து கொள்கிறோம். அப்படி ஒரு குறிப்பிட்ட சமுதாயத்துக்கு உரிய உணவுப் பழக்க வழக்கத்தைச் சார்ந்திருக்காத நிலைமை எனக்குப் பெரிதும் உதவியுள்ளது. காரணம், எல்லா பாரம்பரியங்களிலிருந்தும் நான் வேறானவன் ஆகிவிட்டேன். உணவு என்பது அனைவரும் விரும்பக் கூடியது.

ஆனால், நான் இது குறித்து பெண்களுடனும் வேலை யாட்களுடனும் பேசுவதற்கு எப்போதும் விரும்புகிறேன். பல பேருக்கு உணவு எப்படி தயாரிக்கப்படுகிறது என்பதெல்லாம் தெரியாமல் அதைப் பற்றிப் பேசு கிறார்கள். உணவு தயாரிப்போரிடம் தான் நீங்கள் பேச வேண்டும். இல்லையென்றால், உணவு பற்றிய இந்தக் கருத்துகளே மீண்டும் மீண்டும் தெரியவரும். உணவு பற்றி எழுதப்படுவது எல்லாம் பெரும்பாலும் யூகத்தின் அடிப்படையில்தான். பரம்பரை உணவு வகைகளைத் தயாரிக்கும் பெண்கள், சமையல்காரர்கள் படிக்காதவர்கள். அவர்கள் அது குறித்தெல்லாம் எழுதுவதில்லை. அவர்களது பாரம்பரியம் குறித்து பதிவு செய்யப்படுவதில்லை. ஆகையால், நமக்குத் தெரிவதெல்லாம் உத்தேசமானவைதான். யாராவது உணவைப் பற்றிப் பேசினால், எனக்குச் சந்தேகம் வருகிறது. உணவு தயாரிப்பது பற்றிப் பெரும்பாலானோருக்கு மிகவும் குறைவாகவே தெரியும்.

RK: இந்தியாவின் பல இடங்களிலிருந்து குடியேறுவோரை மும்பை பெரிதும் வசீகரிக்கிறது. எனவே, அப்படி வந்து குடியேறிய பிற சமுதாயத்தினர் மும்பைவாசி களின் உணவுப் பழக்கத்தில் ஏதாவது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளனரா?

VD: ஒவ்வொரு சமுதாயமும் மும்பையின் உணவு முறையை ஓரளவுக்கு மாற்றியிருக்கிறது. முன்பு மும்பை உணவு விஷயத் தில் முன்பு எப்போதும் அதிகம் தென்படாத சமுதாயத்தினர் கூட இணையதளத்தின் மூலம் தங்களது உணவு வகைகளை பிரபலமாக்கி வருவது சுவையான சம்பவம் ஆகும். போரா முஸ்லிம் சமுதாயத்தினர் அதற்கு ஓர் உதாரணம். அப்படி கூகுள் நிறுவனத்துக்காகப் பணியாற்றும் ஒருவர் தனது தாயார் சமைக்கும்

இம்ஃபாலின் பாரம்பரிய உணவு.

மும்பை ஃபலூடா

உணவுவகைகளை ஃபேஸ்புக் சமூக ஊடகத்தில் பதிவேற்றம் செய்துள்ளார். அவர் தற்போது வேலையை உதறிவிட்டு, போரா சமையல் அறை (The Bohri Kitchen) என்ற வலைப்பூவை (Blog) வெளியிட்டு பணம் சம்பாதித்து வருகிறார். அவர் வீட்டில் அம்மா சமைத்த உணவைப் பிறருக்கு விருந்தாக அளிக்கிறார். இப்போது தொழில்முனைவோர் ஆகிவிட்டார். மும்பையில் போரா சமுதாயத்தினரின் உணவு வகை ஓர் அங்கமாகிவிட்டது. போரா சமுதாயத்தினர் சிறுபான்மையினர் ஆனாலும், பணக்காரர்கள் அதிகம். அதனால், தான் தங்களது உணவு வகை களை வீட்டுக்கு வெளியே விற்பனை செய்வதில்லை. ஏழைகள்தான் அப்படிச் செய்கிறார்கள். வளமான சமுதாயத்தினர் எப்போதாவது தான் வெளியே வழங்குகிறார்கள்.

RK: உங்களது 'பாட்காஸ்ட்' (Podcast) ஊடகத்திற்கு 'உண்மையான உணவு பாட்காஸ்ட்' (The Real Food Podcast) என்று பெயரிட்டுள்ளீர்கள். அதை விளக்க முடியுமா?

VD: அந்த பாட்காஸ்ட் ஊடகத்தைத் தொடங்கியபோது, வீட்டு உணவில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என்று தெளிவான நிலையை எடுத்தோம். வீட்டு உணவைத்தான் அனைவரும் அதிகமாகச் ச ாப்பிடுகிறோம். ஆனால், யாரும் அதைப் பற்றி எழுதுவதில்லை. பப்படம் குறித்து பாட்காஸ்ட்டில் பதிவு செய்தோம். பப்படத்தில் என்னவெல்லாம் இருக்கிறது என்று அதிகம் தெரியவில்லை. பப்படத்துக்கும் அப்பளத்துக்கும் உள்ள வேறுபாடு கூட பலருக்குத் தெரியாது. பப்படத்திலேயே வெவ்வேறு வகைகள் இருப்பதும் தெரியவில்லை. இந்திய மக்களுக்கு உணவு குறித்து தெரியாதது முரண்பாடு. மக்கள் வழக்கமான உணவை விட வித்தியாசமாக இருந்தால், அதைச் சாப்பிட விரும்புகிறார்கள். அவர்கள் சமைக் கும் உணவைப் போல் கொஞ்சம் இருந்தாலும் ஆர்வம் காட்டுவதில்லை. காரணம், அது சாதாரணமான உணவு என்று நினைப்பதுதான்! அதனால், இத்தாலி உணவு வகை, சீன உணவு வகைகளைச் சுவைக்க ஆர்வம் காட்டுகிறார்கள். அவர்கள் தங்களது உணவைப் போல் இருப்பதாக

சிலர் பிரியாணியை குறிப்பிட்ட விறகு அடிப்பில் தான் சமைப்பார்கள். விறகு அடுப்பின் நெருப்பும் பயன்படுத்தும் பாத்திரமும் பிரியாணிக்குப் புதிய சுவையூட்டம் என்கிறார்கள்.

நினைத்துக் கொண்டு பிற வகை உணவுகளைச் சாப்பிட மறுப்பது மட்டுமின்றி, அவற்றை வெறுக்கவும் கூடும்!

RK: தேசிய உணவு அடையாளத்தை அறிவிப்பது குறித்து முயற்சி எடுக்கப்படும் என நினைக்கிறீர்களா? இது மாநில அளவிலான உணவு வகைகளைக் கொண்டாடுவது கடினமாக்குமா?

VD: அது குறித்து எனக்குத் தெரியாது, ஆனால், அதற்கான முயற்சி இருந்தது தெரியும். எவை இந்திய உணவு வகை என்றும் எவை இந்திய உணவில்லாதவை என்று வகுப்பதற்கு சில குழுக்கள் முயன்றன. இவையெல்லாம் மாட்டிறைச்சி விவகாரத்தில் பார்த்திருப்பீர்கள். சைவ உணவு, அசைவ உணவு ஆகியவற்றுக்கு இடையிலான பிரச்சினை இன்னொரு புறம். முதலில் சைவ உணவு, அசைவ உணவு என்ற வேறுபாடு இந்தியாவில்தான் உள்ளது. நீங்கள் அசைவம் என்றால் நிறைய இறைச்சியைச் சாப்பிடுபவராக இருக்கவேண்டும். அல்லது இறைச்சி மட்டுமே சாப்பிடுபவராக இருக்கவேண்டும். சைவ உணவு என்றால், இறைச்சி போன்றவற்றைச் சாப்பிடவே கூடாது. ஆனால், உண்மையில் இந்தியாவில் நிறைய சமையல் குறிப்புகளை நான் பாதி சைவ உணவு குறிப்புகள் என்றும் மணத்துக்காக கொஞ்சம் இறைச்சி சேர்க்கப்படுகிறது என்றும் குறிப்பிடுவேன். உதாரணத்திற்கு கொங்கணி கடலோரப் பகுதியில் ஓர் உணவில் நிறைய காய்கறிகளைப் போட்டு, கொஞ்சம் உலர்ந்த இறால் கருவாட்டைச் சேர்த்திருப்பார்கள். இது உடலுக்கு நல்ல உணவு. எண்ணெய் இருக்காது. சமவிகித உணவாகும். ஆனால், இவையெல்லாம் குறைந்து வருகிறது. காரணம், இறால் கருவாடு நாற்றமெடுக்கும். அதனால் வீட்டிலோ ஓட்டலிலோ வைத்திருக்க மாட்டார்கள். சமைக்கவும் மாட்டார்கள். ஒரு சமையல் கலை வல்லுநர், இதையெல்லாம் சமைத்தால், ஓட்டல் முழுவதும் நாற்றம் அடிக்கும். அதனால் இதைச் செய்வதில்லை என்று என்னிடம் கூறியுள்ளார்.

RK: இந்தியாவில் இறைச்சி உண்பது அதீதமாகி வருகிறது. அவற்றுக்குத் தடை விதிப்பது காரணம் எனக் கருதுகிறீர்களா?

VD: இந்த விஷயத்தில் மக்கள் இரண்டுபட்டிருக்கிறார்கள். இதற்கு ஆதிக்கம் காரணாகிறது.
என் பாட்டி வயதான காலத்தில் சென்னையில் வசித்து வந்தபோது, அவரைக் கவனித்துக் கொண்ட பெண்கள் சமையலும் செய்தனர். அதெல்லாம் எளிமையான உணவுதான். பெரும்பாலும் சைவ உணவுதான். அதே சமயம் அவர்கள் ஏழை என்பதால், சைவ உணவையே சாப்பிடுவார்கள் என்று அறிந்த பாட்டி, அவர்கள் தங்களுக்காக அசைவ உணவைச் சமைத்துக் கொள்ள காசு கொடுப்பார். அந்தப் பணத்துக்கு மலிவான அசைவமே கிடைக்கும். எனக்கு அசைவம் பிடிக்கும் என்பதால், எனக்கும் சேர்த்து சமைக்கும்படி அந்தப் பணிப் பெண்களைக் கேட்டுக் கொள்வார். அதற்கு அப்பெண்கள் தயங்குவார்கள். நான் அசைவம் சாப்பிட ஆர்வமாக இருக்கிறேன் என்று கூறுவேன். அவர்களும் எனக்காகச் சமைத்தனர். அதில் ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள் சாப்பிடும் குடல் போன்றவற்றைச் சமைத்து அளிப்பார்கள். அவை சத்தானவை, சுவையானவை. சுற்றுச்சூழலுக்கும் பாதிப்புத் தராதவை. ஆனால், அந்த மாதிரி உணவு வகைகள் இப்போது குறைந்துவிட்டன.

RK: இது போல் உணவு சமைப்பது பெரும்பாலும் நமது பண்டிகை களையும் உள்ளூர் பண்பாட்டையும் வெளிப்படுத்துவதாக இருக்கிறது. ஆனால், உணவகங்களில் அப்படி உணவு சமைப்பதில்லை. இந்தியாவின் பல்வேறு பிரதேச உணவு வகை களை ரெஸ்டாரண்டுகள் மீட்டெடுக்க

உணவு குறித்து விலைமதிப்பற்ற புத்தகங்கள்

உணவு, சமையல் குறித்து எதிர்காலத்தில் எழுதுவது புத்தகம் வெளியிடுவது குறித்து விக்ரம் டாக்டர் கூறுகிறார்:

அதெல்லாம் வசீகரமாக அமையப் போகிறது. உள்ளூர் சமுதாயத்தினர், குறைந்த மக்கள் கொண்ட சமூகத்தினரின் உணவு வகைகள் குறித்து ஏராளமானோர் ஆவணமாக்கி வருகிறார்கள். இந்தியாவில் உணவு வகைகளைப் பற்றிய சில புத்தகங்கள் தாங்களாகவே பதிப்பிட்டவை எனக் கருதுகிறேன். அந்தப் புத்தகங்கள் மக்கள் தங்களது சமூகங்களைப் பற்றிய கதைகளை அறிந்துகொள்ள உதவுகின்றன.

இப்படி புத்தகங்களை எழுதி வெளியிடுவதற்கு நிறைய செலவாகிறது. தாதிமா நோ வர்ஸோ (Dadima no Varso) போன்ற சில அற்புதமான புத்தகங்களை வசதியானவர்களால் செய்ய முடிகிறது. அந்தப் புத்தகம் குஜராத்தியிலும் ஆங்கிலத்திலும் வெளிடப்பட்டுள்ளது. பலன்பூரி ஜைன சமுதாயத்தைச் சேர்ந்த பெண்கள் அதைத் தயாரித்துள்ளனர். அவர்கள் வைர வியாபாரிகள். நாடு முழுவதும் பரவியுள்ளனர். தங்களது பாரம்பரிய உணவு வகைகள் மெல்ல அழிந்துவிடுமோ என்று கவலைப்பட்டதை அடுத்து



புத்தகமாக எழுதிப் பதிவு செய்துள்ளனர். ஆனாலும் அந்தப் புத்தகம் வழக்கமான பாணியில் அமையாமல் மிகச் சிறப்பாக எழுதப்பட்டது.

“முடிவெடுக்காத சிக்கன்” (The Indecisive Chicken) என்ற தலைப்பில் ப்ரஜ்னா தேசாய் என்பவர் எழுதி வெளியிட்ட நூல் இன்னொரு உதாரணம். இதுவும் சுயவெளியீட்டு நூலாகும். ஆசியாவின் மிகப் பெரிய குடிசைப் பகுதி எனக் கூறப்படும் தாராவியில் வசிப்போரைக் காண்பதற்கான முயற்சியில் எழுதப்பட்டது இந்நூல். இது மிகவும் பிரபலமான புத்தகம். ப்ரஜ்னா தேசாய் ஒரு கலை வல்லுநர். குடிசை வாசிப் பெண்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதில் அவர் ஆர்வம் காட்டினார். அவருக்கு உணவு சமைப்பதில் ஆர்வம் அதிகம். பெண்கள் தங்களது வாழ்க்கையைப் பற்றிப் பேசுவதற்கு சமையல் ஒரு சிறந்த வழி என்பதை அவர் புரிந்து கொண்டார்.



அதனால், ஒரு குழுவை அமைத்தார். அந்தப் பெண்கள் தினமும் சமைத்துக் கொண்டிருந்தபோது தங்களது வாழ்க்கைச் சம்பவங்களைப் பகிர்ந்து கொள்ளச் செய்தார். அவற்றை ஆவணப்படுத்தினார். புகைப்படங்களாகப் பதிவு செய்தார். அதற்கு நல்ல பலன் கிடைத்தது. அந்தப் புத்தகத்தின் விவரங்கள் பலருக்கு தங்களது வீடுகளில் சமைக்கும் உணவைப் போலவே அமைந்தன. மேலும் அந்தந்த சமுதாயத்தின் தாக்கமும் இருந்தது.

அப்புத்தகத்தில் சமையல் குறிப்பு, படங்கள் ஆகியவற்றிலிருந்து கிடைப்பது புழக்கத்தில் இருந்த உணவு வகைகள் குறித்த உணர்வுதான். இந்நூலை வெளியிடுவதற்கு எந்த பதிப்பகமும் முன் வராததால், ப்ரஜ்னா தானாகவே புத்தகமாக்கி வெளியிட்டார்.

ஏராளமான இந்தியக் கலை வல்லுநர்கள் சமையல் குறிப்புகளைப் படத்துடன் விவரித்து, யூ டியூப் தளத்திலம் பதிவேற்றம் செய்கிறார்கள். இது மிகவும் முக்கியமானது. கிராம உணவுத் தொழிற்சாலை (Village Food Factory) என்பன போன்ற அலைவரிசைகள் உள்ளன. அதில், ஓர் இளைஞர் தனது தந்தை தயாரிக்கும் உணவு தயாரிப்பதைப் படமெடுக்கிறார். தமிழ்நாட்டு சமையலில் அசைவ உணவு வகைகள் நிறைய உள்ளன. சில நூல்களில் எழுத்து வடிவில் இல்லாமல், ஆவணங்களாகவும் அமைந்துள்ளன. அந்த ஆவணங்கள் இணைப்புக்கு நிறைய உதவுகின்றன. இந்திய உணவு வகைகளில் சொல்வதற்கு நிறைய இருக்கின்றன. இளைஞர்கள் பல்வேறு சமுதாயங்களைப் பற்றிக் கூறலாம். சாதிய அடுக்குகளையும் அவை எப்படி உணவு முறைகளைப் பாதிக்கின்றன என்றும் கூறப்படுகின்றன. சில நூல்களில் பருவ மாற்றம் குறித்தும் அதற்கும் உணவு வகைக்கும் இடையிலான தொடர்பு குறித்தும் விவரிக்கப்படுகின்றன. அதிகரித்து வரும் டின்னில் அடைக்கப்படும் உணவு வகைகளால் ஏற்படும் மாற்றங்களும் குறிப்பிடப்படுகின்றன. சில குறைகள் இருக்கலாம். அவை சுட்டிக் காட்டப்பட்டால் திருத்தப்படலாம். அவையெல்லாம் எப்படிச் செயல்படுகின்றன என்பதில் ஆர்வமும் அதிகரித்து வருகின்றன. அவற்றைப் பற்றியெல்லாம் நிறைய எழுத வேண்டியுள்ளது.

வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியா, யதார்த்தமானதா?

VD: ஏராளமான இளம் சமையல் கலை வல்லுநர்கள் பிரதேச அளவிலான உணவு வகைகளைத் தயாரிப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள். ஐந்து நட்சத்திர உணவகங்களின் கட்டுப்பாடுகள் உள்ள நிலையில், மூத்த சமையல் கலைஞர்கள் இதற்கு சிரமப்படுகிறார்கள். ஆடம்பரமான சுற்றுலாப் பயணிகளுக்காகத்தான் அவர்கள் உணவு தயாரிக்க வேண்டும். இருந்தாலும் அந்த உணவுகளை மிகப் பெரிய அளவில் தயாரிப்பது கண்ணைக் கவர்கிறது.

திருமண விருந்து தயாரிப் போருக்குத் தனியான வகை உணவு உள்ளது. சமையல் கலைஞர் களிடமிருந்தும் திருமண விருந்து சமைப்போரிடமிருந்தும் நிறைய கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. சிலர் பிரியாணியை குறிப்பிட்ட

குஜராத்தின் பாரம்பரிய உணவு.

விறகு அடிப்பில்தான் சமைப்பார்கள். விறகு அடுப்பின் நெருப்பும் பயன்படுத்தும் பாத்திரமும் பிரியாணிக்குப் புதிய சுவையூட்டம் என்கிறார்கள். எல்லா இடத்திலும் எவர்சில்வர் பாத்திரங்களே பயன்படுத்தப்பட்டாலும், சிலர் பாரம்பரிய உலோகப் பாத்திரங்களில் சமைக்கிறார்கள். எவர் சில்வர் பாத்திரத்தை எளிதாகக் கழுவலாம், அது அமிலத்தால் பாதிக்கப் படுவதில்லை. அதனால்தான் அது நிறைய பயன் படுத்தப்படுகிறது. ஒரு தலைமுறைப் பெண்கள் பித்தளை பாத்திரத்தில் சமையல் செய்தனர். அவர்களது மருமகள்களும் கூட அப்படி செய்தனர். இப்போது குறைந்துவிட்டது. பித்தளைப் பாத்திரத்தைக் கழுவியவர்களுக்குத்தான் அதன் கஷ்டம் தெரியும். அதை புளி போட்டு, தேங்காய் நாரால் தேய்ப்பார்கள். பாத்திரக்காரர்களும் பித்தளைப் பாத்திரத்திற்கு எவர்சில்வர் பாத்திரங்களைக் கொடுத்து வந்தனர். இதனால்தான் பித்தளைக்குப் பதில் எவர்சில்வர் பாத்திரங்கள் புழக்கத்திற்கு வந்தன. எவர்சில்வரைக் கையாள்வது எளிது என்றாலும் சமைப்பதற்கு நல்லதில்லை. சூடு பிடிக்க நேரமாகும். அதனால்தான் பல சமையல் கலைஞர்கள் செம்பு, பித்தளைப் பாத்திரத்தைப் பயன்படுத்துகிறார்கள். சுவையான உணவுக்கு அந்த உலோகப் பாத்திரங்கள்தான் சரியானது என்கிறார்கள். ஆலயங்களில் பாரம்பரிய உலோகப் பாத்திரங்களில்தான் சமைக்கிறார்கள்.

தொடர்புக்கு: www.onceuponatiffin.com

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

கோவளத்தில் ரோட்டரியின் களப்பணி

வி முத்துக்குமரன்

பிரதமர் நரேந்திர மோடியின் தூய்மை இந்தியா இயக்கத்தின் (Swachh Bharat Abhiyan) கோட்பாடுகளில் திறந்தவெளிக் கழிப்பிடம் இல்லாத (Open Defection Free) நாடாக இந்தியாவை உருவாக்குவது குறிப்பிடத் தக்கது. ஆனால், அதைப் பற்றிப் பேசுவது எளிது, செயல்படுத்துவதற்கு திட்டம் வகுப்போரும் அதைச் செயல்படுத்தும் அலுவலர்களும் ஏராளமான சவால்களை எதிர்கொள்ள வேண்டி வந்தது. சென்னைக்கு 24 கி.மீ. தொலைவில் கிழக்குக் கடற்கரைச் சாலைப் பகுதியில் கோவளம் கிராமம் அமைந்துள்ளது. அதன் கிராம ஊராட்சி நிர்வாகத்திற்கு உட்பட்ட இடத்தில் 2,400க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. அங்கு வீடுகளில் கழிவறைகள் இல்லை.

திட்டத்தலைவர் ரவி கந்தசாமி கோவளத்தில் கிராமத்தினருடன்.

அங்கே சென்னை கிழக்குக் கடற்கரை சாலை ரோட்டரி சங்கம் (RC Chennai ECR, RID 3232) ஒரு 32 கழிவறைகளைக் கட்டித் தருகிறது, அத்துடன் போதிய தண்ணீர் வசதி, விளக்கு வசதி ஆகியவற்றையும் சங்கம் அமைத்து தருகிறது. ஆரம்பத்தில் நடத்திய ஆய்வின்போது, 4 சதுர கி.மீ., பரப்புள்ள அந்த கிராமத்தில் 4000 பெண்கள் உள்பட 8000 பேருக்கு 800 கழிவறைகள்தான் இருந்தன என்பது தெரியவந்தது.

உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து கிராமத்தை மேம்படுத்த முடிவு செய்தோம் என்று இந்தத் திட்டத்தின் தலைவரான ரவி கந்தசாமி கூறினார்.

போதிய சுகாதார வசதிகள், குடிநீர் வசதி, மக்கள் நல வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்துவது, பசுமைச் சூழலை உருவாக்குவது, வேலை இல்லாதவர்களுக்கு தொழில் கல்விப் பயிற்சி அளிப்பது போன்றவை குறித்து இந்த ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர் சேர்க்கை இயக்குநர் ரஃபீக் சேட், தலைவர் அஞ்சன் ரங்கராஜன், செயலாளர் அஜீத் நாயர் ஆகியோர் விவாதித்தனர்.

இந்தப் பணிகளுக்கான திட்டம் 2017ம் ஆண்டு பிற்பகுதியில் தொடங்கப்பட்டது. பொது சிறுநீர்க் கழிப்பிடங்களும் முறையாகப் பயன்படுத்தாமல் உள்ளன. பெரும்பாலன குடும்பங்களுக்கு, சுகாதாரத்தைப் பராமரிக்க போதிய வசதியில்லை. கழிவறைகளை அவ்வப்போது தூய்மைப்படுத்தி, மீண்டும் பயன்படுத்தும் வகையில் பராமரிக்க வேண்டும் என்ற மனநிலையும் அவர்களுக்கு இருப்பதில்லை என்றார் ரவி கந்தசாமி.

ஒவ்வொரு கழிவறையையும் கட்டுவதற்கும் தலா ரூ.32 ஆயிரம் ஆகிறது. அதற்கு சங்கம் ரூ.20 ஆயிரத்தை வழங்குகிறது. மீதி தொகை தூய்மை இந்தியா இயக்கத்தின் (Swachh Bharat Abhiyan) கீழ் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டது.

கோவளத்தில் சங்கம் சார்பில் கழிவறை கட்டித் தருவதற்கு, சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்க வேண்டும். குடும்பத் தலைவர் ஆதார் அட்டை வைத்திருக்க வேண்டும்.

கழிவறை கட்டும் பணியில் உள்ளூரில் இருக்கும் திறமையான இளைஞர்களை ஈடுபடுத்தினோம். இத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான திட்டத்திற்கும் அவர்கள் துணைபுரிந்தனர். தற்போதுள்ள கழிவறைகளின் நிலை குறித்தும், அப்பகுதியில் என்னென்ன அடிப்படை வசதிகள் தேவை என்பது குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார் நாயர்.

ஏராளமான நிதி

அப்பகுதியில் 6 குளங்களும் ஓர் ஏரியும் உள்ளன. இவை தவிர 8 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும்

உள்ளன. அத்தொட்டிகளில் 50 ஆயிரம் முதல் ஒரு லட்சம் லிட்டர் வரையில் நீரைச் சேமித்து வைக்கலாம். கிராமத்தினருக்கு சுத்தமான குடிநீர் போதிய அளவு கிடைப்பதில்லை.

இங்கு கிராம ஊராட்சி தெருக் குழாய்களை அமைத்துள்ளது. ஆனால், அவற்றில் தண்ணீர் வருவதில்லை. மேல்நிலைத் தொட்டிகளிலும் நீர் ஏற்றப்படுவதில்லை என்று அப்பகுதியைச் சேர்ந்த பெண்மணி வி. லலிதா (65 வயது) கவலையுடன் கூறினார்.

இரு சிறுவர்கள் உள்பட நான்கு பேர் கொண்ட அந்தக் குடும்பத்திற்கு தங்களது குடிசை வீட்டுக்கு அருகே சங்கத்தினர் கழிவறை கட்டியமைத்து கொடுத்துள்ளனர்.

தொடர்ந்து பேசிய லலிதா, எங்களது வாழ்க்கையை ரோட்டரி சங்கம் மாற்றிவிட்டது. ஆனால், இதற்காக அருகில் உள்ள பொதுக் கிணற்றிலிருந்து தினமும் 12 குடங்களில் தண்ணீரைக் கொண்டு வந்து வீட்டுக்கும் கழிவறைக்கும் பயன்படுத்த வேண்டியுள்ளது. எனவே, எங்களது சிரமத்தையும் நேரத்தையும் குறைக்க ஒரு இணைப்புக் குழாயை அமைத்துத் தரும்படி கேட்டிருக்கிறோம் என்றார்.

இப்பகுதியில் சுமார் 30 கைக் குழாய்களும் சில பொதுக் கிணறுகள் இருந்தும் பல பயன்படுத்தப்படுவதில்லை. எனவே, இவற்றைப் புதுப்பித்து செயல்படுத்த உள்ளோம் என்றார்.

இவை தவிர, உப்பு நீரை நன்னீராக மாற்றும் சுத்திகரிப்பு வசதியை (Reverse Osmosis) ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதர திட்டங்கள்

ரோட்டரி சங்கத்தின் மகளிர் கைப் பை களையும் நகைகளையும் தயாரிப்பது குறித்து கிராமப் பெண்களுக்குப் பயிற்சி தரத் திட்டமிட்டுள்ளனர்.

மாலை நேரத்தில் மருந்தகத்தை அமைக்க முயற்சி மேற்கொண்டு வருகிறோம் என்றார் அவர்.

200 ஆண்டுப் பழமை செயின்ட் ஜோசப் மேல்நிலைப் பள்ளியில் இன்டராக்ட் கிளப் (Interact club) அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அங்குள்ள சிறுவர்களுக்கு மனித விழுமியங்கள் குறித்தும், நன்னெறிகளும் போதிக்கப்படும். அதன் மூலம் அந்த நற்பண்புகள் அவர்களது குடும்பங்களுக்கும் பரவும், சமூகத்திலும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும் என்றார் அவர்.■

பிலாஸ்பூரில் உள்ள பெண்களின் மேம்படுத்தல்

ரோட்டரி செய்திக் குழு

PDG விவேக் தன்கா மற்றும் சங்கத்தலைவர் பிரேர்னா சுரானாவுடன் பிங்க்லைன் திட்டப் பயனாளிகள்.

RC பிலாஸ்பூர் குயின்ஸ், RID 3261, பிலாஸ்பூர் காவல் துறையுடன் இணைந்து, சட்டீஸ்கர் மாநிலத்தில் உள்ள ஆதரவற்ற பெண்கள் சுய சார்புடன் வாழ பிங்க்லைன் என்ற பெயரில் உதவ முன் வந்துள்ளார்கள். RID 5300, USA மற்றும் TRF உடன் இணைந்து செயல் படுத்தப்பட்ட ஓர் குளோபல் கிராண்ட் திட்டமாகும், இதில் முதல் கட்டமாக 15 பெண்களுக்கு மின்சார ரிக்க்ஷாக்கள் வழங்கப் பட்டுள்ளன. இதன் மொத்த செலவு $32,000 ஆகும், இதில் $10,000 RID 3261ன் DDFலிருந்தும்; $5,000 RID 5300ன் DDFலிருந்தும் மேலும் RC பிலாஸ்பூர் குயின்ஸ் தலைவர் பிரேர்னா சுரானா $1,270ம் வழங்கினர், மீதம் TRF மூலம் பெறப்பட்டது. இந்த முயற்சியானது 75 ஆதரவற்ற பெண்களுக்கு ஒரு நிலையான பொருளாதார நிலையை வழங்கும், என்று பிரேர்னா கூறினார்.

DG நிக்கிலேஷ்திரிவேதி, PDGக்கள் ஹர்ஜித் சிங் ஹுரா, சுபாஷ் சாகு மற்றும் ராகேஷ் சதுர்வேதி ஆகியோரின் முன்னிலையில் PDG விவேக் டான்கா மூலம் பெண்களுக்கு இ-ரிக்க்ஷாக்கள் வழங்கப்பட்டது. RID 5300லிருந்து PDGக்கள் ரகதா கௌரி மற்றும் மிஷேல்டிரை பேவும் பங்கேற்றார்கள். பெண்களுக்கு ஓட்டுநர் பயிற்சி மற்றும் உரிமம் வழங்கப்பட்டது, மேலும் காவலர்களால் சுய பாதுகாப்பு திறன் பயிற்சி வழங்கப்பட்டது. பெண் ஓட்டுநர்கள் என்ற தனி அடையாளத்தை அவர்களுக்கு வழங்குவதற்காக பிலாஸ்பூர் காவல்துறை, அவர்களுக்கு இளஞ்சிவப்பு சீருடைகள் வழங்கியுள்ளது.■

போலியோ மீது கவனம் வைக்க வேண்டும்

TRF தனது போலியோ நோய் ஒழிப்பு இயக்கத்தை 1985ம் ஆண்டு தொடங்கியது. பின்னர் உலகளவிலான போலியோ ஒழிப்புக்கான முனைப்பின் (Global Polio Eradication Initiative) கீழ் அமெரிக்காவின் நோய்க் கட்டுப்பாட்டு மையங்கள், உலக சுகாதார நிறுவனம் (WHO), யுனிசெப் (UNICEF) ஆகியவற்றுடன் இணைந்து 1988ம் ஆண்டு செயல்படத் தொடங்கியது. உலக அளவில் ரோட்டரி அமைப்பினர் இந்த நற்பணியில் உற்சாகத்துடன் தங்களது நிதிப் பங்களிப்பைச் செலுத்தியதுடன் தேசிய நோய்த்தடுப்பு தினங்களில் (National Immunisation Days) முழு மனத்துடன் பங்கேற்கத் தொடங்கினர்.

இதை அடுத்து, பில் மற்றும் மெலிந்தா கேட்ஸ் அறக்கட்டளை (Bill and Melinda Gates Foundation) அதற்கு இணையான நிதியை அளித்தது. இந்த முன் முயற்சிகள் 1988ம் ஆண்டு தொடங்கப் பட்டது. அப்போது போலியோ கிருமி தாக்குதலுக்கு ஆளானோர் எண்ணிக்கை 3,50,000 என்று இருந்தது. அது 2018ம் ஆண்டு மிகக் குறைந்து விட்டது. தற்போது ஆப்கானஸ்தானில் 21 பேருக்கும், பாகிஸ்தானில் 12 பேருக்கும் மட்டுமே போலியோ தாக்குதல் உள்ளது.

நைஜீரியாவிலும் போலியோ தாக்கம் இருக்கிறது. நைஜர், சோமாலியா, காங்கோ, பாபுவா நியூ கினியா ஆகிய நாடுகள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

ஐந்தாண்டுகளுக்கு முன் 2014, மார்ச் 27ம் தேதி, இந்தியா போலியோ இல்லாத நாடு என அறிவிக்கப்பட்டது. இருந்தாலும் நாம் அசட்டையாக இருந்துவிட முடியாது. போலியோ கிருமித் தொற்று நம் அண்டை நாடுகளில் இருக்கிறது. எனவே, நாம் கடைசி பாதிப்பு உள்ளவர்களையும் மீட்கும் வகையில் செயல்பட வேண்டியுள்ளது. அதற்கு உரிய நிதி குறித்தும் திட்டமிட வேண்டியுள்ளது.

இப்போதைய பூரண நிலையை எண்ணித் திருப்தி படுவது இருபதாண்டு கால உழைப்பை வீணாக்கிவிடும் ஆபத்து உள்ளது. இந்த உலகிலிருந்து போலியோ கிருமியை முற்றிலுமாக அழித்து ஒழிப்பது என்று உலகம் முழுவதும் உள்ள ரோட்டரி அமைப்பினர் முனைப்புடன் இணைந்து பங்களிப்புச் செலுத்தி வருகிறார்கள். இதைச் சாதித்து விட்டால், பெரியம்மையை அடுத்து முற்றிலுமாக ஒழிக்கப்படும் இரண்டாவது நோய் போலியோ என ஆகும்.

இந்த உலக அளவிலான முனைப்பில் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு ரோட்டரி சங்க உறுப்பினரும் நிதி அளித்து உதவ வேண்டும். நமது அண்டையில் கிருமி இன்னும் இருக்கும்போது நாம் அயரக் கூடாது.■

குலாம் A வஹன்வதி
TRF அறங்காவலர்

20 பெங்கால் பள்ளிகளில் WinS திட்டம்

ரோட்டரி செய்திக்குழு

ஹவுரா, ஹூக்ளி, பச்சிம் மெதினிபுர் மற்றும் முர்ஷிதாபாத் பகுதிகளில் உள்ள இருபது அரசுப் பள்ளிகளுக்கு இனி சிறந்த கழிவறை வசதிகளும் பாதுகாப்பான குடிநீரும் கிடைக்கும், RID 3291-பேலூர், கல்கத்தா சௌரிங்கி, கல்கத்தா நார்த் சப்அர்பன் மற்றும் சந்தன்நகர் போன்ற நான்கு சங்கங்களின் ஒரு உலகளாவிய மானிய திட்டத்தின் முயற்சியால் ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் $1,27,000 மதிப்புள்ள இந்த WinS திட்டப்பணிக்காக இந்த சங்கங்கள் அமெரிக்காவைச் சேர்ந்த டேண்வில்லி/சிகாமோர் வேலி, அலமோ, டேண்வில்லி, ரிச்மண்ட், சான் ரேமன் மற்றும் சான் ரேமன் வேலி போன்ற RID 5160-ன் ஆறு சங்கங்கள் மற்றும் TRF உடன் இணைந்திருக்கின்றனர், மேலும் இது 18 மாதத்தில் முடிக்கப்படும்.

பிப்ரவரி 23 அன்று ரோட்டரியின் 114 வது ஆண்டுவிழாவில் DG முகுல் சின்ஹா, DGE அஜய் அகர்வால் மற்றும் RC டேண்வில்லி/சிகாமோர் வேலியைச் சேர்ந்த Dr ரஞ்சித் சக்ரவர்த்தி ஆகியோர் முன்னிலையில் மேற்கு வங்காள கவர்னர் கேஷரிநாத் திரிபாதி இந்தத் திட்டப்பணியைத் தொடங்கிவைத்தார்.

இந்த திட்டப்பணியின் ஒருங்கிணைந்த அங்கமாக மாதவிடாய் கால உடல்நலப் பராமரிப்பு பயிற்சியும் இருக்கிறது என்று கூறினார் திட்டப்பணித் தலைவர் விஷ்ணு தன்தானியா, மற்றும் இந்த மாநாட்டில் 2 முதல் 3 ஆண்டுகள் வரை தொடர்ந்து பயன்படுத்தக்கூடிய நாப்கின்களை நன்கொடையளிக்கும் யோசனையை வெளிப்படுத்தினர்.■

மேற்கு வங்க அளுநர் கேசரி நாத் திரிபாதி, DG முகுல் சின்ஹா மற்றும் DGE அஜய் அகர்வால் முன்னிலையில் WinS திட்டத்தை துவக்குகிறார்.

Rotary
PEOPLE OF ACTION

புனேயில் ரோட்டரி தாய்ப்பால் வங்கி

ஜெய்ஸ்ரீ

புனேயில் உள்ள D Y பாட்டீல் மெடிக்கல் காலேஜ் ஹாஸ்பிட்டல் அன்ட் ரிசர்ச் சென்டரில் ஒரு தாய்ப்பால் வங்கி உள்ளது, RID 3131, RC நிக்டி-புனே முயற்சியால் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஃபின்லாந்து மற்றும் வியன், ஆஸ்திரியா ரோட்டரி சங்கங்கள் மற்றும் TRF உடன் இணைந்து, உயிர்காக்கும் இந்த வசதியை இந்த மருத்துவமனையில் மூன்று ஆண்டுகளாக திட்டமிட்டு நிறுவியுள்ளனர். இந்த திட்டப் பணியின் மொத்த மதிப்பு $65,700, பிறந்த குழந்தைகளுக்காக பாதுகாப்பான முறையில் தாய்ப்பாலை சேமித்து வழங்க வசதியான உபகரணத்தை இறக்குமதி செய்து இவ்வங்கியில் நிறுவப்பட்டுள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, தினசரி குறைந்தபட்சம் 20 பிரசவங்கள் நடந்தாலும், DY பாட்டீல் மருத்துவ மனை ஒரு சிறிய அளவில் தாய்ப் பால் வங்கியை செயல்படுத்திக் கொண்டிருந்தது. தாய்ப்பால் வங்கித் திட்டப்பணியைச் செயல்படுத்த ஒரு கூட்டாளியை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது RC நிக்டி-இன் முன்னாள் தலைவர் டாக்டர் ஷுபாங்கி கோத்தாரி, மையத்தலைவர் டாக்டர் ஷைலஜா மானேவிற்கு சிரமங்களை எடுத்துரைத்தார், பிறகு செயல்கள் நடைபெறத் தொடங்கின,'' என்று சொல்கிறார் சங்கத் தலைவர் சுபாஷ் ஜெய்சிங்கனி. கோத்தாரி இந்த திட்டப்பணிக்கு இயக்குனராக முன்னாள் சங்கத் தலைவர் ரவி ராஜபுர்கரை நியமித்தார் மற்றும் $65,000க்கு அதிகமான மதிப்பீடு கொண்ட இத்திட்டத்திற்கு உலகளாவிய மானியங்களை எதிர்பார்த்தனர்.

இந்த சவாலை எதிர்கொள்ள DDFயிலிருந்து $13,000 கொடுக்க முன்னாள் ஆளுநர் பிரஷாந்த் தேஷ்முக் மற்றும் DRFC தீபக் ஷிகர்புர் ஒப்புதல் அளித்தனர்.

ஃபின்லாந்தைச் சார்ந்த PDG விர்பி ஹோங்கலா தாய்ப்பால் வங்கியை துவக்கி வைக்கிறார். உடன் DY பாட்டில் மருத்துவமனை துணை வேந்தர் பாக்யஸ்ரீ பாட்டில், PDG லேய்லா ரிஸ்டெலி, மாட்டி ஹோங்கலா, திட்ட இயக்குநர் ரவி ராஜபுர்கர் மற்றும் PDG தீபக் ஷிகர்ப்பூர் ஆகியோரும் உடன் உள்ளனர்.

"எத்தியோப்பியாவில் நாங்கள் ஏற்கனவே ஒரு ஃபேகோ-மெஷின் கண் பாதுகாப்பு திட்டப்பணிக்காக PDG விர்பி ஹோங்களா மூலமாக அவர்களுடன் இணைந்திருக்கிறோம்.'' ஹோங்களாவின் முயற்சியுடன் ஃபின்லாந்தைச் சேர்ந்த ஐந்து ரோட்டரி சங்கங்கள் $15,000, RC வியன், ஆஸ்திரியா சார்பாக $4,000 மற்றும் பிரதிகரன் புனே மற்றும் சின்ச்வாத் மோர்யா மற்றும் அகுர்தி ரோட்டரி சங்கங்கள் ஒவ்வொன்றும் தலா $500 பங்களித்துள்ளனர். தன் பங்குக்கு TRF-ம் களத்தில் இறங்கி சமமான பங்களிப்பை வழங்கியது.

இப்போது இந்த பால் வங்கி இரண்டு மணிநேரத்தில் ஒன்பது லிட்டர் பாலை பதனிடும் திறன் கொண்டது, இது இந்த மருத்துவமனையில் குழந்தைகளுக்கு மட்டுமல்லாது, இந்த சுற்றுப்புறத்தில் உள்ள மற்ற மருத்துவமனைகளில் பிறந்த குழந்தைகளுக்கும் பயனளிக்கிறது.

மருத்துவமனையின் வேந்தர் Dr P D பாட்டீல் மற்றும் துணை வேந்தர் பாக்யஸ்ரீ பாட்டீல் உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து ஆனது, மேலும் இதற்கு குழந்தைகளுக்கு இலவசமாக இந்த வசதியை வழங்குகிறது. இந்த மையத்தில் ஒரு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி வசதி உள்ளது, இது தாய்ப்பால் ஊட்டலின் நன்மையையும் சிசு இறப்பு விகிதத்தைக் குறைப்பதில் இது முக்கிய பங்கு வகிப்பது பற்றியும் தாய்மார்கள் மற்றும் சமூகத்தில் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யும். "பிறந்த குழந்தைகளுக்கான மிகச்சரியான உணவு தாய்ப்பால் ஆகும், தாய்-சேய் இருவருக்கும் நோய் ஏற்படுவதற்கான ஆபத்தைக் குறைக்கிறது என்ற உண்மையை திரும்பத் திரும்ப சொல்கிறோம். உபரித் தாய்ப்பால் உள்ள பெண் களுக்கு மிகச்சிறந்த தீர்வு தாய்ப்பால் வங்கி தான்,'' என்று அவர் சொல்கிறார்.

PDG ஹோங்களா மற்றும் ஃபின்லாந்தைச் சேர்ந்த ஆறு ரொட்டேரியன்கள் முன்னிலையில் கடந்த ஜனவரி மாதத்தில் இந்த வசதி தொடங்கி வைக்கப்பட்டது.■

மோகினியாட்டம்

சீதா ரத்னாக்கர்

அரபிக் கடல் கேரள மாநிலத்தின் கரையை அணைத்துக் கொள்ள கடல் அலைகளின் இசைக்கு ஏற்ப கரையில் தென்னை மரங்கள் தலையசைத்து ஆடும் அழகே அழகு! இந்த இயற்கையின் நாட்டிய அழகு தான் கேரளத்தின் பாரம்பரியமாக பெண்கள் நடத்தும் மோகினியாட்டம் என்ற நாட்டியத்திலும் பிரதிபலிக்கிறது. லஸ்யா (Lasya) எனப்படும் பெண்களின் நளினம் இந்த மோகினி யாட்டத்தில் வெளிப்படுத்தப்படும். இது பார்வதியின் படைப்பாகக் கருதப்படுகிறது. மோகினியாட்டம் என்ற சொல்லில் இடம்பெற்றுள்ள மோகினி என்பது விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றைக் குறிக்கும்.

பாற்கடலைக் கடைந்தபோது, அமுதம் வந்தது. அதை அசுரர்கள் பறித்துக் கொள்ள முயன்றனர். இதனால், தேவர்களுக்கும் அசுரர் களுக்கும் சண்டை வந்தது. அதில் அமுதத்தை பகைவர்கள் கவர்ந்து செல்லாமல் இருக்க அவர்களது கவனத்தைத் திசை திருப்புவதற்காகவே விஷ்ணு மோகினி அவதாரம் எடுத்து அவர்களை மயக்கியதாகப் புராணம் கூறுகிறது. மோகினி என்பதிலிருந்துதான் மோகினியாட்டம் என்ற தொடர் வந்தது.

மோகினியாட்டத்திற்கு ஆரம்பத்தில் தேவரடியாச்சி என்று பெயர் இருந்தது. அது தாசி அல்லது தேவரடியார் என்ற பொருளைக் குறிக்கும். அவர்கள் ஆலயங்களில் நாட்டியம் ஆடுபவர்கள் ஆவர். ஆனால், டச்சுக்காரர்கள் வந்து ஆண்டபோது, இந்த நாட்டியம் கேரளத்தில் தடை செய்யப்பட்டது. பிறகு மகாராஜா சுவாதி திருநாள் ராம வர்மா ஆட்சியில் தடை நீக்கப் பட்டது. அதையடுத்து அவர் அந்த நாட்டியத்தில் பல புதுமைகளுக்காக பல பதங்களை உருவாக்கினார். பிறகு, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 1892ம் ஆண்டு தேவரடியார் முறை ஒழிப்புக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதையடுத்து நாடு முழுவதும் பாரம்பரிய நாட்டிய முறைக்குப் பின்னடைவு ஏற்பட்டது. அதன் விளைவாக கொச்சி, திருவிதாங்கூர் சமஸ்தானங்களிலும் மோகனியாட்டம் புறக்கணிக்கப்பட்டது. ஆலயங்களில் பெண்களின் நாட்டியத்தில் கவர்ச்சி

தூக்கலாக இருந்ததாகக் குறிப்பிட்டு பல படங்களைக் கொண்ட இந்தியப் பெண்கள் மீதான தவறுகள் (The Wrongs of Indian Womanhood) என்ற புத்தகம் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டது. அதையடுத்து நாட்டியத்துக்குத் தடை கொண்டுவரப்பட்டு, பிறகு ஓரளவு தடை 1940ம் ஆண்டு நீக்கப்பட்டது. இந்நிறுவனத்தில் மோகினியாட்டம் செம்மையாக்கப்பட்டது.

மோகினியாட்டத்தை மலையாளத்தின் மகாகவி வள்ளத் தோள் நாராயண மேனன் மீட்டெடுத்து நவீனமாக வடிவமைத்தார். கேரள கலாமண்டலம் என்ற அமைப்பை நிறுவி மோகினி யாட்டத்தைக் காப்பாற்ற நடவடிக்கை எடுத்தார். அவரது முயற்சியால்தான் அதன் மீதான தடை ஓரளவு நீங்கியது. அந்நிறுவனம் மோகினியாட்டத்தை மேம்படுத்தி, பல கலைஞர்களின் திறமையைப் பட்டை தீட்டி, அவர்கள் மூலம் நாடு முழுவதும், வெளி நாடுகளிலும் மோகினியாட்டக் கலையைப் பரப்பியது. அழிவின் விளிம்பில் இருந்த மோகினியாட்டக் கலையை கேரள கலாமண்டலத்தில் பயிற்சி பெற்ற கல்யாணிக்குட்டி அம்மா அதற்குப் புத்துயிர் ஊட்டினார். அதற்கு சாஸ்திரீய வடிவம் அளித்து, இந்தியப் பாரம்பரிய நாட்டியக் கலைகளில் மோகினியாட்டத்தை இடம்பெறச் செய்தார். பின்னர் கதகளி கலைஞர் கலாமண்டலம் கிருஷ்ணன் நாயரைத் திருமணம் செய்து கொண்டார். அவர் எழுதிய மோகினியாட்டம் - வரலாறும் நாட்டிய வடிவமைப்பும் (Mohiniyattam - History and Dance Structure) என்ற நூல் தான் மோகினியாட்டம் குறித்து எழுதப்பட்ட விரிவான ஆதாரபூர்வமான ஆவணம் ஆகும்.

மோகினியாட்டம் ஒருவர் மட்டும் நிகழ்த்தும் கலையாக பாரம்பரியமாக இருந்தது. அதற்கு ஏகஹார்ய அபிநயா என்று பெயர். ஒரே பாடல் மட்டுமே இருக்கும். பாரத நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ள அபிநயங்கள் அதில் முக்கியத்துவம் பெறும். பரத நாட்டியத்தில் உள்ள அம்சங்கள் இதிலும் இருக்கும். பகவதி அம்மனை வழிபடும் சோல்கட்டு எனப்படும் கடவுள் வாழ்த்து, ஸ்வரஜதி, நாட்டியக் கலைஞர் அதன் கருத்தை விவரிக்கும் வர்ணம், பதம், தில்லானா, ஸ்லோகம், சப்தம் என ஏழு அம்சங்கள் இடம்பெற்றிருக்கும். பரத நாட்டியத்தைப் போலவே அரைமண்டியில் நிற்பது, அசைவுகளின் மூலம் பாவனைகளை வெளிப்படுத்துவது ஆகியவை மோகினியாட்டத்தில் முக்கியத்துவம் பெறும். காலில் ஜதி, கைகளில் அபிநயம் ஆகியவற்றில் நாட்டியத்தின் திறன் வெளிப்படும்.

நாட்டியத்தின் பாடல்கள் தமிழ், மலையாளம், சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகள் கலந்த மணிப்பிரவாள நடையில் அமைந்திருக்கும். ஆடை அலங்காரம் மிக எளிதாகவும் அதே சமயம் வசீகரமாகவும் அமைக்கப்பட்டிருக்கும். பெரும்பாலும் வெண்ணிறமும் பொன்னிறமும் கொண்டதாக ஆடை அமைந்திருக்கும். மோகினியாட்டக் கலைஞர்கள் அந்தந்த மண்டலத்துக்கு ஏற்ற அணிகலன்கள் அணிந்து அழகுபடுத்திக் கொண்டிருப்பர். நாட்டியக் கலைஞரின் இடப்புறம் தலையில் வட்ட வடிவ கொண்டை மல்லிகைப்பூவால் கட்டப்பட்டிருக்கும். தென்னிந்திய ஆலயங்களில் காணப்படும் எழில்மிகு சிற்பங்களில் உள்ளதைப் போலவே நாட்டியக் கலைஞர்களின் தோற்றமும் அமைந்திருக்கும். அதுவே நாட்டியக் கலைக்கும் கோயிலுக்கும் இடையிலான உறவைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

குஜராத்தைச் சேர்ந்த டாக்டர் கனக் ரேலே 28 வயதில் திருமணம் ஆன பிறகு மோகினியாட்டக் கலையைக் கற்றுக் கொண்டார். முன்னதாக அவர் கதகளி, பரதநாட்டியம் ஆகியவற்றையும் முறையாகப் பயின்றார். அவரது கதகளி குரு பாஞ்சாலி கருணாகர் பணிக்கரின் யோசனைப்படி கேரள கலா மண்டலத்தைச் சேர்ந்த மோகினியாட்டக் கலைஞர் குரு ராஜலட்சுமியிடம் அவர் பயிற்சி பெற்றார். அதன் பிறகு அவரது ஆசிரியைகளான சின்னம்மு அம்மா, கல்யாணிக்குட்டிஅம்மை, குஞ்சுக்குட்டி அம்மா ஆகியோரது அறிவுரைப்படி மோகினியாட்டக் கலை குறித்து ஆழ்ந்த ஆய்வு மேற்கொண்டார். அதற்காக சங்கீத நாடக அகாதமியின் மானிய உதவியையும் ஃபோர்டு

ஃபவுண்டேஷனின் உதவித் தொகையயும் பெற்றார்.

Dr கனக் தற்போது மும்பையில் நாளந்தா நிருத்ய கலா மகா வித்யாலயா என்ற நாட்டியக் கலை நிறுவத்தின் இயக்குநராக இருந்து வருகிறார். அங்கு மோகினியாட்டத் தில் இளங்கலை, முதுகலைப் பட்டம் நடத்தப்படுகிறது. அத்துடன் அது மத்திய அரசால் ஆய்வு நிறுவனமா கவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பாரம்பரிய நாட்டியக் கலைகளைக் கட்டிக் காக்க வேண்டும் என்பது எனது ஆசை. அதனால்தான் மும்பையில் இந்த நிறுவனத்தை அமைத்தேன். இக்கலையைப் பயின்ற காலத்தில் நான் பட்ட கஷ்டங்கள் பிறர் படக் கூடாது. கலையின் மீது ஆர்வம் உள்ளவர்களுக்கும் கற்க விரும்புவோருக்கும் பிரச்சி னைகள் இருக்கக் கூடாது. ஒரு காலத்தில் எல்லாமே வாய்வழியாகக் கற்பிக்கப்பட்டது. மேடையில் நாட்டியம் ஆடுவது மட்டுமின்றி, இந்தக் கலையைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஏராளமாக இருக்கிறது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். புராணம், ஆலயங்களில்உள்ள கட்டடக் கலையியல், நாட்டிய சிகிச்சை முறை ஆகியவை முக்கியமானவை. அவற்றை நான் நாளந்தாவில் அறிமுகம் செய்துள்ளேன் என்றார்.

மோகினியாட்டத்தைப் புதுப்பித்து, பிரபலமாக்கியதில் கனக் ரிலேக்கு முக்கியப் பங்கு உண்டு. இதில், அறிவியல் உணர்வையும் கல்விசார் கட்டுப்பாட்டையும் புகுத்தியுள்ளார். இந்த நாட்டியத்தில் உடல் அசைவு அனைத்துக்கும் முன்னோடியானது.

மாற்றுத் திறனாளிச் சிறுவர்களுக்காகப் பணியாற்றிய போது தோன்றிய சிந்தனையின் அடிப்படையில் நாட்டியத்தின் அங்க அசைவுகளிலும் அறிவியல் உணர்வைப் புகுத்தி னேன். தசை இயக்கவியல் நிபுணர்கள், முடநீக்கியல் நிபுணர்கள் ஆகியவர்களின் வழிகாட்டுதலுடன் மாற்றுத் திறனாளிச் சிறுவர்களுடன் பணியாற்றினேன். உடலியல் (Anatomy) குறித்து நிறைய கற்றுக் கொண்டேன். அதை நாட்டியத்தில் பொருத்தினேன். அது என் கண்ணைத் திறந்தது. ஒவ்வோர் அங்கத்தின் அசைவையும் புரிந்துகொண்டேன். கால்கள், தசைகள், நரம்பு அசைவுகள் என எல்லாவற்றிலும் தனித்தனியாக அலசி ஆராய்ந்து, புதிய வகையைக் கண்டறிந்தேன். அந்தக் கோட்பாட்டை நாட்டியத்தில் புகுத்தினேன் என்றார்.

புது தில்லி, மோகினியாட்ட மையத்தின் நிறுவனர் பாரதி சிவாஜி கூறுகையில், இந்நாட்டியத்தில் கொஞ்சம் கதகளி, கொஞ்சம் பரத நாட்டியம் ஆகியவற்றின் கூறுகள் இடம் பெற்றதால், ஒரு காலத்தில் இந்த நாட்டியத்துக்கென தனி அடையாளம் கிடையாது. மோகினியாட்டத்தில் உள்ள நுட்பங்கள் மிகக் குறைவே எனக் கருதினேன். குருவாயூரில் கிருஷ்ணாட்டக் கலைஞர்கள் குழுவைச் சந்தித்தேன். அப்போதுதான் நிருத்தியத்தின் அழகு புலப்பட்டது என்றார்.

பிரபல நாட்டியக் கலைஞர் கோபிகா வர்மா, மோகினியாட்டம் செம்மையாக்கப்பட்டது.

பாவமும், அபிநயமும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஜதிகள் கிடையாது. இதற்கென தனித்த ஈடுபாட்டு உணர்வும் அபரிமிதமான தாளம் குறித்த நுட்பமும் தேவைப்படுகின்றன. நாட்டியத்தில் அசைவுகள் நிதானமாகவும் பொறுமையாகவும் இருப்பதால், வேகமாகக் கலையை நிகழத்தவேண்டும் என்று தோன்றும். ஆனால், நாட்டியக் கலைஞர் தாளம், லயம், கதை ஆகியவற்றை சீராகக் கடைப்பிடிக்க வேண்டுமானால், அடக்கமான, கவனம் மிக்க கட்டுப்படுத்தப்பட்ட வேகம் தேவைப்படுகின்றன. ஆடை அலங்காரங்கள், ஒப்பனைகள் அதிகம் இல்லாததால், இந்த மூன்று மணி நேர நாட்டிய நிகழ்ச்சியில் விழியசைவுகள், முக பாவனைகள், கை அபிநயங்கள் மூலமாக எல்லாவற்றையும் நிகழ்த்த வேண்டியுள்ளது என்றார்.

ஓரங்க நாட்டியமாக இருந்த மோகனியாட்டத்தில் தற்போது குழு நாட்டியமாக வளர்ச்சி பெற்றுவிட்டது. குறிப்பிட்ட மண்டலத்தின் நாட்டியம் என்பது மாறி உலகளாவிய நாட்டியக் கலையாக விஸ்வரூபம் எடுத்துள்ளது. ஆண் கலைஞர்களையும் ஈடுபடுத்தி மரபுகளை மாற்றி விட்டது. சீரான அருவியைப் போல் நாட்டிய அசைவுகள், இதமான இசை, கவர்ச்சியான ஆடைகள் எனப் புதுமையாக்கப்பட்டுள்ளது என்றார்.

பாரம்பரிய நாட்டியம் என்று முத்திரையிடுவதை நான் ஏற்கவில்லை. அது பிரிட்டிஷார் முறையாகும். சாஸ்திரம் என்பது அதற்கு மேலானது. அதில் அறிவியலும் உள்ளடங் கியுள்ளது. உடலின் விஞ்ஞானம் கலையின் மூலம் அசைவுகளாக இசையோடு கூடிய அழகியல் கூறுகளைக் கொண்டதாக வெளிப்படுகிறது. உன்னத மான நிலைக்கு எடுத்துச் செல்லப்பட்டால், ஆன்மிக உச்சத்தை எட்டச் செய்யும் என்று கனக் கூறினார்.■

படங்கள்: wikicommons.org

கோரக்பூரில் புற்றுநோய் சிகிச்சை மையம்

ரோட்டரி செய்திக் குழு

மத்தியப் பிரதேசம் கோரக்பூர் மிட்டவுண் ரோட்டரி சங்கம், RID 3120, அங்குள்ள ஹனுமான் பிரசாத் போடர் புற்றுநோய் மருத்துவ மனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஒரு நவீன சிகிச்சை இயந்திரத்தை அளித்துள்ளனர். இங்கு உள் கதிர்வீச்சு சிகிச்சை முறை என்ற நவீன சிகிச்சை மூலம் புற்றுநோய் செல்கள் அழிக்கப்பட்டு, புற்றுநோய்க் கட்டிகள் கரைக்கப்படும்.

இந்த மேம்பட்ட சிகிச்சை முறையை ஆஸ்திரேலியா சிட்னியில் உள்ள மனவியல் மருத்துவ நிபுணர் Dr சைலஜா சதுர்வேதி அறிமுகப் படுத்தினார் என்று கூறிய திட்ட ஒருங்கிணைப்பாளர் நிதின் அகர்வால், சைலஜா இந்த வசதி குறித்து தன் சகோதரரும் லக்னோ ராஜதானி ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவருமான சுனில் சதுர்வேதியிடம் கூறினார். அவர் மூலம் சைலஜாவின் அறிமுகம் கிடைத்து, இந்த புற்றுநோய் சிகிச்சை மருத்துவமனையை மேம்படுத்த திட்டமிட்டோம். அதையடுத்து மருத்துவமனையின் இயக்குநர் Dr HR முரளியுடன் விவாதிக்கப் பட்டது. மேலும் பல்வேறு நவீன சிகிச்சை முறைகள் குறித்து யோசித்து வருகிறோம் என்றார்.

இதற்காக டாக்டர் சைலஜா ஒரு லட்சம் டாலரும் அவரது சகோதரர் சுனில் சதுர்வேதி 10 ஆயிரம் டாலரும் வழங்கியுள்ளனர். மாவட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து (District Designated Funds) 20 ஆயிரம் டாலரை முன்னாள் மாவட்ட ஆளுநர் ராஜ்நீத் சிங் வழங்கினார். மலிவு விலை சானிடரி நாப்கின்கள் உற்பத்தி செய்யும் அமர் துல்சியான் 35 ஆயிரம் டாலர், மற்றும் ரோட்டரி சங்க உறுப்பினர்கள் 25 ஆயிரம் டாலர் அளித்தனர்.

மாவட்ட ரோட்டரி நிறுவனக் கமிட்டியை (DRFC) சேர்ந்த பிரமோத் குமார், TRFன் இந்துமதி கோபிநாத் ஆகியோர் நேபாளத்தின் புட்வல் ரோட்டரி சங்கம் (RID 3292) உதவியில் உலகளாவிய நிதியுதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

36 ஆண்டுப் பழமை வாய்ந்த இந்த மருத்துவமனையில் புதிதாக கருவிகள் 2.75 லட்சம் டாலர் மதிப்பில் சுவிட்சர்லாந்து நாட்டிலிருந்து நவீன கருவிகள் வரவழைக்கப்பட்டுள்ளன. இந்த மருத்துவமனை உத்தரப் பிரதேசம், பிகார், அண்டை நாடான நேபாளம் ஆகியவற்றைச் சேர்ந்த ஏழை, எளியவர்களுக்குப் புற்றுநோய்ச் சிகிச்சை அளித்து வருகிறது.

புதிய வசதிகளுடன் கூடிய பிரிவை Dr சோமசுந்தரம் சுப்பிரமணியன் திறந்துவைத்தார். நிகழ்ச்சியில் DG ஸ்துதி அகர்வால், IPDG ரஞ்சித் சிங், DGE KK ஸ்ரீவஸ்தவா ஆகியோர் பங்கேற்றனர்.

ரோட்டரி சங்கத் தலைவர் விஜய் பிரகாஷ் அகர்வால், செயலாளர் சுதீர் அகர்வால் ஆகியோர் கோரக்பர் பகுதியில் புற்றுநோய் விழிப்புணர்வு முகாம் நடத்தப்படும் என்றனர். மேலும், நோய்கள் குறித்த விழிப்பை மக்களிடம் ஏற்படுத்தவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றனர்.■

புதிய புற்றுநோய் சிகிச்சை கருவியுடன் கிருஷ்ணகுமார் துல்ஸியான், அமர் துல்ஸியான், IPDG ரஞ்சித் சிங், DGN KK ஸ்ரீவத்சவா, சைலஜா சதுர்வேதி மற்றும் நிதின் அகர்வால்.

கல்வித்துறை செயலாளர் நிலா மோகனன், சங்கத்தலைவர் அஜய் மேனன், செயலாளர் ஆஷ்லி டெலானி, PDG திலிப் சல்காவுன்கர், ப்ரகாஷ் பிளான்கர் மற்றும் DRR நிஷித்தா பெட்னேக்கர்.

RC மபுசாவின் கின்னஸ் சாதனை

ரோட்டரி செய்திக்குழு

மபுசா ரோட்டரி சங்கம் RID 3170, 'மனிதர்களை வைத்து மாபெரும் எழுத்து வடிவத்தை' செய்துள்ளது கின்னஸ் சாதனை.

இந்தச் சாதனையை செய்வதில் இரண்டு நோக்கங்கள் இருந்தது; ஒன்று, பிப்ரவரி மாதத்தில் ரோட்டரி இன்டர்நேஷனலின் 114வது பிறந்ததினம், இரண்டு, இதே நேரத்தில் தற்செயலாக அமைந்த ரோட்டராக்டர்களுக்கான தென்கிழக்கு ஆசிய மாநாடான ரோட்டேசியா கோவா 2019.

அக்டோபர் மாதம் 2018ம் ஆண்டில் இந்த முயற்சிக்கானத் திட்டம் தீட்டப்பட்டது மற்றும் "ரோட்டரியின் மனிதாபிமான சேவையை கோடிட்டு காட்டும் வேளையில், யதார்த்தமாக முறியடிக்கக்கூடியதாகவும் பொது மக்களிடம் ரோட்டரிக்கு நல்ல பெயர் வாங்கிக்கொடுக்கும் படியாகவும் இருக்கவேண்டும், அப்படிப்பட்ட ஒரு சாதனையே எங்கள் ஆராய்ச்சியின் நோக்கமாக இருந்தது'' என்றார் RC மபுசாவின் தலைவர் அஜய் மேனன்.

இங்கிலாந்தில் வெஸ்செக்ஸ்-ல் 268 ஆட்கள் கொண்டு நிகழ்த்தப்பட்டதே முந்தைய சாதனையாக இருந்தது.

புதிய சாதனை படைக்கும் மனித எழுத்து வடிவத்தை உருவாக்க, ராஜ்கலாப் தலைமையில் RC மபுசாவைச் சேர்ந்த 20 ரொட்டேரியன்கள் கொண்ட ஒரு முக்கியக் குழு செயல்பட்டது. மபுசா சங்கத்தைச் சேர்ந்த அனைவரும், மற்றும் ரோட்டேசியாவில் பங்கேற்ற ரோட்டராக்ட் பிரதிநிதிகள் உட்பட மொத்தம் 962 நபர்களும் இச்சாதனை செயலில் பங்கேற்றனர்.

கோவா விளையாட்டு ஆணையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் போன்றோர் உதவிக்கு வந்தனர்.

கோவாவின் கல்வித்துறை செயலாளர் நிலா மோகனன் தலைமை தாங்கினார் மற்றும் இந்த சங்கம் ஒரு புதிய கின்னஸ் சாதனையை வெற்றிகரமாகப் படைத்தது என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

RIன் 114வது ஆண்டுவிழாவான இந்த வருடம்; தன்னலமற்ற சேவை என்ற ரோட்டரியின் தாரகமந்திரம்; உலகைப் புரிந்துகொள்ளுதல், நல்லெண்ணம் மற்றும் அமைதி; போலியோவை ஒழிக்க இதன் குறிக்கோள் மற்றும் இந்த வருடத்தின் மையக்கருத்து: உந்துசக்தியாக இருங்கள் போன்றவற்றைக் குறிப்பிடும்படியாக 962 நபர்கள் உருவாக்கிய எழுத்து வடித்தின் முக்கிய செய்தி இருந்தது. ■

தெற்காசிய ரோட்டரி இன்டர்நேஷனல் அலுவலகத்தின் செய்தி

ஜனவரி 2019 சங்கத்தின் கணக்கு வழக்கு

நான்கு மாதங்களாக நிதி செலுத்துவதில் கவனிக்கப்படாமல் இருந்தால், அது ரத்து செய்யப்படும். அவ்வாறு ரத்து செய்யப்பட்டும் ரோட்டரி சங்கங்கள் நிலுவையில் உள்ள அனைத்து சந்தா உள்ளிட்ட தொகைகளை 150 நாட்களுக்குள் தலா ஓர் உறுப்பினருக்கு 30 டாலர் வீதம் (சுமார் ரூ.2075) புதுப்பிப்பதற்கான கட்டணத்துடன் செலுத்தினால், சங்கங்கள் தங்களது பெயர்கள், வரலாறு உள்ளிட்டவற்றைத் தொடர்ந்து வைத்துக் கொள்ளலாம். அனைத்து உதவிகளையும் பெறலாம். அவ்வாறு செய்யாத ரோட்டரி சங்கங்கள் புதுப்பிப்பது காலாவதியாகும்.

TRFக்கு (இந்தியா) பங்களிப்பு

2018-19 ரோட்டரி ஆண்டுக்கு நன்கொடை செலுத்த விரும்புவோர் வரும் 2019, ஜூன் 30ம் தேதிக்குள் செலுத்தவேண்டும். TRF (இந்தியா) நன்கொடை செலுத்த விரும்புவோர் தங்களது வருமான வரிக் கணக்கு எண்ணை (PAN) நன்கொடைப் படிவத்தில் குறிப்பிட வேண்டும். அல்லது வருமான வரிக்கணக்கு அட்டையின் நகலை இணைக்க வேண்டும்.

மானியம் கோருவதற்கான காலக்கெடு

சங்கங்கள் 2019, மார்ச் 31ம் வரையிலான தங்களது செயல்பாடுகள் குறித்து இடைக்கால மற்றும் ஆண்டு அறிக்கைகளை 2019, மே 31ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இல்லாவிட்டால், நிலுவை அதிகரிக்கும். ரோட்டரி சங்கங்கள், ரோட்டரி மாவட்டங்களிடமிருந்து TRF மானியம் பெறுவதற்கு அளிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் இன்னும் வரப் பெறாமல் இருந்தால் அந்த அமைப்புகளிடமிருந்து மானியம் கோரி புதிதாக வரும் விண்ணப்பங்கள் அவர்களது சர்வதேச கூட்டாளிகள் குறித்த விவரங்கள் TRF ஏற்றுக் கொள்ளப்பட மட்டாது.

TRF உரிய அறிக்கையை மூல ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டிய விவர அட்டவணை.

Reporting Documentation	Interim Report	Final Report
Submit report online	Yes	Yes
Upload bills/invoices/receipts	NA	Yes
Upload undertaking	NA	Yes
Upload beneficiary information	NA	Yes
All original hard copies required		
Original Utilisation Certificate and receipts/payment statement	Yes	Yes
Bank statement in original/ certified true copy	Yes	Yes
Refund, if any	NA	Yes

கார்ப்பரேட் நிதிசார்ந்த உலகளாவிய மானியம்

உலகளாவிய நிதியுடன் மேற்குறிப் பிட்ட கார்ப்பரேட் நிறுவனங்களின் நிதியுதவி பெறுவதற்குத் தேவைப்படும் இடைக்கால மற்றும் ஆண்டு அறிக்கைகள்:

- திட்டங்கள் குறித்த புகைப் படங்கள்
- பலனாளிடமிருந்து அதற்கான சான்று ஒப்பங்கள்

எல்லா அறிக்கைகளும் உரிய நேரத்தில் வந்தால், RISAO அலுவலகத்தில் உள்ள கார்ப்பரேட் நிதியக் குழு (CSR team) குறிப்பிட்ட காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

பால் ஹாரிஸ் சொசைட்டி (PHS)

பால் ஹாரிஸ் சொசைட்டி ரோட்டரியின் 2013-14ம் ஆண்டில் அதிகாரபூர்வ திட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. சொசைட்டியில் (PHS) இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் தொடர்ந்து கொடையளித்து உதவுவதில் அர்ப்பணிப்பு உள்ளவர்களாக இருப்பர். அத்துடன் தாங்கள் சார்ந்த சமூகத்திலும் உலகத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ரோட்டரி சங்கங்களுக்கு வலுவளிப்பார்கள்.

சொசைட்டி 2018, டிசம்பர் 31ம் தேதி தொடங்கியது முதல் உறுப்பினராவோர் எண்ணிக்கை இரு மடங்காகி யுள்ளது. தற்போது 22,525 பேர் உறுப்பினர்கள் ஆவர். சொசைட்டி உறுப்பினர் எண்ணிக்கையில் இந்தியா 7ஆவது இடத்தில் உள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வோர் ரோட்டரியன்

ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினரும் ஆண்டு நிதிக்கு (Annual Fund) உதவுவதற்கும் ஃபவுண்டேஷன் மானியம் அளிக்கவும், திட்டத்தில் இடம்பெறவும் ஒவ்வோர் ஆண்டும் ஊக்குவிக்கப்படுகிறார். TRF நிதியில் ஆண்டு நிதி (Annual Fund) மிக முதன்மையான பங்கினை வகிக்கிறது. இந்த நிதியுதவிகள் ரோட்டரியினர் உள்ளூர் அளவிலும் உலக அளவிலுமான சமுதாய மேம்பாட்டுக்கான திட்டங்களைச் செயல்படுத்த உதவும்.

ரோட்டரி உறுப்பினர் நிலை 2018–19 இடை ஆண்டின் நிலவரம்

இடை ஆண்டு நிலவர அறிக்கை (Midyear Update reports) ஆண்டு முழுதும் எப்படிச் செயல்படப் போகிறோம் என்பதைக் காட்டும். அத்துடன் பொதுவான உறுப்பினர் பிரச்சினையை எப்படி சமாளிப்பது என்றும் அறியலாம். இதன் மூலம் ஆண்டு இறுதியில் ரோட்டரியின் பலத்தைக் காக்கலாம். அது தொடர்பாக அறிந்துகொள்ள காட்சித் தகவல் விளக்கத்தை (Power Point presentation) பதிவிறக்கம் செய்ய இணையதளம்: www.rotary.org. அதை அப்படியே ரோட்டரி உறுப்பினர்களுக்காக் காட்டலாம். அல்லது அந்தந்த உள்ளூர்களுக்கு ஏற்ப மாற்றியமைக்கலாம்.

பாராட்டிதழ் பெறுவதற்கு ரோட்டரிக்குத் துணைபுரியுங்கள்

ரோட்டரி சங்கங்கள் தங்களது செயல்பாடுகள், சாதனை களைத் தொடர்ந்து தொகுத்து அவ்வப்போது ரோட்டரிக்குத் தெரிவிக்க வேண்டும். Club Administration, Rotary Club Central, Rotary Showcase ஆகியவை மூலம் சாதனைகளை அறிவித்தால், ரோட்டரியின் சான்றொப்பம் (Rotary Citation) பெறலாம். அந்த சான்றொப்பம் பெறுவதற்கு ரோட்டரி, ரோட்டராக்ட், இன்டராக்ட் சங்கங்கள் RI இணையதளம் My Rotary ஆகியவற்றில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ■

மலர்களின் வலிமை

ஜெய்ஸ்ரீ

மலர்கள் மனநலம் குன்றிய வர்களுக்கு பெருத்த ஆறுதல் அளிக்கிறது என்பதற்கு ரிச்மண்ட் ஃபெளோஷிப் சொஸைட்டியின் இந்த செயல் ஓர் எடுத்துக்காட்டு.

பெங்களூரில் இந்த ஆண்டு ஹோலி பண்டிகையில் ரசாயன வண்ணமில்லை. இயற்கைச் சாயம் தான். அதற்குக் காரணம் ரிச்மண்ட் ஃபேலோஷிப் சொசைட்டி 32 வருடங்களாக இயங்கி வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். மன நலம் குன்றியவர்களுக்குச் சேவை புரிந்து வரும் அந்த நிறுவனத்தில் தங்கியுள்ளவர்கள் தான் 300 கிலோ இயற்கைச் சாயத்தைத் தயாரித்துள்ளனர்.

பச்சை திறன் திட்டம் (Green Skill Project) சுற்றுச்சூழல் பாதுகாப்பானது என்பது ஒரு புறம் இருக்க, இந்த இயற்கை வண்ணத்துக்காக மலர்களை வெயில் படாமல் காய வைத்து, அதிலிருந்து வண்ணப் பொடிகளைத் தயாரிக்கும் பணியில் மனநலம் குன்றியோர் ஈடுபட்டது பெரிய நன்மையைத் தந்துள்ளது என்பது புதிய செய்தி. அதை மலர் சிகிச்சை என்று கூட குறிப்பிடலாம். சூழல் நோக்கத்தில் மலர்க் கழிவின் மறுசுழற்சி என்றும் குறிப்பிடலாம்.

பெங்களூருவில் கிராஃப்டிஸென் (Craftizen) என்ற அமைப்பு கடந்த மூன்றாண்டுகளாக வேலையில்லாத வர்களுக்குத் தொழிற்பயிற்சி, கைவினைத் திறன் பயிற்சி அளித்து வாழ்க்கைக்கு உதவி வருகிறது. அந்த நிறுவனத்தினர் மனநல சிகிச்சை பெறுவோருக்கு மலர்களிலிருந்து வண்ணப் பொடிகளைத் தயாரிப் பதற்குப் பயிற்சி தரலாம் என்று மனவியல் மருத்துவர் S கல்யாணசுந்தரத்திடம் யோசனை அளித்தனர்.

இந்த யோசனையை ஏற்றுக் கொண்டேன். இந்தப் பயிற்சியை ஒரு வகையில் சிகிச்சை முறையாகவும் நோயாளிகளுக்கு அளிக்கலாமே என்று கருதினேன் என்றார் Dr கல்யாணசுந்தரம்.

அதையடுத்து, உதிர்ந்து போன மலர்கள், ஆலயங்கள், திருவிழாக்கள், நிகழ்ச்சிகள், திருமணங்களில் வீணாகக் கொட்டப்படும் பூக்களைத் திரட்டச்

பூக்களின் இதழ்களை மனநலம் பாதிக்கப்பட்டோர் பிரித்து வகை படுத்துகின்றனர்.

செய்தோம். அவற்றை எங்களது மையத்தில் தங்கியுள்ளவர்களிடம் கொடுத்து, இதழ்களைப் பிரித்து, தனித்தனி வண்ணப் பூக்களாகப் பிரித்தெடுக்கப் பயிற்சி அளித்தோம். ஒவ்வொரு மலரிலிருந்தும் ஒவ்வொரு வண்ணப் பொடி தயாரிக்கலாம். உதாரணத்திற்கு, ரோஜாவிலிருந்து இளஞ்சிவப்பு, வெள்ளை, சிவப்பு வண்ணப் பொடிகளைத் தயாரிக்கலாம். சாமந்தி, சூரியகாந்தி பூக்களிலிருந்து மஞ்சள், துளசி இலையிலிருந்து பச்சை, ஊதாப் பூவிலிருந்து ஊதா வண்ணப் பொடிகள் தயாரிக்கப்பட்டன என்று விவரித்தார்.

வண்ணப் பூக்கள் காய்ந்து உலர்ந்த பிறகு, தனித்தனியாகப் பொடிகளாக்கப் பட்டன. அவை அழகாக பாக்கெட்டு களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப் பட்டன என்றும் அவர் கூறினார்.

பலவகையான மனக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டோர் இந்தப் பூக்களைக் கையாண்டபோது, நல்ல பலன் கிடைத்தது.

எங்களது மையத்தில் மனச்சி தைவால் பாதிக்கப்பட்ட ஒரு பெண் தங்கியிருக்கிறார். அவர் திடீரன்று காரணமில்லாமல் யாரையாவது பார்த்தால், கத்தி ஆர்ப்பாட்டம் செய்வார். அவர் மற்றவர்கள் இப்படி மலர்களைப் பிரித்து பணியில் ஈடுபட்டிருந்ததை ஓரிரு தினங்கள் பார்த்தார். ஒரு நாள் திடீரென்று நானும் கலந்து கொள்கிறேன் என்று கூறி முன்வந்து பணியில் ஈடுபட்டார். மெல்ல மெல்ல அவரிடம் நல்ல மாற்றம் ஏற்பட்டது. அவரது குடும்பத்தினர் அவரை வந்து பார்த்தபோது, அவர் முன்பு போல் இல்லாமல், தற்போது அமைதியாக இருக்கிறார் என்று குறிப்பிட்டனர். இதைப் போல் மற்றவர்களிடமும் இந்தப் பூக்கள் நல்ல விளைவை ஏற்படுத்தியுள்ளன என்றார் Dr கல்யாணசுந்தரம்.

அவர் கடைப்பிடித்த திறன் சிகிச்சைத் திட்டத்துக்கு பிரிட்டிஷ் மருத்துவ இதழ் விருது உள்பட பல விருதுகள், பாராட்டுகள் குவிந்துள்ளன. மனநல சிகிச்சைப் பணியை 47 ஆண்டுகளாக மேற்கொண்டு வரும் டாக்டர் கல்யாணசுந்தரம் இந்த மையத்தின் கவுரவத் தலைவராக 30 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். இந்தப் பணியில் கிடைக்கும் மனத் திருப்திக்கு ஈடே கிடையாது என்று கூறினார்.

மலர்ப் பொடியைப் போல் கடந்த தீபாவளி போதும் ரங்கோலிப் பொடிகளைத் தயாரித்துள்ளனர் இந்த மையத்தைச் சேர்ந்தவர்கள்.

மனநல சிகிச்சை பெறுவோரிடம் இது நல்ல பலனைத் தந்திருப்பதால், அவர்கள் தயாரிக்கும் பொடிகளுக்கு ஹோலி, தீபாவளி கொண்டாட்டத்தை அடுத்து, அந்தப் பொடிகள் மூலம் கிடைக்கும் வருவாயில் குறிப்பிட்ட தொகையை ஊதியமாக அளிப்பது குறித்து யோசிக்கப்பட்டு வருகிறது. அப்படி ஊதியம் அளிப்பதால், அது அவர்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

வண்ணப் பொடிகளைத் தயாரிப்பது மட்டுமின்றி, வாழ்த்து அட்டைகளைத் தயாரித்தல், காகித கோப்பைகள் தயாரித்தல், தையல் கலை ஆகிய வற்றுக்கும் பயிற்சி தரப்பட்டு வருகிறது.

பழைய சேலைகளிலிருந்து தாம்பூலப் பைகள், துணிப் பைகளைத் தயாரித்து அளிக்கிறார்கள். அவை சந்தையில் அமோகமாக விற்கப்படுகின்றன என்றார் அவர்.

எல்லி ஜான்சென் என்பவர் ரிச்மண்ட் ஃபேலோஷிப் சொசைட்டி மையத்தை பிரிட்டனில் 1959ம் ஆண்டு நிறுவினார். அதன் கிளைகள் 30 நாடுகளில் உள்ளன. அவற்றின் கீழ் மூன்று மையங்கள் இயங்குகின்றன.■

Rotary
PEOPLE OF ACTION

அமராவதி பள்ளியில் WinS திட்டம்

வி. முத்துக்குமரன்

DG ராஜீவ் சர்மா பள்ளியில் WinS திட்டத்தை சங்கத்தலைவர் ராஜன் சுபாஷ் சில்ஹி மற்றும் சுபாஷ் யாதவ் முன்னிலையில் துவக்கிவைக்கிறார்.

பிரகதி வித்யாலயா, அரசு ஆரம்பப்பள்ளியில் RID 3030 RC அமராவதி இந்திரபுரி அமைத்த ஒரு கைகழுவும் தொட்டி மற்றும் குடிநீர் வசதியை DG ராஜீவ் ஷர்மா தொடங்கிவைத்தார். இந்த வசதிகளால் 250க்கும் அதிகமான மாணவர்கள் பயனடைவார்கள். பள்ளியின் தேவைக்கு ஒரு கிணற்றி லிருந்து போதுமான தண்ணீர் கிடைக்கிறது, மாணவர்களுக்கும் ஆசிரியருக்கும் பாதுகாப்பான குடிநீர் கிடைக்க தண்ணீர் சுத்தி கரிப்பான்கள் பொருத்தப்பட்டுள்ளது என்று சங்கத்தின் தலைவர் ராஜன் சுபாஷ் சில்ஹி கூறினார்.

இந்த சங்கம் 2001 ஆண்டு தொடங்கப்பட்டதில் இருந்து இது வரை 12 குடிதண்ணீர் குழாய்களுடன் கூடிய கைகழுவும் தொட்டிகளை அமைப்பது என குறைந்தபட்சம் நான்கு WinS திட்டப்பணிகளையாவது செயல்படுத்தியுள்ளது. இந்த சங்கம் தத்து எடுத்துள்ள மகுளி கிராமத்தில் ரூ.4 இலட்சம் மதிப்புள்ள ஆறு கழிவறைக் கட்டிடங்களை கட்டியுள்ளது. இதற்கான நிதி ஒரு ரோட்டரி உற்சவத் தின் மூலம் திரட்டப்பட்டது, என்றார். இது தவிர, ஒவ்வொரு வருடமும் நலிவடைந்த குடும்பங்களைச் சேர்ந்த 1,000 குழந்தைகளுக்கு பள்ளிப் பைகள் வழங்கப்படுகிறது.

மழைக்காலம் தொடங்கு முன்பு ஒவ்வொரு வருடம் ஜூலை-ஆகஸ்ட் மாதத்தில் செயல்படுத்தும் மழைநீர் சேமிப்பு பணிக்காக அமராவதியில் 43 உறுப்பினர்களைக் கொண்ட இந்த சங்கம் மிகப் பிரபலம். ஒவ்வொரு வருடமும் சுமார் 35 முதல் 40 வீடுகளின் கிணறுகளைத் தூர்வாறும் பணியினைச் செய்கிறோம், இது எங்களுடைய முத்திரை பதிக்கும் திட்டப்பணி, என்றார் சில்ஹி. மேலும் இந்தப் பணியை கடந்த 10 வருடங்களாக நடைபெறுவதால், நகரத்தில் ரோட்டரிக்கு நல்ல பெயர் அதிகரித்துக் காணப்படுகிறது, என்றார்.

கண் பரிசோதனை முகாம்

நகரத்தில் உள்ள 14 பள்ளிகளில் சங்கத்தின் முன்னாள் தலைவர் Dr அதுல் கதானேவின் ஆதரவினால் மாபெரும் கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. இதில் 13,000க்கும் அதிகமான மாணவர்கள் பரிசோதிக் கப்பட்டு, 1,655 மாணவர்களுக்கு இலவசமாக மேற் சிகிச்சை வழங்கப் பட்டது. மருத்துவமனையில் கண் பரிசோதனை மற்றும் பின்-தொடர்வு சிகிச்சைக்கு ஒட்டு மொத்தமாக ரூ.30 இலட்சத்திற்கு மேலாகும்; இந்த அனைத்து செலவுகளையும் Dr கதானே ஏற்றுக்கொண்டார், என்றார் சில்ஹி.■

கடைசிச் சுற்று ஏன் முக்கியம்

இன்டர்நேஷனல் போலியோப்ளஸ் கமிட்டித் தலைவர் மைக்கல் மிக்கவர்னுடன் ஒரு கலந்துரையாடல்

டியானா ஸ்கோபர்க்

2017ம் ஆண்டினை விட 2018ம் ஆண்டில் அதிகமான நபர்களுக்கு போலியோ வைரஸ் தாக்கியுள்ளது. நாம் தன்னம்பிக்கையை இழக்கிறோமா?

இல்லை, இல்லவே இல்லை. ஒட்டு மொத்தமாக ஒழிக்கச் செல்லும் வேளையில் ஓரளவுக்கு மாறுபாடுகள் இருக்கும் என்று நாம் எப்போதும் எதிர்பார்க்கிறோம். கடந்த நான்கு வருடங்களில் வருடத்திற்கு 100க்கு குறைவான நோயாளிகளே இருந்துள்ளனர். அற்புதமான வளர்ச்சி யின் அறிகுறி இது. போலியாவால் இன்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அரசுகள் மற்றும் ரொட்டேரியன்களின் அர்ப்பணிப்புடன் நாம் செல்வோம்.

போலியோ போன்ற நோயை ஒழிக்க ஏன் மிகவும் சிரமமாக இருக்கிறது?

போலியோ தடுப்பூசி உடனடியாகக் கிடைக்கும் அமெரிக்கா கூட, போலி யோவை ஒழிக்க 20 வருடங்கள் எடுத்துக்கொண்டது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். அமெரிக்காவில் உள்ளது போல நன்றாக வளர்ச்சியடைந்த மருத்துவ வசதிகள் இல்லாத இடங்களில் நாம் இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

நமக்கெதிரே உள்ள சவால்கள் என்ன?

ஆப்கானிஸ்தான், நைஜீரியா மற்றும் பாகிஸ்தான் போன்ற, போலியோ பரவலாக உள்ள நாடுகளில் பல வருடங்களாக சேவையாற்றி வருகிறோம். இந்நிலையில், வேறு பல அடிப்படைத் தேவைகள் உள்ள போது இவர்கள் போலியோ ஒழிப்பிற்காக இவ்வளவு பணத்தை செலவு செய் கிறார்களே என்று அங்குள்ள குடிமக்கள் கவலைப்படுகிறார்கள். எனவே, பிரத்யேகமாக போலியோ விற்கு மட்டும் தொடர்ந்து தடுப்பு மருந்துகளை பெறுவது குறித்து அவர்களிடையே சற்று எதிர்ப்புணர்வு இருக்கிறது. இப்படிப்பட்ட சூழலில் நமக்கு பெற்றோர்களின் ஆதரவு தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்றால், அந்தக் குடிமக்களுக்கும் குழந்தைகளுக்கும் இதர சேவைகளை யும் வழங்குவதற்கான வழிகளை நாம் கண்டறிய வேண்டும்-அதாவது PolioPlus என்பதில் உள்ள பிளஸ் நடவடிக்கைக்கு வழிதேட வேண்டும்.

அந்தப் பகுதிகளில் ஆயுதப் போராட்டம் என்ன பங்கு வகிக்கிறது?

இதனால் தடுப்பு மருந்தைக் கொண்டுச் செல்வது சிரமமாக இருக்கிறது. சர்வதேச போலியோ ஒழிப்பு முயற்சி அமைப்பு, அரசாங்கங்களுடன் மட்டுமல்லாது அரசுக்கு எதிரான குழுக்களுடனும் இணைந்து பணியாற்றுகிறது. ஒவ்வொருவரின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெறுவதற்காக நாம் பணியாற்றுகையில், சில பகுதிகளில் தடுப்பு மருந்து குழுக்கள் மாதக்கணக்கிலும் சிலசமயம் வருடக் கணக்கிலும் கூட உள்ளே செல்ல முடியாமல் இருக்கிறது.

குழந்தைகளை எப்போது தவறவிடு கிறோம் என்று தடுப்பு மருந்து குழுக்களுக்குத் தெரியுமா? அல்லது அவர்களுக்கு அங்கே குழந்தைகள் இருக்கிறார்கள் என்பது கூடத் தெரியாதா?

எப்போது எங்கே குழந்தைகளை நாம் தவற விடுகிறோம் என்று தெரிந்து கொண்டு இப்போது சரியாகக் கையாளுகிறோம் என்று நினைக்கிறேன். நாம் தவற விடும் எண்ணிக்கையைத் தொடர்ந்து குறைப்பது தான் சவாலாக இருக்கிறது. 2016-ஆம் ஆண்டில் நைஜீரியாவில் ஆச்சர்யப்படும் வகையில் பல்வேறு போலியோ நோயாளிகளைக் கண்டு பிடித்ததில் இருந்து நாம் நிறையவே பணியாற்றி இருக்கிறோம், அந்த நாட்டில் போலியோ நோயை முழுவதுமாக ஒழிக்க இரண்டு ஆண்டுகள் ஆனது. இப்போது நாம் GPS துணைக்கொண்டு குழந்தைகள் இருக்கும் இடங்களுக்கெல்லாம் செல்கிறோம், மற்றும் அதிகாரிகளுடன் இணைந்து குழந்தைகளுக்கும் போலியோ தடுப்பூசி கிடைப்பதை உறுதி செய்கிறோம்.

எங்கெல்லாம் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம்?

போலியோ பரவலாகக் காணப்படும் இந்த மூன்று நாடுகளைத் தவிர்த்து, ஏறக்குறைய கடந்த ஐந்து ஆண்டுகளில் உலகத்தில் வேறெங்கும் போலியோவால் யாரும் பாதிக்கப்படவில்லை. நைஜீரியாவில் கடைசியாகப் போலியோ நோய் ஏற்பட்டு மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டது, அப்படி ஏற்பட்டது கூட அந்த நாட்டின் சிறிய பகுதிகளில் தான்.

ரொட்டேரியன்கள் தெரிந்துகொள்ள வேண்டிய மிக முக்கியமான விஷயம் என்ன?

ஆப்கானிஸ்தான், நைஜீரியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் ரொட்டேரியன்களின் அர்ப்பணிப்பும் விடாமுயற்சியும் என் மனதை மிகவும் கவர்ந்தது. போலியோவைக் கட்டாயம் ஒழிக்க அவர்கள் கடுமையாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நாடுகளில் அவர்கள் செய்கிற விஷயங்கள் பாராட்டக்கூடிய வகையில் அற்புதமாக இருக்கிறது.

ரொட்டேரியன்கள் நம்பிக்கையுடன் இருந்து போலியோ ஒழிப்பில் துணைபுரிய வேண்டும். தொடர்ச்சியான நிதியுதவியின் முக்கியத்துவத்தை அரசாங்கத் தலைவர்களுக்கு உணர்த்தக்கூடிய ரொட்டேரியன்களும் நமக்குத் தேவை. நாம் இலக்கிலிருந்து கவனத்தைத் தவறவிடக்கூடாது.■

©தி ரொட்டேரியன்

தானேயின் சுகாதாரப் போராளி

ஜெய்ஸ்ரீ

மகாராஷ்டிர மாநிலம் தானே மாவட்டம் மூன்று கிராமங்களில் 4 ஆயிரம் பேர் பயன்படுத்துவதற்காக 621 கழிவறைகள் கட்டித் தந்ததிலும் சோகன் கிராமத்தில் ஓர் அங்கன்வாடியையும் ஏற்படுத்தியதால் அதுல் பீதேவின் பங்கு மகத்தானது.

கழிவறைகளைக் கட்டித் தருவது முக்கியமல்ல. அவற்றைப் பொது மக்கள் பயன்படுத்துவதுதான் மிகவும் அவசியம் என்கிறார் தானே ஹில்ஸ் ரோட்டரி சங்கத்தின் (RID 3142) உறுப்பினரான அதுல் பிதே. ஆதித்ய பிர்லா கேபிடல் நிறுவனம் வெளியிட்டுள்ள காலண்டர் மற்றும் நாட்குறிப்பில் அவர் குறிப்பிடப்பட்டுள்ளார். மகாராஷ்டிர மாநில அரசு மேற்கொண்ட தூய்மை இந்தியா இயக்கம் (Swachh Bharat Abhiyan) குறித்த கருத்தரங்கில் அவர் பெரிதும் பாராட்டப்பட்டார்.

2012ம் ஆண்டு பிதே ரோட்டரி சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கிராமங்களுக்குப் போய் அவர்களது தேவைகளை அறிந்து கொண்டு செயல்படு என்று என் தந்தை அறிவுறுத்தினார். அதன்படி செயல்பட்டேன் என்று கூறிய பிதே, 2012ம் ஆண்டு டிசம்பரிலிருந்து 2013 மார்ச் வரையில் தனது ரோட்டரி சகாக்களுடன் 100க்கு மேற்பட்ட கிராமங்களில் சுற்றுப் பயணம் செய்திருக்கிறார்.

கழிவறை அவசியம் குறித்து எல்லா கிராமத்தினரிடமும் பேசத் தொடங்கினேன். ஆரம்பத்தில் யாரும் அதையெல்லாம் கேட்கவில்லை. இது குறித்து ஏதாவது அவர்களிடம் பேசத் தொடங்கினாலும் உடனே நழுவிவிடுவார்கள். கழிவறை என்பது ஆடம்பரம் என்று நினைத்தார்கள் என்று கூறிய பிதே, இடைவிடாமல் அவர்களுடன் பேசிய பிறகே சோகோன் கிராமத்தினர் தங்களது வீடுகளில் கழிவறைகளைக் கட்ட முன்வந்தனர் என்றார்.

அந்தக் கிராமத்தில் 10 கழிவறைகளைக் கட்டித் தந்தார். அவரது பதவிக் காலம் நிறைவடையும் போது அந்தக் கிராமத்தில் 250 குடும்பங்களுக்குக் கழிவறைகள் கட்டப்பட்டுவிட்டன.

விருப்ப மதிப்பு

அப்படிக் கட்டப்படும் கழிவறைகளை உரிய முறையில் பயன்படுத்த வேண்டுமே தவிர சரக்குகள் வைக்கும் அறையாக அக்கிராமத்தினர் மாற்றிவிடக் கூடாது என்பதில் அதுல் பிதேவின் குழுவினர் கவனமாக இருந்தனர். தற்போது கழிவறைகள் அவர்களது வீடுகளில் முக்கிய அறையாகிவிட்டன. அங்கு கட்டப்பட்ட 622 கழிவறைகள் குறித்த அனைத்து தகவல்களுடன் அவற்றின் புகைப்படங்களையும் ரோட்டரி சங்கம் வைத்துள்ளது. அவற்றைப் பழுதுபார்ப்பது, பராமரிப்பது ஆகியவற்றை கிராம ஊராட்சியுடன் இணைந்து மக்களே மேற்கொள்கிறார்கள்.

பயனாளியின் ஈடுபாடு

இப்படிக் கட்டப்பட்ட கழிவறைகள் தங்களுக்குச் சொந்தமானவை என்பதை கிராமத்தினர் உணர வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு குடும்பமும் தலா ரூ.3000 தொகையை ஒப்பந்ததாரர் கழிவறையைக் கட்டித் தந்த பிறகு அளிக்க வேண்டும்

அதுல் பீதே, சங்கத்தலைவர் நிலேஷ் புரானிக் மற்றும் PDG ஜெயந்த் குல்கர்ணியுடன் கிராமவாசிகள்.

ரோட்டரி சங்கத் தலைவர் பிதே தொடக்கத்திலிருந்தே உறுதிப்படுத்திக் கொண்டனர். ஒவ்வொருவருக்கும் தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் அரசு அளிக்கும் நிதியை கிராம ஊராட்சி வழங்குகிறது.

இந்தக் கழிவறைகளைக் கட்டுவதற்கு உள்ளூர் ஒப்பந்ததாரர்கள் மூலம் அக்கிராமங்களைச் சேர்ந்த கட்டுமானத் தொழிலாளர்களே ஈடுபடுத்தப்பட்டனர். மேலும், சிக்கனமாகவும் விரைவாகவும் பணியை நிறைவேற்றுவார்கள்.

உலகளாவிய மானியம்

தானேயில் பிறந்து அமெரிக்காவில் குடியேறிய Dr ரேணுகா தேசாய் தனது சொந்த ஊரான தானேவுக்கு வந்தபோது, ரோட்டரி சங்கத்தின் மகத்தான பணிகளைப் பார்த்து தான் அமெரிக்காவில் நியூ ஜெர்சியில் வசிக்கும் செர்ரி ஹில் ரோட்டரி சங்கத்துடன் (RID 7640) இணைந்து செயல்பட உதவினார். இதுவரை அவர்களது பங்களிப்பு 157000 டாலரை (சுமார் ரூ.1.08 கோடி) தாண்டிவிட்டது. இதில் பெரும்பங்கு Dr ரேணுகாவிடமிருந்து கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இப்போதுமாவட்ட ஆட்சியர் ஒருவரின் வேண்டுகோளை அடுத்து, ஆகாய் என்ற கிராமத்தில் 170 கழிவறைகளைக் கட்டுவதற்காக உலகளாவிய நிதியைப் பெறுவதற்கா விண்ணப்பித்துள்ளார் பிதே.

கைகழுவுவதற்கான இடங்கள்

அதுல் பிதே ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் கார்ப்பரேட் சமூகப் பொறுப்புப் பிரிவின் தலைவராக இருந்தபோது, மகாராஷ்டிர மாநிலம் பஞ்ச்கனி என்ற மலைப்பிரதேசம், சதாரா நகரம், சதாரா மாவட்டத்தில் உள்ள வாய் நகரம் ஆகிய இடங்களில் ‘துளி நீர்க் குழாய்களை’ (Tippy Tap) அமைக்கச் செய்தார். இந்தக் குழாய்களை அமைக்க மூங்கில், பிளாஸ்டிக் கேன் அல்லது மூடியுள்ள பிளாஸ்டிக் பாத்திரம் ஆகியவற்றைக் கொண்டு அப்பகுதி மக்களே மிக எளிதாக அமைக்கலாம்.■

உள்ளூர் மக்களின் திறனை கண்டறிய ஒரு சைக்ளோத்தான்

ரோட்டரி செய்திக் குழு

DG *நிகிலேஷ் திரிவேதி சைக்கிள் பந்தையத்தை துவக்கி வைக்கிறார்.*

RC ரூர்கேலா ராயல், RID 3261ன் வருடாந்திர சைக்ளோதானை, சைக்கிள் ஓட்டுதல் பயணத்திற்கும், உடற் பயிற்சிக்குமான ஒரு சிறந்த வழி என பிரபலப்படுத்தவும், சைக்கிள் ஓட்டுவதில் திறன் மிக்கவர்களைக் கண்டறிந்து அவர்களை மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் நடைபெறும் சைக்கிள் ஓட்டும் போட்டிகளில் கலந்துகொள்ள ஊக்குவிக்கவும் இதை நடத்துகிறது. DG நிக்கிலேஷ் திரிவேதி, எட்டு முறை சைக்கிள் சாம்பியன் பட்டத்தை வென்ற மினாட்டி முஹபத்ராவுடன் இணைந்து இந்த நிகழ்ச்சியை துவக்கிவைத்தார். இதில் 1,200 சைக்கிள் ஓட்டுநர்கள் பங்கேற்றார்கள். அதில் 200 அரசுப் பள்ளி மாணவர்களும் மற்றும் 40 காவலர்களும் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சி மகாநதி கோல்ஃபீல்ட்ஸ் லிமிடெட் நிறுவனத் தால் இணைந்து நடத்தப்பட்டது. அங்கு காவல்துறை, சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதற்கான பாதுகாப்பு நிலையம் ஒன்றை அமைத்திருந்தது. பங்கேற்ற அனைவருக்கும் ஒரு ஹெல்மெட் வழங்கப்பட்டது, இதனை வீட்டிற்கு எடுத்துச் சென்று தினமும் ஓட்டும் போதும் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவிறுத்தப்பட்டது. வெற்றிப் பெற்றவர்களுக்கு ரொக்கத் தொகைப் பரிசாக வழங்கப்பட்டது.■

Wordsworld

மண்ணின் மைந்தர்களும், வந்தேறிகளும்

சந்தியா ராவ்

வடகிழக்கு மாநிலப் பகுதி குறித்து அண்மையில் வெளியிடப்பட்ட புத்தகம் இருப்போர் இல்லாதவர்களுக்கு இடையிலான சிந்தனை எப்படித் தோன்றுகிறது, புரிந்து கொள்ளப்படுகிறது என விவரிக்கிறது.

ஒரு அழகுநிலையத்திற்குச் சென்றபோது, அங்கே பணியில் இருந்த 19 வயது பெண்ணைப் பார்த்தேன். அவளது சிரிப்பைப் பார்த்து பேச்சுக் கொடுத்தேன். பேச்சைத் தொடங்குவதற்காக, உன் ஊர் நேபாளமா? என்று கேட்டேன். அதற்கு அவள், இல்லை, டார்ஜிலிங் என்றாள். உடனே புரிந்துகொண்டேன், எந்த நேபாளியும் தன்னை நேபாளி என்பதை விட இந்தியன் என்று கூறிக் கொள்வார்.

இந்த இடத்தில் நான் படிக்க நேர்ந்த ஒரு புத்தகத்தைக் குறிப்பிட வேண்டும். மண்ணின் மைந்தர்கள், வந்தேறிகள்: வடகிழக்கு மாநிலங்களில் உடைமையும் இல்லாமையும் (Insider Outsider: Belonging and Unbelonging in North-East India) என்ற அந்த நூல் கட்டுரைகள் கொண்ட தொகுப்பு. ப்ரீதி கில், சாம் ராட் ஆகிய இருவரும் இணைந்து தொகுத்துள்ளனர்.

அந்தப் பெண் கூறிய டார்ஜிலிங் மேற்கு வங்கத்தில் இருக்கிறது என்பது தெரியும். அந்த ஊர் இன்னும் கண்டறியப்படாத நம் நாட்டின் சமூக, பொருளாதார, புவியியல், பண்பாட்டு, பாரம்பரிய வரலாற்றைத் தொட்டுக் காட்டுகிறது.

அந்தப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள 17 உள்ளீடுகள் என்னைக் கவர்ந்தன. அவரை நம் நாட்டின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியைக் (வடகிழக்கு) குறித்து போதிய புரிதல் இல்லாமை, தகவல் அறியாமை, சிந்தனை இன்மையை வலியுறுத்துகிறது.

இந்தப் புத்தகத்தை வாங்கிய போது, ஒருவர் என்னிடம், அசாம், மேகாலயா, மணிப்பூர், மிஜோரம், திரிபுரா, நாகாலாந்து, அருணாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களைக் குறிப்பிடும்போது ஏன் வடகிழக்கு மாநிலங்கள் என்று குறிப்பிடுகிறோம்? மகாராஷ்டிரம், ராஜஸ்தான், குஜராத் ஆகியவை “மேற்கு” என்றோ, மேற்கு வங்கம், பிஹார், சிக்கிம் ஆகியவற்றைக் வங்காளம் “கிழக்கு” என்றோ குறிப்பிடுவதில்லையே என்று கேட்டார்.



இப்படி அந்த ஏழு மாநிலங்களை மட்டும் தனியாக வடகிழக்கு என்று குறிப்பிடுவது அவற்றை இந்தியாவிற்கு அந்நியமாக்கிவிடுவது போல் அமைந்துள்ளது. இந்த ஏழு மாநிலங்களும் அண்மைக் காலத்தில்தான் பிரிக்கப்பட்டன. மேகாலயாவின் தலை நகராக இருக்கும் ஷில்லாங் ஒரு காலத்தில் அசாம் மாநிலத்தைச் சூழ்ந்துள்ள பகுதி அனைத்துக்குமே தலைநகராக இருந்தது என்பதை ஒரு சிலர் அறிந்திருப்பர். இந்தப் புத்தகத்தைப் படிக்கும்போது, அது மட்டுமல்ல, ஷில்லாங் உள்ளிட்டவை பற்றிய மலரும் நினைவுகளையும் அதன் அரசியல் சமூக வரலாற்றையும் கொண்டு வருகிறது.

அண்மைக் காலத்தில், இந்தப் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் வேலைவாய்ப்பைத் தேடி நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்ந் துள்ளனர். அவர்களில் சிலர் தாங்கள் சென்ற பகுதிகளிலேயே வசதியாகத் தங்கிவிட்டனர். பலர் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகியுள்ளனர்.

சிங்கி (Chinki) என்றும் மோமோ (Momo) என்றும் கேலிப் பெயர்களால் அவர்கள் அழைக்கப்படுகிறார்கள். (சிங்கி என்றால் சீனாக்காரன் என்ற பொருளில் கேலியாக அழைக்கப்படும் சொல். மோமோ என்பது கொழுக்கட்டை போன்ற ஒரு தின்பண்டம் அதை வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அதிகம் சமைப்பார்கள்.)

யாருமே, அவர்களும் நம்மைப் போல் இந்தியாவின் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் என்று மதிப்பதில்லை. இது வேதனை. தென் மாநிலங்களிலிருந்து யார் வடக்கே சென்றாலும் ஒரு காலத்தில் மதராஸி என்றே கேலியாகக் குறிப்பிடுவார்கள். அது மாதிரிதான் இதுவும்.

அவர்களில் பலர் பழங் குடியினத்தவர். அதே சமயம் ஷில்லாங்கில் த்கஹார், கரோ ஹில்ஸ் பகுதியில் பங்கல் என்றும் மிஜோரமில் வை என்ற பழங்குடியினர் அல்லாதோரும் உள்ளனர். இந்த மண்டலத்தில் பெரும்பான்மையாக வங்காளத்தை பூர்வீகமாகக் கொண்டவர்கள் ஆவர். மண்ணின் மைந்தர்களுக்கும் (Insider) வந்தேறிகளுக்கும் (Outsider) இடையிலான உணர்வுகளுக்கு அவர்கள்தான் மூலமாக இருக்கின்றனர். இந்தப் புத்தகம் இப்பிரச்சினையை வெவ்வேறு பார்வைகள் அனுபவங் களின் வாயிலாக பல்வேறு வழிகளில் தொட்டுக் காட்டுகிறது.

அவர்களது சொந்த மண்ணில் வந்தேறிகள் (Outsiders in Their Own Lands) என்ற தலைப்பில் சுஹாஸ் சக்மா எழுதிய கட்டுரையைப் படித்த பிறகு சில விஷயங்கள் தெரியவந்தன. பவுத்த மதத்தைப் பின்பற்றும் சக்மா இனத்தவர் சிட்டகாங் மலைப்பிரதேச தடங்களில் வசிப்போரில் 98.5 சதவீதம் பேர் பல தலைமுறைகளாக

வசித்து வருகிறார்கள். இந்திய, பாகிஸ்தான் பிரிவினையின் போது, அவர்கள் இந்தியாவுடன் இருக்க விரும்பினர். சிட்டகாங் மலைப் பகுதியிடங்கள் பாகிஸ்தான் வசம் அளிக்கப்பட்டன. உடனே, மிஜோரம், திரிபுரா உள்ளடக்கிய பிளவுபடாத அசாமில் வசித்து வந்த சக்மா இனத்தவரை அன்னியர்கள் என்று சுட்டிக் காட்டி தாக்குதலுக்கு ஆளாயினர். அதே சமயம் அருணாசலப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கு தடை வரும் வரையில் நிம்மதி பெருமூச்சு விட்டனர்.

மணிப்பூரில் ராணுவம் பிடித்துச் சென்ற தங்ஜம் மனோரமா என்ற பெண் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு உயிரிழந்த பிறகு, மணிப்பூரைச் சேர்ந்த பல தாய்மார்கள் போராட்டக் களத்தில் குதித்தனர். அதில் ஈடுபட்ட ஐரோம் ஷர்மிளா சிறப்பு அதிகாரம் கொண்ட ஆயுதப் படைச் சட்டத்தை (Armed Forces Special Powers Act) விலக்கிக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி, 16 ஆண்டுகள் இடைவிடாது உண்ணா விரதம் இருந்தார். பதற்றம் நிறைந்த பகுதிக்காகக் கொண்டுவரப்பட்ட அச்சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு ராணுவத்தினர் செயல் பட்டதாக அவர் கண்டனம் தெரிவித்து இந்த உண்ணாவிரதம் மேற்கொண்டார்.



“தண்டனையின் நிகழ்வு” (“Phenomenon of Impunity”) என்ற தலைப்பில் தவ்னவஜம் பிருந்தா (Thounoujam Brinda) எழுதிய கட்டுரையில் மணிப்பூரில் ஆதிக்க சக்தியின் வரம்பு மீறிய செயல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அங்குள்ள குடிமக்களைப் பாதிக்கும் வகையில் அடுத்தடுத்து சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன என்றும் அரசே அடுத்தடுத்து படுகொலைகளுக்குக் காரணமாக இருந்தது என்றும், இன்றும் 30 ஆயுதப்படைகள் செயல் பட்டுக் கொண்டிருந்ததும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஷில்லாங்கில் இன அழிப்பின் கோரப் பற்கள் 1979ம் ஆண்டு தொடங்கி 1990ம் வரையில் தீண்டின. இத்தனைக்கும் நாங்கள் ஆக்கிரமிப்பாளர்களே அல்ல. சொந்த மண்ணில் குடியுரிமை உள்ள அகதிகளாக ஆக்கப்பட்டவர்கள்.

காஷ்மீர் அவலங்களைப் கவனிக்கும் நாம் கிழக்குப் பகுதி யிலிருந்து வரும் அழுகுரல்களைக் கவனிக்கத் தவறிவிடுகிறோம்.

இந்த நூலில் சரிகா துப்பறியும் கதையை எழுதியிருக்கிறார். அது வடகிழக்கு அனுபவங்களைச் சித்திரிக்கிறது. அதில் அர்ஜுன் அரோரா என்ற துப்பறியும் நிபுணர் வருகிறார். அவரது தந்தை பஞ்சாபி, தாயார் நேபாளி. இந்தக் கதா பாத்திரம் சரிகாவின் செத்துப் போன இறைச்சி (Dead Meat), மரணத்தை நினைவில் கொள் (Remember Death), மேலும் பல உடல்கள் வீழும் (More Bodies Will Fall) ஆகிய கதைகளிலும் இடம்பெற்றுள்ளது.

வடகிழக்கு பிரச் சினைகளைத் தில்லியில் இருப்போருக்கும் இதர மக்களுக்கும் வெளிப்படுத்து வதற்குப் புனைகதைகள் நல்ல வாய்ப்பாக அமை வதாகக் கருதுகிறேன் என்கிறார் சரிகா.

நூலில் இடம்பெற்றுள்ள மற்ற கட்டுரைகள், கதைகளில் நம் நாட்டு எல்லையில் இருந்த ஸைல்ஹெட் நகரை கிழக்கு பாகிஸ்தானுக்கு (வங்க தேசத்திற்கு) தாரை வார்த்ததைக் குறிப்பிடுகிறது. இதனால், ஒரு இனத்தின் பண்பாடும் வாழ்வியல் முறையுமே இடம் மாறிவிட்டது. காலனியாதிக்கத்தின் மோசமான விளைவைக் காண்கிறோம். மிஷனரிகள் ஒரு காலத்தில் உள்ளூர் மக்களை வசீகரிப்பதற்காக உள்ளூர் மொழிகளுக்கு முக்கியத்துவம் அளித்து அந்த மொழிகளிலேயே வெளியீடுகளை வெளியிட்டு தங்களது கருத்துகளைப் பரப்பின. மொழி என்பது நுட்பமான கருவி. அதை தங்களுக்குச் சாதமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

கட்டுரையாளர் சாம்ராட் “நாங்கள் இங்கே எப்படி வந்தோம்” (How We Got Here) என்ற கட்டுரையில், இந்த 21ம் நூற்றாண்டில் மக்கள் ஊடகமும் மக்கள் கல்வியும் மாற்றும் வரையில் சாமானிய மக்கள் பேசுவது உள்ளூர் கிளை மொழிகளாக இருக்கின்றன என்கிறார்.

சிப்சாகரிலிருந்து கோல்கத்தாவுக்குக் படகில் பயணம் செய்யும் ஒரு பயணி, தான் செல்லும் இடங்களில் பேச்சு வழக்கில் ஏற்படும் மாற்றங்களை எதிர்கொள்வார். அந்தந்தப் பகுதி மக்களின் பேச்சு அஸாமி மொழியில் தொடங்கி, வங்காள மொழிக்கு மாறும். இடையில் காம்ரூபி, கோல்பரியா, ராஜ்போங்ஷி ஆகிய கிளைமொழிகளையும் கேட்பார். அந்த மொழிகளில் உள்ள பல கூறுகள் அசாமிக்கும் வங்காளத்துக்கும் பொதுவானவையாக இருக்கும் என்று விவரிக்கிறார்.

வெவ்வேறான கூறுகள் ஒருங்கிணைதலும் அதன் வழியாக படிப்படியாக நேரும் நகர்வும் சஞ்சய் ஹஸாரிகாவின் “மண்ணின் மைந்தர்கள், வந்தேறிகள் இடையில் இருப்போர்” (Insiders, Outsiders and Those In Between) எழுத்தில் விவரிக்கப்படுகின்றன. இந்திய மற்றும் மியான்மர் குடியுரிமை பெற்றவர்கள் குறித்து அதில் இடம்பெற்றுள்ளது. மியான்மரை ஒட்டிய 2,000 கி.மீ. இந்திய எல்லைப் பகுதிகளில் வசிக்கும் நாகாலாந்து, மணிப்பூர், மிஜோரம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் மியான்மர் நாட்டுக்குள் 15 கி.மீ. தூரம் வரையில் எந்தவித அனுமதியும் பெறாமல் செல்வதைக் கண்டதாகக் குறிப்பிடுகிறார்.

இந்தியா முழுவதும் முரண்பாடுகள், பகைமை, வேறுபாடுகள் நிறைய இருக்கின்றன. வடகிழக்கு நிலவரம் குறித்து நமக்குக் கொஞ்சம்தான் தெரியும் என்பதால், அங்கே எது நடந்தாலும் பெரிதாகத் தெரிந்து விடுகிறது.

மண்ணின் மைந்தர்களும் வந்தேறிகளும் (Insider Outsider) என்ற இந்த நூல் நமக்குப் பல விஷயங்களைத் தெரிவிக்கிறது.

அர்ஜுன் அரோராவைச் சந்திப்பதற்காகக் காத்திருக்கிறேன்.

கட்டுரையாளர் குழந்தைகள்
எழுத்தாளர் மற்றும் மூத்த
பத்திரிகையாளர்.

ரோட்டரி நியூஸ் ஆண்டு சந்தா செலுத்தும் வழிகள்:

இப்போது நீங்கள் **ரோட்டரி நியூஸ் ஆண்டு சந்தாவை** *ஆன்லைன் மூலமும் செலுத்தலாம். எங்கள் வங்கி விவரம்:*

Bank	:	HDFC Bank SB Account
Branch	:	Egmore, Chennai
A/c Name	:	Rotary News Trust
A/c No.	:	50100213133460
IFSC Code	:	HDFC0003820

ஆன்லைனில் பணம் செலுத்தியப் பின், உங்கள் சங்கப்பெயர், சங்கத் தலைவர்/செயலாளர் பெயர், பணம் செலுத்திய தேதி, எவ்வளவு செலுத்தினீர்கள் மற்றும் UTR *எண் இவற்றை மறக்காமல் எங்களுக்கு இமெயில் செய்து விடுங்கள்.*

சந்தாவை உங்கள் வங்கியில் காசோலை அல்லது ரொக்கமாக கட்டினால் உங்கள் சங்கப் பெயரை மட்டும் அங்கு குறிப்பிடுங்கள். "Rotary club of" *என்பதை தவிர்க்கவும்.*

RI Exchange Rate - March 2019

$1 = ₹69

Rotary at a glance

Rotarians	:	1,219,438
Clubs	:	35,848
Districts	:	538
*Rotaractors	:	157,811
Clubs	:	9,827
*Interactors	:	549,677
Clubs	:	23,912
RCC	:	10,238

**Estimated*

As on March 15, 2019

Membership Summary

As on March 1, 2019

RI District	Rotary Clubs	No of Rotarians	Women Rotarians	Rotaract Clubs	Interact Clubs	RCC
2981	114	4,710	210	41	232	199
2982	68	3,056	152	67	117	53
3000	128	5,387	508	232	682	201
3011	82	3,498	737	47	115	25
3012	90	3,613	823	54	131	56
3020	76	4,039	229	54	466	349
3030	91	4,912	609	81	325	166
3040	95	2,095	234	33	135	142
3053	68	3,055	539	9	57	96
3054	128	6,263	1088	77	324	475
3060	102	4,325	555	59	127	138
3070	103	3,137	332	47	164	58
3080	79	3,400	282	73	226	109
3090	78	1,995	65	36	39	122
3100	78	1,932	117	12	78	146
3110	115	3,815	320	28	52	104
3120	75	3,197	388	31	63	52
3131	132	5,495	1220	94	310	90
3132	98	3,894	397	38	214	151
3141	95	5,629	1347	111	271	84
3142	95	3,512	659	76	205	64
3150	95	3,572	360	60	248	109
3160	72	2,550	148	27	48	81
3170	126	5,710	630	56	346	164
3181	79	3,581	319	56	268	114
3182	84	3,340	255	28	278	95
3190	127	5,065	692	125	369	52
3201	143	5,395	346	95	137	49
3202	130	5,065	258	76	445	47
3211	139	4,457	289	6	98	128
3212	99	4,100	324	95	292	142
3231	80	3,341	288	48	216	305
3232	117	4,821	766	114	349	82
3240	88	3,114	397	47	166	170
3250	101	3,926	698	59	217	176
3261	73	2,641	343	8	105	43
3262	91	3,431	420	37	77	76
3291	147	3,731	725	83	136	600
India Total	**3,781**	**148,799**	**180,69**	**2,320**	**8,128**	**5,313**
3220	71	2,004	286	76	211	73
3271	88	1,524	259	51	19	16
3272	145	2,451	380	50	38	38
3281	208	5,774	853	221	94	189
3282	148	4,263	475	118	48	42
3292	117	4,587	703	121	129	113
S Asia Total	**4,558**	**169,402**	**210,25**	**2,957**	**8,667**	**5,784**

Source: RI South Asia Office

பிகானேரில் போதைப்பொருளுக்கு எதிராக மாணவர்கள்

ரோட்டரி செய்திக்குழு

மாணவர்களுடன் ரொடேரியன்கள் போதை அடிமைக்கு எதிராக உறுதிமொழி எடுத்துக் கொள்கிறார்கள்.

ராஜஸ்தான் கிராமப்புறத்தில் உள்ள வளரிளம்பருவத்தினர் போதைபொருளுக்கு அடிமையாக இருப்பது தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சியை, பிகானேர் மருதரா, RID 3053, ரோட்டரி சங்கம் மற்றும் பிகானேர் சரக ராஜஸ்தான் காவல் துறை கூட்டாக இணைந்து கடந்த 15 நாட்களாக பல்வேறு இடங்களில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சிகளில் பேசிய ரொட்டேரியன்களும் காவல்துறை அதிகாரியும் போதைப்பொருளுக்கு எதிரான பிரச்சாரத்தில் இணையுமாறு மாணவர் களை வலியுறுத்தினர்.

கலந்துரையாடல் அமர்வுகள் மற்றும் செயல்முறைக் கற்றல் போன்றவற்றின் மூலமாக, போதைப்பொருள்கள் பற்றியும் போதைப் பொருளுக்கு அடிமையாகும் ஒரு சந்தர்ப்பத்தை எதிர் கொள்ளும் போது, எப்படி அதிலிருந்து வெளிவருவது போன்றவற்றை மாணவர்கள் அறிந்துகொண்டனர்.

மாணவர்களிடம் உரையாற்றுகையில், “இளைஞர்கள் மற்றும் சிறுமிகள் போதைப் பொருளுக்கு எளிதாக அடிமையாகின்றனர். இது குழந்தைகளின் வாழ்க்கையை மோசமாகப் பாதிக்கும்’’ என்று கூறினார் IG BL மீனா. சங்கத் தலைவர் புனித் ஹார்ஷ், “பிகானேரில் உள்ள மாணவர்கள் போதைக்கு அடிமையாவதற்கு முன்பே, இதைத் தடுப்பதற்கான திறன்களையும் அறிவை யும் அவர்களுக்கு கொடுக்க கூடிய இந்த முக்கியமான தடுப்பு, விழிப்புணர்வு நிகழ்ச்சியை’’ காவல் துறையுடன் இணைந்து அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைவதாக மேலும் தெரிவித்தார்.

ராணி பஜார் தொழில் துறை கூட்டமைப்புடன் இணைந்து டாக்ஸி டிரைவர்களுக்கு ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது, பிறகு அவர் கள் போதைப் பொருள்கள் பயன்படுத்துவதற்கு எதிராக உறுதிமொழி எடுத்தனர்.■

புலம்பெயர்ந்த பணியாளர்களுக்கு ரோட்டரி வழங்கிய போர்வைகள்

ரொட்டேரியன்கள் வயல் தொழிலாளிகளுக்கு படுக்கை விரிப்புகளை வழங்குகிறார்கள்.

இல்லாத மக்களுக்கு சரியான நேரத்தில் போய் உதவுவது மற்றும் ஏழைக் குழந்தைகளை அரவணைப்பது போன்றவை பெண்கள் மட்டுமே உள்ள RC கார்கிஸ் கோலாப்பூர், RID 3170 ரோட்டரி சங்கத்தின் குறிப்பிடத்தக்க விஷயங்கள். இந்த நகரத்தில் கரும்புத்தோட்டங்களில் பணியாற்றக்கூடிய புலம்பெயர்ந்த மக்களுக்கு 75 புதிய போர்வைகள் மற்றும் பை நிறைய துணிகள் போன்ற வற்றை நன்கொடையளித்தனர்.

“குளிர்காலப் பனியிலிருந்து தங்களைப் பாதுகாக்கக்கூடிய சரியான உடைகள் கூட அவர்களுடைய குழந்தைகளிடம் இல்லை. தற்காலிக மான பணியைத் தேடுவதில் பெற்றோர் களுடன் செல்வதால், பெரும் பாலோனோர் பள்ளிக்குச் செல்ல முடிவதில்லை,’’ என்று சொல்கிறார் சங்கத் தலைவர் சுஜாதா லோஹியா.

மற்றொரு முயற்சியில், ஸ்வயம் பள்ளியில் படிக்கும் 35 குழந்தைகளின் கல்விச் செலவுகளை கவனித்துக் கொள் கிறார்கள். இச்சங்க உறுப்பினர்கள் மற்றும் கோலாப்பூர் பப்ளிக் ஸ்கூலைச் சேர்ந்த இண்டராக்ட் மைத்ரேயா உறுப்பினர்களுடன் இணைந்து, அந்த் ஷாலாவைச் சேர்ந்த பார்வைக் குறைபாடு உள்ள 40 குழந்தைகளுக்கு ஊன்று கோல்களை வழங்கினர்.■

RC பாண்டிசேரி சென்ட்ரல் — RID 2981

சங்கதின் 30ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட ஸ்டார்நைட் நிகழ்ச்சியில் 8,000 பேர்களுக்கு மேல் கலந்துக்கொண்டார்கள். ரோட்டரியின் 114வது ஆண்டையொட்டி, ஆல்ஃபா பள்ளியுடன் இணைந்து "குழந்தை வளர்க்கும் கலை" என்ற பப்ளிக் இமேஜ் திட்டத்தைச் சங்கம் நடத்தியது. இந்நிகழ்ச்சியில் சுமார் 500க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றார்கள்.

RC ராசிபுரம் ராயல் — RID 2982

800க்கும் மேற்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற மாபெரும் போலியோ விழிப்புணர்வுப் பேரணியை இந்த புதிய சங்கம் நடத்தியது. இச்சங்கத்தின் பெண்கள் கலந்துக் கொண்ட இந்நிகழ்ச்சி பொது மக்களிடம் ஒரு நன்மதிப்பை ஏற்படுத்தியது.

RC காந்தி சிட்டி வார்தா — RID 3030

PDG மகேஷ் மோகல்கர் முன்னிலையில் கிராமப்புறத்தை சேர்ந்த தகுதிபெற்ற மாணவ/மாணவிகளுக்கு அறுபது மிதி வண்டிகள் வழங்கப்பட்டன. அதிக அளவிலான ரோட்டரி உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்துக் கொண்டார்கள்.

RC புதுகோட்டை சிட்டி — RID 3000

ஆத்மா இரத்த வங்கியுடன் இணைந்து, அடப்பங்காரம் சத்திரம் கிராமத்தில் இரத்த சோகை மற்றும் சர்க்கரை நோய் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. 200க்கும்மேற்பட்ட கிராமவாசிகள் பரிசோதிக்கப்பட்டார்கள் மேலும் அவர்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

சங்க சேவைகள்

RC கிரேடர் விதிஷா — RID 3040

RID 2041, இத்தாலி மற்றும் TRF உடன் இனைந்து ஒரு குளோபல் கிரன்ட் திட்டத்தின் வாயிலாக ஒரு அரசு பள்ளிக்கு ஃபர்னீச்சர்கள் வழங்கப்பட்டது. ஆசிரியர்களுக்கான ஒருபயிற்சியும் இந்த பள்ளியில் நடத்தப்பட்டது.

RC யமுனா நகர் ரிவேரியா — RID 3080

சாலையோர வியாபாரிகள் மற்றும் செருப்பு தைக்கும் தொழிலாளிகள் வெயிலில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள பெரியகுடைகளை சங்கத்தினர் வழங்கினார்கள்.

RC ஃபாரித்கொட் — RID 3090

நகரில் உள்ள பல்வேறு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு ஷூ மற்றும் ஸ்வெட்டர்கள் வழங்கப்பட்டது. இத்தகைய அடிப்படைத் தேவைகளைக் கூட வாங்க முடியாத ஏழை குடும்பங்களில் இருந்து வரும் குழந்தைகளுக்கு உதவியதற்கு ஆசிரியர்கள் சங்கத்தினருக்கு நன்றி தெரிவித்தார்கள்.

RC மொரடாபாத் சென்ட்ரல் — D 3100

ஃபதேபூர்விஷ்னை கிராமத்தில் ‘பிளாஸ்டிக் பயன்படுத்த வேண்டாம்’ என்ற பிரச்சாரம் நடத்தப்பட்டது. சங்க உறுப்பினர்கள் கிராமவாசிகளுக்கு துணிப்பைகள் வழங்கினர்.

RC அஹ்மத்புர் — RID 3132

ரூ.1.4 லட்சம், செலவில் குடிநீர் சுத்திகரிப்பு சாதனம் உள்ளூர் அறக்கட்டளையுடன் கூட்டாக சேர்ந்து பரச்சந்தா கிராமத்திற்கு நன்கொடையாக அளிக்கப்பட்டது. ஒரு மணி நேரத்திற்கு 1,000 லிட்டர் தண்ணீர் சுத்திகரிப்பு செய்யும் இந்த சாதனம், சுமார் 50,000 பேருக்கு பயனளிக்கும்.

RC குண்டக்கல் — RID 3160

இன்னர் வீலுடன் இணைந்து பள்ளிமாணவர்களுக்கு ஒரு RYLA நடத்தப்பட்டது. துவக்கப் பள்ளி குழந்தைகளுக்கு புதிய பலகைகள் வழங்கப்பட்டன. மேலும் ரோட்டரி சங்க உறுப்பினர்கள் மரகன்றுகள் நட்டார்கள்.

RC மைசூர்விஜயநகர் — D 3181

கடந்த 13 ஆண்டுகளாக ரோட்டரி சங்கம் மங்களூர் சென்ட்ரல் நடத்தும் ரோட்டரி விழிப்புணர்வு வினாடி-வினா போட்டியில், சங்கத்தின் முன்னாள் தலைவர் HM ஹரிஷ் தலைமையிலான குழுவினர் முதல் பரிசை வென்றார்கள், ரூ.2,000 பரிசுத்தொகை மற்றும் ஒரு கேடயம் வழங்கப்பட்டது. PDG | B தேவதாஸ் ராய் வினாடிவினாவின் நடுவராக இருந்தார்.

RC அம்பாள்படி — RID 3182

நகரத்தில்உள்ள 25 பள்ளி மற்றும் கல்லூரிகளில், சுமார் 4,800 பெண்கள் பயன்பெறும் வகையில் சானிட்டரி பேட் இன்சினரேட்டர்கள் நிறுவப்பட்டது. இந்த உதவித்திட்டம் ரோட்டரி சங்கம் சென்ட்ரல் செஸ்டர் கவுன்டி, லைன்வில்லே, RID 7450, USA, மற்றும் உதவி ஆளுநர் சுப்பண்ணாபை அவர்களுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டது.

RC பெரும்பாவூர் சென்ட்ரல் — D 3201

எர்ணாகுளம் மாவட்டத்தில் உள்ள சிறிய கிராமமான க்ரரியேலியில் இருக்கும் மார்தோமா லோயர் துவக்கப்பள்ளி யில், சங்கத்தால் கட்டப்பட்ட சமையலறையை DG AV பதி திறந்துவைத்தார். இந்த வசதி இப்பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு சூடான உணவு வழங்க உதவும்.

RC சிவகாசி சென்ட்ரல் — D 3212

DGயின் அதிகாரப்பூர்வ வருகையின் போது, மாணவர்களிடையே சிறந்த சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்தில், கொரோனேஷன் பெண்கள் பள்ளிக்கு ரூ.30,000 மதிப்புள்ள ஒரு சானிட்டரி நேப்கின் இன்சினரேட்டர் நன்கொடையாக வழங்கப்பட்டது. ஏழை நபர் ஒருவருக்கு, இஸ்திரிப்பெட்டி ஒன்று நன்கொடையாக வழங்கப்பட்டது.

சங்க சேவைகள்

RC காட்பாடி — RID 3231

உள்ளூர் அரசு அமைப்புகளுடன் இணைந்து, சங்கம் ஒரு டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு முகாம் ஏற்பாடு செய்தது மேலும் ஒரு பயனாளிக்கு ஒரு மூன்று சக்கர மிதிவண்டி வழங்கப்பட்டது. மேலும் அவர்கள் கே.வி.குப்பம் கிராமத்தில் மரகன்றுகள் நட ஊக்குவித்தார்கள்.

RC மால்டா சென்ட்ரல் — RID 3240

உலக போலியோ தினத்தையொட்டி மால்டா மருத்துவக் கல்லூரி மற்றும் மால்டா மாவட்ட மருத்துவமனையில் ஒரு தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியின் போது DG சயந்தன் குப்தா முன்னிலையில் ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

RC பாடலிபுத்திரா — RID 3250

முழுவதும் குளிருட்டப்பட்ட பிண ஊர்தியை மக்கள் பயன்பாட்டிற்காக, முன்னால் மாநில மந்திரி ஷ்யாம் ரஜக் அவர்களால் அர்ப்பணிக்கபட்டது. PDG சஞ்சய்க் ஹெம்கா மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்துக் கொண்டார்கள். இந்த பிண ஊர்தி மாவைஷ்னோ தேவி சேவை சமித்தியால் இயக்கப்படும்.

RC சுந்தரகார் டவுன் — RID 3261

எட்டு மருத்துவர்கள் கொண்ட குழுவுடன் ஒரு மாபெரும் மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது, இதில் பல்வேறு வியாதிகளுக்காக 2,000க்கும் மேற்பட்ட நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டார்கள். இச்சங்கம் 70 சால்வைகளை மனநல காப்பகத்தில் இருக்கும் பெண்களுக்கு விநியோகித்தது.

RC கல்கத்தா மிட் சவுத் — RID 3291

ஒரு மதிப்பாய்விற்குப் பிறகு, தாஸ்கா கிராமத்திலுள்ள ஒரு அரசாங்க ஆரம்பபள்ளிக்கு ரூ.73,000 செலவில், இந்த சங்கம் 50 மேசை மற்றும் பெஞ்சுகளை நன்கொடையாக வழங்கியது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு ரோட்டரி சங்கம் பாட்டர்ஸீய, பிரிக்ஸ்டன் மற்றும் பிரிட்டனில் உள்ள கிளாப்ஹாமில் இருந்து ரூ.47,840 நிதியுதவிப் பெறப்பட்டது. இந்நிகழ்வில் DG முகுல்சின்ஹா கலந்துகொண்டார்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

சுவாரசிய செய்திகள்

இனி தண்டோரா இல்லை

ஏலம் விடப்படும் சொத்துகளைப் பற்றிய தண்டோரா அடித்து அறிவிக்கும் முறை, விரைவில் பழைய முறையாகி விடும். இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (செபி), பழைய வழக்கமான, தண்டோரா போட்டு பொதுமக்கள் முன்னிலையில் ஏலம் விட்டு சொத்துகளை இணைக்கும் முறையை மாற்றி பத்திரிக்கை ஏல அறிவிப்பு மற்றும் இ-ஏலம் போன்ற முறைகளை முன் மொழிகிறது. தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் படி இணைக்கப்பட்ட சொத்துகள் பற்றிய அறிவிப்பு பிரகடணம், சொத்துக்களின் முனைப்பான பகுதியிலும், வரி மீட்பு அதிகாரி அலுவலகத்தின் அறிவிப்புப் பலகையிலும், ஒழுங்கு முறையின் நகலை ஒட்டுவது கட்டாயமாகும்.

பள்ளியில் ஸ்விக்கி மதிய உணவிற்குத் தடை

சென்னையில் பிரபலமான பள்ளியில் "படிக்கும் தங்கள் குழந்தைகளுக்கு உணவு டெலிவரி செய்யும் செயலிகள் மூலம் மதிய உணவு வழங்குவதற்கு தடை" என்று பெற்றோர்களுக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கை, அனைத்து சமூக வலை தளங்களிலும் வைரல் ஆனது. இது குழந்தைகளின் பாதுகாப்பைக் கேள்விக் குறியாக்குகிறது. முன் பின் தெரியாதவர்கள் பள்ளிக்கு வந்து உணவு வழங்குவதை அனுமதிக்க முடியாது. பொதுவாக மதிய உணவு அல்லது இடைவெளியில் சாப்பிடுவதற்கான நொறுக்குத் தீனிகளை நாங்கள் பரிந்துரைப்பதில்லை என அந்த சுற்றறிக்கையில் பள்ளி முதல்வர் குறிப்பிட்டிருந்தார்.

'முட்டை எறிந்த பையனுக்கு' நிதி ஆதரவு கிடைக்கிறது

சமீபத்தில் நியூசிலாந்தில் உள்ள இரண்டு மசூதிகளில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு, முஸ்லீம் குடிவரவுகளைக் குற்றம் சாட்டிய ஆஸ்திரேலியா செனட் உறுப்பினர் ஃப்ரேசர் அன்னிங்கின் மேல் முட்டை எறிந்த வில் கொன்னோலிக்கு ஆன்லைன் மூலம் இதுவரை சுமார் ரூ.30 லட்சம் நிதி திரட்டப்பட்டிருக்கிறது. இந்த நிதி கொன்னோலியின் வழக்கு செலவிற்கும்,அதிக முட்டைகள் வாங்கவும் திரட்டப்பட்டது.

இந்த ஆண்டின் வார்த்தை-நாரி சக்தி

ஜெய்ப்பூர் இலக்கிய விழாவில் 2018 வருடத்தின் ஹிந்தி வார்த்தையாக "நாரி சக்தி", என்ற வார்த்தையை ஆக்ஸ்போர்ட் அகராதி அறிவித்தது. இச்சொற்றொடரை ஒரு குழு இது பெரும் கவனத்தை ஈர்த்தது மேலும் பண்புகளை, மனநிலையை அல்லது முன்னுணர்வுகளை பிரதிபலித்ததால் தேர்வு செய்தது.

கால்வின் கிளீனின் நேபாள திருநங்கை மாடல்

அஞ்சலி லாமா என்ற திருநங்கையை கால்வின்க்ளீன் தனது விளம்பர மாடலாக தேர்வு செய்திருக்கிறது, இவர் நேபாளத்தின் முதல் திருநங்கை மற்றும் உலகளவில் பன்னாட்டு ப்ரண்ட்களுக்கு விளம்பர மாடலாக இருக்கும் இவர் போன்ற வெகு சில மாடல்களில் ஒருவர் ஆவார். அவர் பேஷன் உலகத்திற்கு, முதல் முதலில் 2017ம் ஆண்டில் லாக்மே பேஷன் வீக் வாயிலாக அறிமுகமானார். இரண்டு பருவங்கள் மற்றும் 3 முயற்சிகளுக்கு பிறகு அவருக்கு ஒரு ப்ரண்ட் மாடல் என்ற அந்தஸ்து கிடைத்தது.

ஒருங்கிணைப்பு: ஜெய்ஸ்ரீ, வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

கைகொடுக்கும் நவீன தொழில்நுட்பம்

ரோட்டரி செய்திக்குழு

இப்போது இந்தியாவில் உள்ள ரோட்டரி மாவட்டங்கள், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்க நவீன தொழில் நுட்பத்தையும் புதுமையான யோசனைகளையும் பயன்படுத்துகிறது. 3170 மற்றும் 3240 RI மாவட்டங்களின் குறைந்தபட்சம் இரண்டு DGEக்கள் - தங்களின் சங்கம் மற்றும் மாவட்ட அலுவலர்களுக்கான சமீபத்திய பயிற்சித் திட்டங்களின் போது நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்த முயற்சி செய்தனர் என்று RISAO அதிகாரி ஒருவர் கூறுகிறார். இந்த பயிற்சி நிகழ்ச்சிகளில் நேர்முகப் பயிற்சியைத் தவிர்த்து, நேரலைப் பயிற்சி தொகுதிகளைத் தரும் RISAO ஊழியர்களுடன் தொடர்புகொள்ள இணைய வழி கான்ஃபரன்ஸ் கருவிகளையும் பயன்படுத்துகிறார்கள். பங்கேற்பாளர்களுக்கு

இது போன்ற புதுமையான பயிற்சி உத்திகளைப் பிடித்திருக்கிறது, மற்றும் இதர மாவட்டங்களும் இந்த புதுவித நடை முறைகளை தங்கள் பயிற்சி கருவிகளாகப் பயன்படுத்தத் திட்டமிடுகிறார்கள்.

RID 3170-இன் பயிற்சி நிகழ்வில் சங்கத் தலைவர், செயலாளர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் துணை ஆளுநர்கள் உட்பட 180 பிரதிநிதிகளுக்கு அதிகமானோர் கலந்துகொண்டனர். DGE கிரிஷ் R மசுர்கர், மாவட்டப் பயிற்சியாளர் PDG வினய் பாய் ராய்கர் போன்றோர் தவிர இதர மாவட்டத் தலைவர்களும் கலந்து கொண்டனர். ■

Rotary PEOPLE OF ACTION

பெண்களுக்கான ஓர் விழிப்புணர்வு திட்டம்

RC சோனேபட் மிட்டவுன், RID 3012, தனது சேவைத் திட்டமான "W-1000"ன் கீழ் ஹரியானாவிலுள்ள சோனேபட் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள அரசு பள்ளிகளில் பயிலும் 1,000 மாணவிகளுக்கு, தங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும் மேலும் பெரிய இலக்குகளை அடைவதற்கு அவர்களை ஊக்குவிக்கவும் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கினார்கள். உடல் நலம் மற்றும் சுகாதாரம் போன்றவற்றிலும் அந்த மாணவிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

கராத்தே கலையை பள்ளிப் பெண்களுக்கு கற்று தரும் காவல்துறை அதிகாரி.

சங்க உறுப்பினர்கள் மாணவிகளிடம் மாத விடாய் சுகாதாரம் பற்றி உரையாடியதோடு மட்டுமல்லாமல் சுகாதாரமான நாப்கின்களையும் பள்ளியில் உள்ள இளம்பெண்களுக்கு விநியோகித்தனர். பிரேக் பாக்ஸ் இந்தியா உடனான CSR ஒப்பந்தத்துடன் வழங்கினார். ஆறு நாப்கின்கள் வழங்கும் இயந்திரங்கள் பல்வேறு அரசு பள்ளிகளில் நிறுவப்பட்டுள்ளது.

HIV, மார்பகம் மற்றும் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சி சங்கத்தால் நடத்தப்பட்டது.

மாணவிகள் பலனடையும் வகையில், தொழில்துறை ஆலோசனை மற்றும் சட்ட விழிப்புணர்வு, சுய பாதுகாப்பு மற்றும் யோகா பயிற்சி போன்ற மேலும் பல செயல்பாடுகளையும் சங்க உறுப்பினர்கள் செய்தார்கள்.■

அன்பு செலுத்த வாய்ப்பு கொடுங்கள்

பரத் மற்றும் ஷலான் சவூர்

உங்கள் ஆத்திரம் ஒருவரை சங்கடப்படுத்துமா? பிறருடைய ஆத்திரம் உங்களை சங்கடப்படுத்துமா? அமெரிக்காவில் உள்ள போர்ட்லேண்ட் ஸ்டேட் யுனிவர்சிட்டியில் நடத்தப்பட்ட சமீபத்திய ஆராய்ச்சி சங்கடப்படுத்த முடியும் என்று சொல்கிறது. கேலி செய்வது, அசிங்கப்படுத்துவது மற்றும் கொடுமைபடுத்துவது, குத்திக்காட்டுவது, புண்படுத்துவது, காயப்படுத்துவது. வார்த்தைகளை விட புண்படுத்தியதை மனம் தொடர்ந்து நினைத்துக்கொண்டே இருக்கிறது. ஆழ்ந்த தூக்கத்தில் நீங்கள் இருந்தாலும் கூட கொந்தளித்துக் கொண்டிக்கும் உங்கள் உணர்வுகளால் அர்த்த ராத்திரியில் திடுக்கென விழித்துக் கொள்வீர்கள். வெளிப்படையாகவே, இந்த ஆத்திரத்தால் நீங்கள் படுத்துக் கொண்டே இராத்திரி முழுவதும் காத்தாடியை வெறித்துக் பார்ப்பது மட்டுமல்லாமல், உங்கள் துணையின் தூக்கத்தையும் கெடுக்கும்.

ஒரு வருடத்திற்கு முன்பு, நான் ஒருவரை கேலி செய்தபோது, அவள் தன்மையாகவும் உணர்வுடனும், அ-ப்-ப-டி சொல்லாதீங்க! என்றாள். அந்த மென்மையான கண்டனம் எனக்கு சுருக்கென்று இருந்தது. அதன் பிறகு எனக்கு கேலி செய்யும் ஆசையே ஓடிவிட்டது. அப்போதிருந்து என் வார்த்தையிலும் பேசும் தொனியிலும் கவனமாக இருக்கிறேன். நான் தவறாகப் பேசும்போது, அசௌ கரியமாக உணர்ந்து, எனக்குள் எங்கிருந்து இது வந்திருக்கிறது? என்று என்னை நானே கேட்டுக்கொள்வேன். ஒரு சுயக்கட்டுப்பாடு செயல்முறைக்கு இந்தக் கேள்வி தேவையாக இருக்கிறது, இது எங்கிருந்து வருகிறது என்பதை புரிந்துகொள்வது உண்மையிலேயே சுவாரஸ்யமானது.

கடலில் ஒரு அலை. நம்மிலிருந்து எப்படி வேறொருவராக இருப்பது என்பதைப் பற்றி ஐன்ஸ்டீன் - நம்மிலிருந்து தனியே விலகி இருப்பதை நமது எண்ணத்தில் தோன்றும் மாயைக் தோற்றம் என்று விசித்திரமாக எழுதினார் - ஒரு வரைமுறைக்குட்பட்டு தான் நாம் பொருள்களைப் பார்க்கிறோம். அதாவது, நான் ஆத்திரம் கொள்ளும்போது, கடலில் இருக்கும் ஒரு அலை இன்னொரு அலையைப் பார்த்து, என் கண்ணோட் டத்தை தடுக்கிறாய்! ஒதுங்கிப் போ! என்று கத்துவது போல, என் அணுகுமுறைகள் அல்லது மாண்புகள் அவமதிக்கப்படுவதாக நான் உணரும் போது, பரந்த கண்ணோட்டம் அகன்று, குறுகிய மனப்பான்மையின் உந்துதலால் எனக்கு ஆத்திரம் வெளிப்பட்டுவிடும்.

அதனால் என் ஆத்திரம் எங்கிருந்து வருகிறது என்பதைத் தெரிந்துகொண்டேன் - என் குறுகிய மனப்பான்மையிலிருந்து தான். நான் கேலி செய்வதை சரியென நிரூபிக்கலாம், ஆனால் அப்படி செய்வது என் குறுகிய மனப்பான்மை யை இன்னும் ஆழமாகக் காட்டும். அந்த குறுகிய மனப்பான்மை நல்ல நிலை அல்ல - அங்கே வேதனை, உணர்வின்மை, நிராகரிப்பு, கண்ணீரற்ற அழுகை, தனிமை, பயம், மனம் உடைதல், கோபம், மனச் சோர்வு போன்றவை இருக்கும். அனைத்தும் தேவையற்ற அழுத்தங்களைக் கொடுத்து நம் உடலைப் பாதிக்கிறது.

அப்படி சொல்லாதீங்க! என்று சொன்ன என் தோழிக்கு நன்றி, இது ஒரு நல்ல மனநிலையில் என்னை வைத்திருக்கிறது. ஆத்திரத்தின் சாயல் கொண்ட ஏதாவது சொல்லவேண்டும் எனத் தோன்றினால், உடனே என் எண்ணங்களை கேள்விக்கு உள்ளாக்குகிறேன். இது போன்று நமக்குள்ளே சுய-பரிசோதனை செய்வது மிகவும் இதமாக இருக்கும். வாய்மொழியில்லாத பாடத்தை நீங்கள் கற்றுக்கொள்வீர்கள், அது உங்கள் உள்ளத்தின் நிசப்தமான பகுதிக்கு உங்களை அழைத்துச் சென்று ஒளியூட்டும். அமைதி மட்டு மல்ல பேச்சும் கூட பொன்னானது என்று நீங்கள் ஆழமாகப் புரிந்து கொள்கிறீர்கள். அதுமுதல், எல்லா சமயத்திலும் இல்லாமல் பெரும் பாலான நேரத்தில் நான் மென்மையான அமைதி கொண்ட ஒரு புதுவாழ்வில் அடியெடுத்து வைத்துள்ளேன்!

பணிவாகவும் மென்மையாகவும் இருங்கள். புகழ்பெற்ற தத்துவ மேதை ஜே கிருஷ்ணமூர்த்தி (ஜேகே), மரியாதை தெரிந்த, அன்புள்ளம் மற்றும் பண்பட்ட நடத்தைக்கு உதாரணம். மதியம் 1.15 மணிக்கு அவருடைய மேலதிகாரி ஒரு முறை தவறுதலாக காலை வணக்கம் கிருஷ்ணாஜி என்று வணக்கம் தெரிவித்த போது, ஜே கே மென்மையாக, காலை வணக்கம், மைக்கேல் என்றார். ஜே கே தற்செயலாக சமையல் அறைத் தரையில் தண்ணீரை சிந்திய போது, மைக்கேலிடம் குற்ற மனப்பான்மையுடன், மன்னித்துக் கொள்ளுங்கள். தண்ணியை சிந்தி விட்டேன். மன்னித்து விடுங்கள், நான் துடைத்து விடுகிறேன் என்றார்.

நம் அனைவரிடமும் அடக்கம் என்ற மிக அழகான உணர்வுகள் விதைக்கப்பட்டிருக்கிறது. இது அமைதி, கட்டுப்பாடு மற்றும் கண்ணி யத்துடனும் வைத்திருக்கிறது. ஆத்திரப்படும்போது, வெறுப்பு, கீழ்த்தரம், அகந்தை கொண்ட எண்ண அலைகளை பிரபஞ்சத்திற்கு அனுப்பி, அதை மேலும் குளறுபடியாக்குகிறோம். நாம் அடக்கத்துடன் நடக்கும்போது, பண்பான, இனிமையான, பகட்டில் லாத எண்ண அலைகளை வெளிப் படுத்துகிறோம், அது சுற்றுப்புறத்துக்கு புத்துணர்வு ஊட்டும்.

அடக்கத்துடன் இருப்பது என்பது ஒரு கலை - நீங்கள் எதையும் எதிர் பார்ப்பதில்லை, அனைத்திற்கும்

பாராட்டுதலும் நன்றியும் கொண்டிப்பீர்கள். மாபெரும் கடல் கூட சல சலப்புடன் ஓடிவரும் நதிகள் தங்களுடன் சங்கமம் ஆவதற்கு காத்துக்கொண்டிருக்கிறது.

ஆத்திரம் கொண்ட அணுகுமுறையை நாம் தினந்தோறும் கடந்து கொண்டிருக்கலாம். நீங்கள் ஆத்திரத்தை வெளிக்காட்டும் போது, அது உங்களை நோக்கி திரும்பவும் வருகிறது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். ஆக, அன்றைய நாளின் இறுதியில் நீங்கள் திருப்தியில்லாமலும் எரிச்சல் கொண்டவராகவும் இருக்கலாம். பிறரைக் குற்றம்சாட்டி, மென்மேலும் எதிர்மறை அதிர்வுகளை உருவாக்குவதற்குப் பதிலாக, நம்மை சீண்டுகிறார்கள் என்பதை உணர்ந்து விழித்துக்கொள்வது அதிகப் பலனளிக்கக்கூடியது, ஏனென்றால் அது நம் கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது. நமது உடலின் நோய் எதிர்ப்பு மண்டலம் ஆரோக்கியமாக இருக்க நமது மனநலம் ஆரோக்கியமாக இருக்கவேண்டும். அசௌகரியமான, இனிமையில்லா உணர்வுகள் நம் ஆரோக்கியத்தை மோசமாக பாதிக்காத வகையில் கவனித்துக் கொள்ள வேண்டும்.

காட்சியிலிருந்து வெளி யேறுங்கள். நாம் ஆத்திரப் படாமல் இருக்க அல்லது மற்றவரின் ஆத்திரத்தால் பாதிக்காமல் இருக்க இரண்டு அழகான வழிகள் இருக்கிறது. ஒன்று, மனதளவில் அதிலிருந்து கொஞ்சம் விலகி, இந்தக் காட்சியிலிருந்து உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள், அதனால் இதில் நீங்கள் ஒரு அங்கமாக இருக்கமாட்டீர்கள். அன்பின் மூலமாக நாம் வளர்கிறோம், கொடுமை வழியாக இல்லை. விலகியிருக்கும்போது, புண்படுத்துவது அல்லது பதிலடி தருவது போன்ற உந்துதல் மறைந்து விடுகிறது. இதனால் உங்கள் மனதில் கோபத்தால் ஏற்படும் படபடப்பு இருக்காது, மேலும் சுற்றுப்புறத்தை இனிமையாக வைத்திருக்கிறது. ஒரே ஒரு கை மட்டும் தட்டும்போது, அமைதி மட்டுமே தர முடியும். விலகும் போது நீங்கள் அன்பையும், ஆரோக்கியமான வற்றையும் முன்னெடுத்துச் செல்லும் அனைத்தையும் தருகிறீர்கள். இதை நீங்கள் ஞாபகத்தில் வைக்கும் போது, விலகியிருப்பது தன்னிச்சையாகவும் மிக இயல்பாகவும் வந்து விடும்.

இரண்டாவது வழி, நமக்குள் இருக்கும் ஆத்திரம் அனைத்தையும் சமாதானம் போன்ற ஓர் உயர்ந்த நோக் கத்திற்காகவும், ஆக் கப்பூர்வமான நடவடிக்கைக்காகவும் வடிகால் அமைத்துப் பயன்படுத்த வேண்டும். இது அமைதியை அனுபவிக்கவும், மனச் சாந்தத்தின் இனிமை சுவைக்க உதவும், மேலும் அவற்றை மற்றவர்களுக்கு வழங்க ஒரு ஊடகமாக ஆகி விடுகிறீர்கள். என்னைப் பொறுத்த வரை, இது ஒரு முன்னேற்றமாக இருந்தது: அமைதியின்மையால் என் இதயம் படபடப்பாக இருக்க நான் விரும்ப வில்லை. வாழ்க்கை எளிமையாக இருக்க வேண்டும், ஏனென்றால் எளிமை தான் அமைதி என்பது போல எனக்குத் தோன்றியது... ஆனால் வாழ்க்கையை நான் எளிமைப்படுத்தும் போது முரண்கள் தொடர்ந்தன, அமைதி குழைந்தது என்பதை புரிந்து கொண்டேன். அதன் பின்பு அந்த சூழலின் உக்கிரத்திலிருந்து விலகி நிற்கிறேன். இது வியக்கத்தக்க அளவுக்கு ஒரு ஆழ்ந்த அமைதியும் தைரியமும் கொடுக்கும்.

முடிவாக, வாழ்க்கையில் பாராட்டுகிற விஷயங்களில் அவ்வப் போது கவனம் செலுத்தும் அழகானக் கலையைப்பயிற்சி செய்யுங்கள். இப்பயிற்சி நேர்மறை உணர்வுகளை வெளிப்படுத்தவும், படபடப்பைக் குணப்படுத்தும், இதயத்துடிப்பைக் குறைக்கவும் செய்கிறது என்று கலிபோர்னியா, பவுல்டர் கிரீக்கிலுள்ள ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். இதனால் பயனுள்ள நியூரோட்ரான்ஸ்மிட்டர்களை மூளை வெளிவிடுகிறது. தலாய்லாமா வேலைப்பளு அதிகம் இருக்கும் நாளில் கூட அடிக்கடி சாளரத்தின் வழியே எழில்கொஞ்சும் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருப்பார். கலிஃபோர்னியா ஓஜையில் உள்ள தன்னுடைய பைன் பண்ணைவீட்டிற்கு ஜே கிருஷ்ணமூர்த்தி திரும்பும் போதெல்லாம், நடைபாதையில் பல்வேறு வண்ணப்பூக்கள் அசைந்தாடுவதை நேசத்துடன் இரசித்துக் கொண்டிருப்பார். மலர்ந்திருக்கும் சிவப்பு மலர்களை மென்மையாகத் தன் கைகளில் ஏந்தி, அதன் நறுமணத்தைச் சுவாசிப்பார். தன் மனம் முழுவதையும் கடவுள் மற்றும் புனைவு கதைகள் மீதே வைத்துக்கொண்டு ஒரு வீல்சேரில் உட்கார்ந்திருந்தவரைப் பற்றி நான் படித்தேன். அது ஒரு பயங்கரமான எண்ணம், ஆனால் உண்மையிலேயே வாழ்வை அனுபவிப்பதற்கான ஒரு அற்புதமான வழி. ஒரு இனிமையான, சிறிய, குட்டி தேவதையிடம் ஆத்திரப்பட மாட்டீர்கள் தானே?

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spiritual & You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

முக்கிய செய்திகள்

RID 3190, RC பெங்களூர் ஆர்சார்ட்ஸ் தலைவர் D ரவி சங்கர், நீலகிரியின் தோடா பழங்குடியின சமூக குழந்தைகளின் கல்விக்காக உதகமண்டலம் (ஊட்டி) மாவட்ட ஆட்சியர் இன்னொசென்ட் திவ்யாவிடம் ரூ.10 இலட்சத்திற்கான காசோலையை வழங்குகிறார்.

சமீபத்தில் மும்பையில் நடைபெற்ற விழாவில் மாவட்ட மாநாட்டில் RID 3142 அறிவித்த தலைசிறந்த மனிதாபிமான சேவைக்குரிய விருதினை RIPN சுஷீல் குப்தா, PRID அசோக் மகாஜனுக்கு வழங்கினார். படத்தில்: (இடதுபுறத்திலிருந்து) நந்திதா கங்கூலி, வினிதா, RIPN சுஷீல் குப்தா, PDG Dr சந்திரசேகர் கோல்வேகர், PRID அசோக் மகாஜன், PDGs வெங்கட் கத்வால், லதா சுப்புராய்டு (3141) மற்றும் B M சிவராஜ் (3142).

இவான்ஸ்டோனில் RI தலைமையகத்தில் RIPE மார்க் மெலோனி உடன் பல்வேறு மண்டலங்களைச் சேர்ந்த 2019–20 ஆண்டுக்கான ரோட்டரி மக்கள்தொடர்பு ஒருங்கிணைப்பாளர்கள். RPIC தீபக் ஷிகர்பூர் வலதுபக்கத்திலிருந்து நான்காவதாக இருக்கிறார்.

On the racks

Limca Book of Records 2019

Publisher : **Hachette India**
Pages : **440; ₹550**

Discover our country's firsts and foremost in human endeavour, structures, education, defence, government, on science and technology, adventure, business, cinema, the natural world, literature and the arts in this up-to-date edition of India's only comprehensive book of records.

With reader-friendly infographics, charts and tables, the *Limca Book of Records 2019* includes more than 1,000 images and all the diverse and riveting absolutes — such as records for the longest, tallest, fastest and heaviest — that have endured across time.

Be amazed. Be informed. Be proud.

Most of all, be inspired!



Living the Bhagavad Gita: Ancient Wisdom for Modern Life

Author : **Braja Sorensen**
Publisher : **Hachette India**
Pages : **196; ₹299**

In this book, Braja Sorensen combines the teachings of Krishna and the sage Patanjali to emphasise the real purpose of yoga: it is a way of life, and its goal is the union with the Divine.

She presents a lucid analysis of the multiple meanings of the word 'yoga' that Krishna teaches in the *Bhagavad Gita*. The yogic journey is a process of training and refining the mind, senses and emotions, until the very consciousness is altered and ready to meet the Divine. Patanjali explains the link between the body, mind and soul, and how the practice of yoga affects each.

This book brings to you the life-changing qualities that Krishna taught, and shows you how the *Bhagavad Gita* is the finest guide to understanding life, love and relationships, the body, mind and senses, and the nature of the soul.



Designing Destiny - The Heartfulness Way

Author : **Kamlesh Patel**
Publisher : **Westland Publication**
Pages : **219; ₹299**

What does destiny mean in the course of our lives?

How can we design our own destiny?

These are questions that some of the world's greatest philosophers have asked since time immemorial. In this ground-breaking book, Kamlesh Patel addresses such questions with simple solutions and practical wisdom. He elaborates on the subject of consciousness, the role of evolution, and explains what happens to us at the time of birth and death — and how we can act in those pivotal moments when life takes a turn.

He inspires us to believe in ourselves and find a way forward, no matter what the challenge, and look at even the most difficult situation as an opportunity to grow. He says that with a few simple practices, a heart full of enthusiasm and an expanded consciousness, we can all discover our potential and the destiny we were born to fulfil.

Compiled by Kiran Zehra
Designed by Krishnapratheesh S

கோடைச் சுற்றுலாவும் புத்தகங்களும்

LBW

TCA ஸ்ரீநிவாச ராகவன்

கோடை நெருங்கி விட்டது. நம்மில் பலபேர் சுற்றுலா குறித்து திட்டமிட ஆரம்பித்தி ருப்பார்கள். எந்த ஊருக்குப் போகலாம், மலிவான கட்டணத்தில் பயணம் செய்ய எப்போது முன் பதிவு செய்யலாம் என்றெல்லாம் யோசிப்பார்கள். யாரும் எந்தப் புத்தகத்தையெல்லாம் கையில் எடுத்துக் கொள்ளலாம் என்று யோசிக்க மாட்டார்கள்.

நம்பினால் நம்புங்கள், அப்படித் திட்டமிடாவிட்டால், விபரீதம் என்பது எனக்கு 40 ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்வின் அடிப்படையில் கூறுகிறேன். அப்போது ஒடிசாவில் சிகரெட் தீர்ந்து போய் கிடைக்காமல் அவஸ்தைப்பட்டேன். அந்தக் காலத்தில் அதிகம் கிடைக்கவில்லை. அந்தத் துயரத்துக்கு அளவே கிடையாது. நீங்களும் புத்தகம் எடுத்துக் கொள்ளாமல் சுற்றுலா சென்றால் அதே துயரம்தான் நேரும். அதை விட நீங்கள் போரடிப்பதாகப் புலம்பும்போது, மனைவி, சும்மா இருங்க, இல்லைன்னா டிவி பாருங்க. என்று சொல்லும்போது தாளமுடியாது. தொலைக்காட்சியா? அதில் கிரிக்கெட் போட்டி காட்டப்படாவிட்டால், பேசாமல் பல் டாக்டரிடம் செல்வதே உசிதம் என்று கூட தோன்றும்.

புத்தகத்தைத் தேர்ந்தெடுப்பது வாழ்க்கையில் மிகவும் கஷ்டமான காரியம். மோசமான புத்தகத்தை எடுத்துச் சென்றால், பாடவதியாவது மட்டுமல்ல, தேவையில்லாமல் சுமையும் கூட. புத்தகம் எப்படி இருந்தாலும், யாருக்கும் அதைக் குப்பைத் தொட்டியில் போடவும் மனசு வராது. இப்படித்தான் சிகரெட்டுக்கு நான் அவஸ்தைப் பட்டதை அடுத்து, பயணத்தின்போது புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து வைத்துக் கொள்வேன்.

அரசியல் புத்தகம் அல்லது துப்பறியும் நாவல் என்று புத்தகங்கள் இருக்கும். பயணத்துக்கு முன்பே புத்தகங்களில் இது நமக்குப் பிடிக்கிற மாதிரி இருக்குமா என்பதற்காக ஒரு சில பக்கங்களைப் படிப்பபேன்.

அரசியல் சூழ்ச்சிகளும், திருப்பங்களும் நிறைந்த இராமாயணம், மகாபாரதம் போன்ற இந்திய இதிகாசங்களைப் படைத்த இந்தியாவில் அரசியல் புத்தகங்களும், துப்பறியும் கதைகளையும் எழுது வோர் மிகக் குறைவு. இந்திய புலனாய்வுச் சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் எழுதிய நூல்களும், பல அரசியல் தலைவர்களின் வரலாற்று நூல்களும் தான் கிடைக்கின்றன. சில நல்ல எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் துப்பறியும் திகில் புத்தகங் களை எழுதுவதில்லை. சுவாரஸ்யம் அதிகம் இல்லாவிட்டாலும் நிறைய தகவல்களை எழுதியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களின் 30 புத்தகங் களை நான் படித்திருக்கிறேன். அவர்கள் எல்லாம் ராணுவமும் IAS அதிகாரிகளும் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை என்று நினைக்கிறார்கள். இதற்கு எதிர்க் கருத்தும் உண்டு. சிவில் அதிகாரிகளோ ஆய்வு - பகுப்புப் பிரிவை (RAW), இந்தியப் புலனாய்வுப் பிரிவு (IB) ஆகியவற்றை சேர்ந்தவர்கள் மோசமான எழுத்தாளர் கள் இல்லை என்றாலும் பிழை செய்பவர்கள் என்று கருதுகிறார்கள்.

1977ம் ஆண்டு தேர்தல் ஆட்சி யாளர்களுக்குச் சாதகமாக இருக்கும் என்று இந்தியப் புலனாய்வுப் பிரிவு (IB) கூறியது. ஆனால், நேர் மாறாகி விட்டது. 2008ம் ஆண்டு மும்பையில் நவம்பர் 26ம் தேதி நடந்த பயங்கரவாத தாக்குதல் குறித்து முன்கூட்டியே தகவல் தெரிவிக்க ஆய்வு-பகுப்புப் பிரிவு (RAW) தவறி விட்டது. அவர்கள் துல்லியமாகக் கண்டறிந்ததை யாரும் நினைப்பதில்லை. எப்போதாவது பிழையான தகவலைக் கூறுவது மட்டுமே எல்லோரது கண்ணுக்கும் தெரியும்.

ஒரு பெரிய தோல்வி, அதற்கு இணையான 99 வெற்றிகளை மூடி மறைத்துவிடும். நியூயார்க் இரட்டைக் கட்டடம் தகர்க்கப்பட்டது, மும்பை பயங்கரவாத தாக்குதல் ஆகியவை இதற்குச் சான்று. அப்படி நம்பகத்தன்மை இல்லாததற்காக அவர்கள் விலை கொடுக்க வேண்டி யுள்ளது. குறிப்பாக, நாட்டுக்கு வேலை செய்ய வேண்டுமா அல்லது நாட்டை ஆள்பவர்களுக்கு வேலை செய்ய வேண்டுமா என்ற வேறுபாட்டைப் புரிந்து கொள்ள முடியாதபோதுதான் இப்படி நடக்கிறது.

எனினும், இது மாதிரியான புத்தகங்கள் பிடிக்காவிட்டால், லில்லியன் ஜாகன் ப்ரவுன் (Lillian Jackson Braun) என்ற பெண் எழுத்தாளரின் புத்தகங்களைப் பரிந்துரை செய்கிறேன். அவர் எழுதிய 29 கதைகளும் மர்மக் கதைகள். அவற்றிலும் கோக் கோ (Koko), யம்-யம் (Yum Yum) என்ற இரு பூனைகள் வரும். எல்லா நூல்களின் தலைப்புகளிலும் பூனை குறிப்பிடப்பட்டிருக்கும். அவரது முதல் புத்தகத்தின் தலைப்பே பின்னோக்கிப் படிக்கும் பூனை (The Cat Who Could Read Backwards). இன்னொரு புத்தகத்தின் தலைப்பு டேனிஷ் நாற்காலியைத் தின்ற பூனை (The Cat Who Ate Danish Modern). இப்படித் தலைப்புகள் சுவையாக இருக்கும்.

லில்லியின் நாவல்களில் பூனை கள் எதுவும் கொலைகளைத் துப்பறிவ தில்லை. அவற்றின் உரிமையாளர்தான் அதைச் செய்வார். புத்தகத்தைப் படிக்கும் போது, பூனைகள்தான் கொலை மர்மத்தைக் கண்டறியும் என்பது போல சுவாரஸ்ய மாக எழுதப்பட்டிருக்கும். லில்லியன் 2011ம் ஆண்டில் 97 வயதில் இறந்தார். அதற்குப் பிறகும் அவரது நாவல்கள் பல லட்சம் விற்பனை ஆயின.■

‘திஷா’ தருணங்கள்

RNT *நிர்வாக குழு உறுப்பினர்கள்* 2019–20: *(இடது புறத்திலிருந்து)* DGEs *அஜய் அகர்வால்* (D 3291), *நயன் பாடில்* (D 3160), *தீரன் தத்தா* (D 3040), *தீபக் குப்தா* (D 3012) *மற்றும் ராஜேந்திர* M *பாம்ரே* (D 3030).

RID C *பாஸ்கருடன்* PDGs Dr N *சுப்பிரமணியன்* (D 3011), *பாசுதேவ் கோல்யன்* (D 3291), *ரமேஷ் அகர்வால்* (D 3054) *மற்றும் வினோத் பாட்டியா* (D 3053) *‘திஷா’ கருத்தரங்கில்.*

(இடதுபுறத்திலிருந்து) TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி,* RIDE *கமல் சங்வி, சோனல்,* RIDE *பரத் பாண்டியா,* DGEs *அனிஷ் ஷா மற்றும் பினா தேசாய் ‘திஷா’ அந்தாக்ஷரி நிகழ்ச்சியில்.*

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

Regn. No. RNP – TN/CCN/677/2019–2021
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35
Rotary News Tamil published on 1st of every month

ADVT

Rotary District 3012 | BE THE INSPIRATION R.I. THEME 2018-19

DR. SUBHASH JAIN AKS
District Governor 2018-19

District 3011 & 3012
Reception Dinner in Honour of The Rotary Foundation
TRUSTEE CHAIR PRIP Ron D. Burton & Jetta
Friday, 8th March 2019 • Taj Palace, New Delhi

Rotary District 3012 'Holi Milan' Rangoli
Sunday, 17th March 2019 | N.R. Grand, NH-24, Wave City, Ghaziabad (U.P.)



ROTARY PUBLIC IMAGE